வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

தரம் தெரிந்தவர்கள் பாவிப்பது

மில்க்  வைற்


நீல சோப்

புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1997 மாசி திங்கள் 16-ம் நாள் (27—2—1966) ஞாயிற்றுக்கிழமை துலக 5 | இதழ் 40

# யாழ். மேயரை வீழ்த்தச் சதி

## கல்வித் திணைக்களத்தில் இரு அதிகாரிகள் ஆதிக்கம்

கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் இரு உயர்தர அதிகாரிகளின் அண்மைக்கால நடவடிக்கைகள் கல்வி அமைச்சரின் கையையே கட்டுப் படுத்துகின்ற அளவிற்கு மோசமாகி விட்டதாக கல்வி அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த இரு அதிகாரிகளும் முந்திய அரசாங்கத்தின் காலத்திலும் "செல்லப்பிள்ளை"களாகவே இருந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் பழைய அரசாங்கத்தின் கொள்கைகளை அப்படியே இன்றும் அமுல் நடாத்த முயற்சிக்கிறார்களாம். தமிழ் எதிர்ப்பு மனப்பான்மை இவர்கள் இருவரினதும் செயலினால் கல்வித் திணைக்களத்தில் மலிந்திருப்பதாக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே பகிரங்கமாகக் குறைப்பட்டிருக்கிறார்களாம்.

முந்திய அரசாங்கத்தின் காலத்தில் திணைக்களங்கள் அனைத்தும் பிரச்சினைகள் மலிந்த நிலையில் இருந்து வந்தது வாசகர்கள் அறிந்ததே. தேசிய அரசாங்கம் பதவியேற்றபின்னர் பெரும்பாலான திணைக்களங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன. பல தீவிர சிங்களவாதிகள் பொறுப்பான இடங்களிலிருந்து மாற்றப்பட்டார்கள். இன்னும் பலர் பொது மக்களுடன் தொடர்புள்ள பகுதிகளிலிருந்து மாற்றப்பட்டு முழுக்க முழுக்க காரியாலய வேலைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டார்கள். இலங்கை மத்திய வங்கியும், கல்வித் திணைக்களமும் இற்றைவரை உரிய முறையில் புனரமைப்புச் செய்யப்படாது இருக்கின்றன. பத்திரிகைகளினதும் பொது மக்களினதும் தொடர்ச்சியான கண்டனத்திற்கு இலக்கான காரணத்தினால் மத்தியவங்கியில் இப்பொழுது சில திருப்திகரமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. மேலும் பல மாற்றங்களை மத்திய வங்கி எதிர்நோக்கி நிற்பதாக நிதி அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

கல்வித் திணைக்களம் இன்று முழுமையான புனரமைப்பை எதிர்நோக்கி நிற்கிறது. கல்வி அமைச்சர் இதற்கான பல முயற்சிகளை அவ்வப் போது எடுத்து வந்த போதிலும் இரு உயர்தர அதிகாரிகள் முட்டுக் கட்டை போட்டு வருவதாக கல்வி அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இந்த இரு அதிகாரிகளும் தமிழ்ப் பிரதிநிதிகள் எதைக் கேட்டாலும் அது 'வெள்ளை அறிக்கை'யில் இடம் பெறும் அதுவரை பொறுத்திருங்கள் என்று கூறிவருகிறார்களாம். பழைய அரசாங்கத்தின் கொள்கையை எந்த அளவுக்காவது தேசிய அரசாங்கத்தின் மீது திணிக்கமுடியுமோ அந்த அளவிற்குத் திணித்து வருகிறார்களாம். இவர்களது நடவடிக்கையால் இன்று கல்வித் திணைக்களம் தீவிர சிங்கள வாதிகளின் வேட்டைக்காடாக மாறிவருகிறதாம். இவர்களில் ஒருவர் பௌத்த மத தத்துவத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றிருப்பதை வைத்துக் கொண்டு, கல்வி அமைச்சர் மீதே ஒருவகைச் சர்வாதிகாரத்தைக் காட்ட சில சமயங்களில் முற்படுகிறாராம். இதை மனதில் கொண்டே கடந்தவாரம் கல்வி அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற அதிகாரிகள் மாநாட்டில் 'ஒவ்வொரு அதிகாரியும் தனது கடமையை உணர்ந்து பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்' என்று கல்வி அமைச்சர் கூறினார் எனத் தெரிகிறது.

இந்த இரு அதிகாரிகளையும் கல்வி அமைச்சர் வேறு இடங்களுக்கு மாற்ற முற்பட்ட சமயத்தில் வெளியார் நெருக்கடி கல்வி அமைச்சருக்கு ஏற்படுவதாகவும் தெரிகிறது. இந்த இரு அதிகாரிகளையும் கல்வித் திணைக்களத்திலிருந்து மாற்றுதவரையில் சிறுபான்மையினர் எதையும் கல்வி அமைச்சிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்றும், தொடர்ந்து தமிழ் எதிர்ப்பு உணர்வு கல்வித் திணைக்களத்தில் நிலவும் என்றும் ஒரு ஆசிரியர் நமது நிருபரிடம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

## பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பதவி

### வித்தியாதிபதி விண்ணப்பம் கோரியுள்ளார்

அரசினர் பாடசாலைகளிலுள்ள உதவி ஆசிரியர்களுக்கான பதவிகளுக்கு பட்டதாரிகளிடமிருந்து வித்தியாதிபதி விண்ணப்பம் கோரியுள்ளார். இப்பதவிக்கான விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 12ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படுமென்று அரசாங்க வர்த்தமானி விளம்பரம் ஒன்று கூறுகிறது.

அரசினர் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் பற்றுக் குறையைத் தொடர்ந்து வித்தியாதிபதி பட்டதாரிகளிடமிருந்து உதவி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரியுள்ளார். இதற்கான அறிவித்தல் பெப்புரவரி 17ம் திகதிய வர்த்தமானியின் இரண்டாம் பகுதியில், 56, 57ம் பக்கங்களில் வெளியாகியுள்ளது.

புவியியல், வரலாறு, வடமொழி, பொருளியல், விவசாயம், கணக்கியல் ஆகியவற்றில் எதையேனும் தமது பட்டப் பரீட்சைக்கு ஒரு பாடமாக எடுத்திருக்கும் பட்டதாரிகளுக்கு முதன்மை அளிக்கப்படுமென்றும் அவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ளது இது பற்றிய வர்த்தமானி விளம்பரம் 5ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## 3 கோஷ்டிகளின் திரைமறைவு முயற்சி

யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். நாகராசா அவர்களை பதவியிலிருந்து இறக்குவதற்கு முக்கூட்டு முயற்சி ஒன்று திரை மறைவில் உருவாகிக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. இம் முயற்சியில் பொ. கட்சியினருடன் துரையப்பா குழுவினரும், சமசமாசக் கட்சியினரும் ஈடுபட்டுள்ளார்களாம்.

யாழ்ப்பாண மேயர் திரு. திரு நாகராசா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் திரைமறைவில் உருவாகிக்கொண்டிருப்பதாக நமது யாழ்ப்பாண நிருபர் அறிவித்துள்ளார். இதற்கான ஆலோசனைக் கூட்டங்களை நடத்தும் முயற்சியில் டாக்டர் என். எம். மின் சமசமாசக் கட்சியைச் சேர்ந்த வட பகுதித் தலைவர்கள் இருவர் (வழக்கறிஞர்கள்) தீவிரமாக ஈடுபட்டுள்ளார்களாம்.

திரு. நாகராசா மேயராவதை ஆதரித்த ஒரு மாநகர சபை உறுப்பினர், தமது பதவியை இராஜினாமாச் செய்ய முடிவு செய்திருப்பதை தொடர்ந்தே இம் முயற்சி தீவிரமாக்கப்பட்டுள்ளதாம். பொ. கட்சியின் ஆதரவாளர்களான மாநகர சபை உறுப்பினர்களும், திரு. அல்பிரட் துரையப்பா குழுவினரும் இம் முயற்சிக்கு முழு ஆதரவையும் கொடுத்திருக்கிறார்களாம்.

இரு பகுதியிலும் உறுப்பினர்கள் பலம் சமமாக இருப்பதால் மேயர் குழுவைச் சேர்ந்த ஒருவரைத் தங்கள் வலைக்குள் போட்டுக் கொள்ள முக்கூட்டணியினர் முயன்றுவருகிறார்களாம். சமசமாசக் கட்சியினர் திரு நாகராசாவை பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கு இத்தனை தீவிர முயற்சியில் ஈடுபட்டிருப்பமைக்குக் காரணம் அவர் அண்மையில் ச. ச. கட்சியின் வகுப்புவாதப்போக்கைக் கண்டித்து அறிக்கை விட்டதே என்று தெரிகிறது. எதிர்க் கட்சியினர் மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தால் அவர்கள் தோல்வியடைவதுடன் பொது மக்களின் ஆதரவையும் நிச்சயம் இழப்பார்கள் என்று நமது நிருபர் தெரிவிக்கின்றார்.

### ஏன் இந்த முயற்சி?

மொழி வழித் தொழிற் சங்கங்களை தனியார்துறையிலும், பொதுத் துறையிலும் பலம் குன்றச் செய்யும் ஒரு புது முயற்சியில் பொன்னம்பலம் கட்சியினர் துணிந்திறங்கியிருக்கிறார்களாம். தேசிய அரசாங்கத்தின் பெயரை வைத்துக் கொண்டு சிலகாலம் தொழிற் சங்கங்களை ஆரம்பித்து, அதன் மூலம் தங்கள் முயற்சியில் வெற்றி பெற இவர்கள் துணிந்துள்ளார்கள் என்று தெரிகிறது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள இரண்டொரு தொழிற் சங்கங்கள் இதற்கு நல்ல உதாரணம் என்று மொழி வழித் தொழிற் சங்கத் தலைவர் ஒருவர் கூறியுள்ளார். கொழும்பில் எழுதுவினைஞர் சங்கத்தை பிளவுபடுத்த எடுத்த முயற்சி தோல்வியுற்றது போன்று யாழ்ப்பாண முயற்சியும் தோல்வியுறுவது நிச்சயம் என்று இவர் மேலும் கூறியுள்ளார்.

சர்வர் சுந்தரம்

சினிமாப் போட்டி

6-3-66 இதழில் வெளியாகும்

குறிப்பு: படம் பார்க்கும் ரசிகர்கள் தங்கள் டிக்கட் அடிக் கட்டைகளைக் கவனமாக வைத்திருக்கவும்.



# சடங்கு

எஸ். பொன்னுத்துரை

செந்தில்நாதன் அயர்ந்தே தூங்கிவிட்டார். ஆனால், வியர்வைக் காட்டிலே நனைந்து போயிருந்த உடம்பைத் துவாயால் துடைத்து, மறுபடியும் தூங்க முயன்ற பொழுது தூக்கம் வர மறுத்துவிட்டது. கைகளையும் கால்களையும் அப்படியும் இப்படியும் போட்டு 'உலத்தி'க் கொண்டு, கண்களை மூடிப் படுப்பதிலும் ஒருவித சுகம் இருக்கிறது. அதனை அவர் சுகிக்கலானார்.

'இஞ்சேருங்கோ, இரணியன் சோறு தின்னுற நேரமாப் போச்சப்பா...எழும்புங்கோவன்' என்று கூறிக்கொண்டே அன்னலட்சுமி வந்தாள். அவள் நடந்து வரும் காலடி ஓசை அவருடைய செவிகளில் நன்றாக விழுந்தது.

'எழும்பாமல் கிடப்பம். வந்து தொட்டு எழுப்பட்டும்.'-அவளுடைய கைகளாவது தன்னுடைய மேனியைத் தழுவட்டும் என்று எழுந்த ஆசைத்துகள் ஒன்றினால் படுப்பதாகவே பாசாங்கு செய்தார்.

அவர் நினைத்தது போல அவள் அவரை அசைத்தாள். அவள் குனிந்து நின்று எழுப்பியதால் அவளுடைய தாவணிகூட அவர் மீது விழுந்தது. அதன் தழுவல் அவருக்குப் புது உணர்ச்சியை அளித்தது. அவள் குனிந்து நின்று எழுப்பியதாலும், தாவணி தளர்ந்திருந்ததினாலும்......அவர் கண்கள் அதிலேயே நிலைக்கின்றன. நேற்று அவர் 'றீகல்'லில் பார்த்த குறுந்தசைக் குவட்டு மார்பழகிகளுடைய உருவங்கள் மின்னலிட்டு மறைகின்றன.

அவர் அப்படியே தன் மார்புகளைக் குறிப்பாகப் பார்ப்பதை அன்னலட்சுமி கவனித்துவிடுகிறாள். 'பாவம் வந்து மூன்று மாசமல்லோ?' என்ற உணர்ச்சி ஒருபுறம். 'ஐந்து பிள்ளைகளைப் பெற்றும் அவரைக் கவரக்கூடிய கவர்ச்சி இருக்கிறது' என்ற பெருமிதம் மறுபுறம், 'இப்பிடி நிக்கிறதிலை' ஒரு சுகம் இருக்கிறது என்ற எண்ணத்தை ஊட்டுகிறது. இவ்வுணர்ச்சிகள் கணநேர ஆயுசு உடையனவே.

அப்படிக் குனிந்து நின்றபடியே, 'ஒருநாளும் பாக்காததைப் போல பூந்து பிடிச்சு விடுப்புப் பாக்கிறியள்...' என்றாள்.

'கொம்மா இல்லையே?'

'அவ கடைக்குப் போனவ. வாற நேரமாப்போச்சு.'

'உனக்குத் தெரியாதே, உதை விடுப்புப் பாக்கத்தான் வந்தனான் எண்டு.'—தனிமையில் இருக்கும் பொழுது அவர்கள் பச்சையாகப் பேசுபவர்கள்; பச்சையாகப் பழகுபவர்களென்பதற்கு ஐந்து புத்திரப் பாக்கியங்கள் சான்று பகருகின்றன.

'மூத்தவள் விளக்குகளை மினுக்கிறாள். வந்திடுவாள், பிள்ளையள் பாத்திடப்போகுதுகள். சேட்டையை விட்டிட்டு எழும்புங்கோவன்.'

'ஒருக்காக் கையைப் புடிச்சு எழுப்பிவிடுமன்.'

'ஐஞ்சு பிள்ளையளுக்கு அப்பனாய்ப் போச்சுது. இப்பதான் இந்தப் பிள்ளை குதித்து விளையாடுது' என்று செல்லமாகக் கண்டித்துக்கொண்டு, அவர் தோள்களை ஆதரவாகத் தூக்கி எழுப்பிவிடுகிறாள். அப்பொழுது அவருடைய தலைக்கு அவள் தனபாரங்கள் தசை ஒத்தணம் கொடுக்க, சுகானுபவத்துடன் எழும்பி நிற்கிறார்.

'பிள்ளை...பிள்ளை, அன்னலட்சுமி! அவர் எழும்பிட்டாரே?...கடையிலை சுணங்கிப் போச்சு இந்தா சீனிச்சரை...உலையிலை தண்ணி வைச்சனியோ?..' என்று கேட்டபடியே படலையைத் திறந்துகொண்டு செல்லப் பாக்கிய ஆச்சி வந்தாள்.

'இப்பதானெனை எழும்பிவிட்டனான்... உலையிலை தண்ணி மலமலத்துக் கொதிக்குது. தேத்தண்ணி போடலாம்' என்று கூறிக்கொண்டு அன்னலட்சுமி அடுக்களைக்குள் நுழைந்தாள்.

அன்னலட்சுமி தேநீர் கலந்துகொண்டு வருவதற்கிடையில், செந்தில்நாதன் கைகால் முகம் கழுவி, கடற்கரைக்கு செல்வதற்கு உடுத்திக்கொண்டு ஈச்சேரில் வந்தமர்ந்தார். அப்பொழுது மனைவி தேநீரைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு விளக்குகளை ஏற்றி அந்தந்த இடங்களிலே வைக்கின்றாள்.

மாலினி மேஜையில் அமர்ந்து பாடப் புத்தகங்களை விரித்து வாசிக்கிறாள். சாந்தினியும் ஸ்ரீகாந்தனும் 'முழுசிக்கொண்டு நிற்கிறார்கள். கடைக்குட்டி ஜெயகாந்தன் தடுக்கிலே நல்ல நித்திரை. ரோகினி தாயின் முன்றானையைப் பிடித்தபடி குறுநடை பயின்று அலைகிறாள்.

'என்ன உதிலை நிண்டு ரெண்டு பேரும் முழுசுறியள்? சாந்தினி! புத்தகத்தை எடுத்துக்கொண்டு கொக்காவோடை படியன். ஸ்ரீ! நீர் புத்தகத்தை எடுத்துக்கொண்டு இஞ்சை வாரும்' என்று அன்னலட்சுமி கத்துகிறாள். அவள் பிள்ளைகளுடன் வலு கண்டிப்பு. சத்தத்தாலேயே அவர்களை அடக்கி விடுவாள்.

'இல்லை...தம்பி ஐயாவோடை கடக்கரைக்குப் போகப் போறானம்...' என்று விக்கித் தக்கி சாந்தினி பதில் கூறுகிறாள்.

'என்னடீ...'-அன்னலட்சுமியின் சிற்றம்.

'ஏன் புள்ளை சீறுகிறாய்?... ஆசை அருமையா வந்திருக்கிற தகப்பனோடை அளைஞ்சு விளையாட ஆசைப் படாதே? ...நாளைக்கும் லீவுதானே?... நெடுகிலும் கண்டறியாத படிப்பே?... விருத்தறிஞ்சால் அதுகள் தேர்போலை படிக்குங்கள்' என்று செல்லப் பாக்கிய ஆச்சி அடுக்களையிலிருந்து கூறுகிறாள்.

'இதற்கு அப்பீல்' கிடையாது என்பதைப் பேரப் பிள்ளைகள் அறிவார்கள். நல்ல சட்டைகளைப்போட்டு, அவர்களைப் புறப்படுத்தி வைக்கிறாள் அன்னலட்சுமி.

தேநீரைக் குடித்து முடிக்கிறார் செந்தில்நாதன். தேநீர் சுவையாக இருக்கிறது. 'கொழும்பிலை கிடைக்கிற 'சக்கரின்' கலந்த தேத்தண்ணியளை போலையே? அறுவாங்கடை தேத்தண்ணியை மூண்டு வருஷம் தொடர்ந்து குடிச்சுக்கொண்டு வந்தால் நீரிழிவு வியாதி வந்திடும்.'

செந்தில்நாதன் சாந்தினியின் ஒரு கையின் விரல்களை பிடிக்க, ஸ்ரீகாந்தன் மற்றைக் கையைப் பிடிக்கக் கடற்கரையை நோக்கி நடக்கின்றார்.

'கடைத் தெருவாலை போவம் ஐயா' என்று சாந்தினி ஆலோசனை கூறுகின்றாள்.

'காருகளும் பஸ்ஸுகளும் குறுக்கே மறுக்கே ஓடும். இப்ப இதாலை போவம். வேணுமெண்டால் வரேக்கிள்ளை கடைத் தெருவாலை வருவம். அப்ப சனமும் கொஞ்சம் அடைஞ்சிடும்.' என்று அவர் சமாதானம் கூறுகின்றார்.

'புள்ளையள் இனிப்புக் கினிப்பு வாங்கத்தான் கடைத் தெருவாலை வரச் சொல்லி ஆசைப்படுகுதுகள். ஏன் மத்தியானம் திண்டது போதாதே?...பாவம், அதுகள் குழந்தையள்தானே? காசின்ரை அருமை அதுகளுக்கு எப்பிடித் தெரியும்? எப்பவுமே'... இப்பிடி ஆசை அருமையா வெளியாலை வந்தால்தானே?... ஓமோம் வரேக்கிள்ளை பத்து இருவே சேத்துக்கு ஏதேன் கடைத் தீன் வேண்டிக் குடுப்பம்' என்று மனந் தெளிகின்றார்.

சமாதானம் அடைந்த மனதை இன்னொரு நினைவுந் தொற்றிக் கொள்ளுகின்றது.

'கார் பஸ்ஸைவிட சனமல்லோ பெரிய தொந்தரவு. தங்கடை பொட்டுக் கேடுகளை மூடி வைச்சுப் போட்டு, மற்றவங்களைப் பற்றி விடுப்புப் பேசாட்டி இந்தச் சனங்களுக்குத் தலை வெடிச்சுப் போடும்...அவை கேக்கிற தமிழும், குறள் பாசைகளும்...'-சமூகத்தில் ஓர் அங்கமாகவும், அதே சமயம் அவர்களிலிருந்து வேறுபட்ட, வேலியாற் பிரிக்கப் பட்ட தனி அங்கமாகவும்—ஓடும் புளியம்பழமும் போல—வாழ்ந்து பழகிய மனம் இப்படிக் குதியாட்டமிடுகின்றது.

கடைத் தெருவில், 'சாயந்திர வேளையில நிக்கிற தெரிஞ்சவங்கள் எல்லாரும் செலவுத் தானம் வைக்கிற சிநேகிதர் என்பது அவருடைய அபிப்பிராயம் 'என்ன செந்தி' ஆருவது பார்ஸல் எப்ப? அதைத்தான் சரிக்கட்ட வந்தனியோ?' ஏன் யாராவது ஒரு வம்பன்' பேச்சுவாக்கிலே கேட்டுவிடக்கூடும். அப்படிக் கேட்டால், இவ்வளவு குடும்ப வாழ்க்கைக்குப் பிறகும் செந்தில்நாதனிடம் லஜ்ஜைதான் பிறக்கும். உத்தலலாம் றோட்டுக் கரையளிலை நிண்டு பேசிற பேச்சே?'

ஆலடிச் சந்தியால் திரும்பி நடந்த செந்தில்நாதன் கடற்கரைக்கு வந்துவிடுகின்றார்.

தபாற் கந்தோருக்கு முன்னுள்ள 'லைற்' கம்பத்தைச் சுற்றிச் சிறுவர் கூட்டம் ஏதோ விளையாடிக்கொண்டிருக்கின்றது. எல்லா வகை விளையாட்டுகளும் மாறி மாறி நடக்கின்றன. எந்த வித வித விளையாட்டுச் சட்ட திட்டங்களுக்குள்ளும் அமையாமல், விளையாட்டுகளின் மையமாக ஒரு கால் பந்தும் உருட்டப்படுகின்றது.

'டேய் பொடியள், புளுதியைக் கிளப்பாதையுங்கோடா' என்று அதட்டும் ஏரம்பமூர்த்தி வாத்தியார் பென்சன்காரர் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்றார். அவர்களுடைய அரசியல் மகாநாடு தான் தவறாது கூடியும் ஒருவித முடிவுக்கும் அவர்கள் வந்ததில்லை. லோக்கு போட்' எலக்ஷனிலை இரண்டு தடவைகள் போட்டியிட்டு முகத்திலே கரி பூசப்பட்ட நேசராசாவின் குரல் தான் எப்பவும் உயர்ந்து கேட்கும். இடதுசாரி இயக்கம், பொருளாதாரப் பிரச்சினைகள், இன ஒற்றுமைக்கான வழி வகைகள் என்று தொண்டைத் தண்ணி வத்தக் கதைப்பார். இவர் பேசும் எல்லா நியாயங்களுக்கும் 'வாழைப் பழத்திலை ஊசி ஏத்தினப் போலை' எதிர் நியாயங்களைச் சொல்லத் தில்லைநாதன் மாஸ்டர் பின் நிற்பதில்லை. தில்லைநாதன் மாஸ்டர் இருபத்தைந்து வருடங்களாக ஒரே பாடசாலையிற் படிப்பித்தவர். 'ஊரோடு' சீவித்தவர். ஆனையிறவுக்குத் தெற்கே இரண்டு முறைகளைத் தவிர—அதுவும் ஒரு தடவை கதிர்காமத்திற்கு நேர்த்திக்கடன் செலுத்தச் சென்றது—போனது கிடையாது. எனவே 'உலக அனுபவம்' நிறையவுள்ள மனிதரென்று ஊராருடைய மதிப்பைப் பெற்றிருக்கிறார். யப்பான் சண்டையெல்லாம் சிங்கப்பூரிலிருந்து, ஐந்து பிள்ளைகளுடன் சமாளித்து ஊர் திரும்பிய சோதியாருக்குக் கூட மாஸ்டருக்குள்ள மதிப்புக் கிடைத்ததில்லை.

சந்தியிலே திரும்பிய செந்தில்நாதன் பென்சனியர் கூட்டத்தைக் கண்டு நேரே மணலில்இறங்காமல், 'றோட்டாலேயே கொஞ்சத் தூரம் போவம்' என்று கிழக்கே நோக்கி நடக்கிறார்.

ஓமோம். உவைக்கென்ன? மாதம் முடியப் பொத்தியடிச்சாப்போலை' பென்சன் வருகுது பேந்தென்ன, ஒரு சதத்துக்குப் பிரயோசனமில்லாக் கதை தானே கதைப்பினம்? தெரியாது போலை எங்களை ஒரு கேள்வி கேட்டுப் போட்டு, பேந்து எங்களை மடக்கி மொக்கேனப் படுத்திறதிலை இவையளுக்கு ஒரு சுதி' என்று அந்தத் திருக்கூட்டத்தைப் பற்றிச் செந்தில்நாதன் நினைத்துக் கொள்ளுகிறார்.

ஒருவித 'சத்தம் சலார்' இல்லாமல் கடுதாசிவிளையாடிக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம், மேற்கேயுள்ள கட்டுமரங்களுக்கிடையே அவர்கள் கூடியிருப்பதையும் கவனிக்க அவர் கண்கள் தவறவில்லை.

'நவரத்தினசாமி நீச்சல் குளம்' என்று கல்நாட்டப் பட்டிருக்கும் இடத்திலே சில இளவட்டங்கள் ஆங்கிலமுந் தமிழும் கலந்த புதிய தொரு மணிப்பிரவாள நடையிலே கதைத்துக் கொட்டுகிறார்கள். இந்த உலகத்திற்கும் தங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாதது போல பேராதனை என்னும் தனி உலகைப் பற்றியே அவர்களுடைய உரையாடல் உருட்டப்படுகின்றது.

'உவையள்தான் யூனிவேர்ஸிட்டியிலை புடுங்கி அடுக்கிறவை, இப்ப லீவு கீவோ? இல்லை, 'ஸ்ரைக்' செய்து போட்டுவந்திருக்கினமோ?.. உவங்களுக்கு அரசாங்கம் சில வழிக்கிறதெல்லாம் வெறும் கரி' எனச் செந்தில் நாதன் நினைக்துக் கொள்ளுகின்றார். இப்ப அவருக்குப் பல்கலைக்கழக மாணவர்மீது பாதக அபிப்பிராயம் ஏற்பட்டிருப்பதற்கு,ஒரு தடவை மாணவர்கள் ஏறிவந்த ரயிலில் அவரும் பிரயாணஞ் செய்ய நேர்ந்து, அவர்களுடைய அபாயச் சங்கிலிஇழுப்புத் திருவிளையாடலால்ஐந்து மணித்தியாலம் 'லேட்'டாகப் போய்ச் சேர்ந்தது மட்டுங் காரணமல்ல 'யூனிவேர்ஸிட்டி'க்குப் போக அவர் கூடக் கனவு கண்டிருக்கிறார் அவருக்குக் கிட்டாத 'பாக்கியம் இவர்களுக்குக் கிட்டியிருக்கின்றதே என்கிற 'கோவம்' என்று பச்சையாகச் சொல்லிவிட முடியாது. 'இப்ப எல்லாம், படிப்பு வலு வலு மோசம்...உதுகளுக்கெல்லாம் வெள்ளைக்காரன் தான் சரி எங்கடை பீத்தலங்களுக்கு யூனிவேர்ஸிட்

(14-ம் பக்கம் பார்க்க)

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11




மு. கருணாநிதி.
ஏழாலை மேற்கு.

கே: தமிழ் மொழிச் சட்டத்தினால் தமிழருக்கு எவ்வித நன்மையுமில்லை என்று வடபகுதி காங்கிரஸ் வீரர்கள் முழங்குகின்றனரே?

ப: தமிழ் மொழிச் சட்ட விதிகளால் வட, கிழக்கு மாகாணங்களில் தமிழுக்கு சம அந்தஸ்து கிடைத்து விட்டதென்றும், அங்கு சிங்களம பூரணமாக அமுலில் இல்லாததால், இச்சட்டம் சம அந்தஸ்தைவிட அதிகமான அந்தஸ்தைத் தமிழுக்கு வழங்குகிறதென்றும் எதிர்க்கட்சியினர் முழங்குகின்றார்களே!

கே: தமிழ் மொழிச் சட்டம் உதவாமல் இருந்த போதிலும் தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக அதனை ஆதரித்ததாகக் கூறும் ஜீ. ஜீ. தனது வட்ட மேசை மாநாட்டை தமிழரசுக்கட்சி ஆதரிக்க வேண்டுமென்று கூறுகிறாரே இதைப்பற்றி யாது கூறுகிறீர்?

ப: தமிழ் மொழிச்சட்ட விதிகளை ஆதரித்தற்குஈடாக தனது வட்டமேசையை ஆதரிக்கும்படி கேட்கிறாரோ! பேஷ்! நல்ல பேரம்! வட்டமேசை மாநாடு நடத்தினால், கிடைத்துள்ள மொழியுரிமையும் பறிபோய் விடுமென்பதை ஏன் இவரால் புரிந்து கொள்ள முடியவில்லை!

கே: சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் இலங்கை மக்கள் கஷ்டப்பட்டதினால் பாரதத்தில் திருமதி இந்திரா பதவி ஏற்றதை எம் மக்களில் சிலர் விரும்புகிறாரில்லை இதைப் பற்றி தங்கள் அபிப்பிராயம்?

ப: நேருஜி உயிருடன் இருந்த காலத்தில் திருமதி காந்தி அரசாங்கத்திலும் காங்கிரஸிலும் இடதுசாரிக் கோஷ்டியுடன் தொடர்பு கொண்டிருந்ததால், அவர் இடதுசாரிப் போக்குள்ளவர் என்று கருதுகின்றனர். அதுதான் சிலர் விரும்பாத காரணம்! மொரார்ஜி தேசாய் பிரதமர் பதவி ஏற்றிருந்தால நாட்டிலே உறுதியான தலைமை ஏற்பட்டிருக்கும். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே மிக நெருங்கிய நட்பும் ஏற்பட்டிருக்கும்.

கே: இலங்கையின் தற்போதைய நிலையின்படி தமிழர்கள் சிங்களம் படிக்கலாமா?

ப: அவசரப்படேல்!

கே: என். எம். பெரேராவின் தற்போதைய நிலை என்ன?

ப: திரிசங்குவின் நிலை.

ஃ

காப்பாளர்,
யாழ்ப்பாணம்.

கே: தற்போதுமாற்றியமைக்கவிருக்கும் அரசியலமைப்புப் பற்றி உங்களின் கருத்து?

ப: சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த கதையாகி விடக் கூடாதே என்றுதான் அஞ்சுகிறேன்.

ஃ

சி. வல்லிபுரம்,
கரவெட்டி.

கே: இலங்கைப் பல்கலைக் கழகத்தைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: போதிக்கப்படாத சில பல கலைகளையும் அக்கழக மாணவர் கற்றுள்ளனராம்.

ஃ

பா. கலைச்செல்வம்,
கண்டி.

கே: தமிழ் மொழிச் சட்டம் நிறை வேறிவிட்டதே! திரு. பொன்னம்பலம் தனது வட்ட மேசை மகாநாட்டை கைவிட்டு விட்டாரா? இல்லையா?

ப: அவர் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான்.

கே: மாவட்ட சபையை எதிர்த்த பொன்னம்பலமும் அவர் கட்சியும், மாவட்ட சபை மசோதா பாராளுமன்றத்துக்கு வரும் பொழுதும் எதிர்ப்பார்களா?

ப: வெளியே எதிர்த்தாலும் பாராளுமன்றத்தினுள் எதிர்க்க முடியாது. எதிர்த்தால் அரசாங்கக் கட்சியிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியில் சேர வேண்டும். எதிர்க்கட்சியில் சேர்ந்தால் சிங்கள வகுப்புவாதத்துக்கு தூபம் போட வேண்டுமே!

ஃ

இ. இராசையா,
பலாங்கொடை.

கே: தேசிய அரசாங்கத்திற்குத் தங்கள் ஒத்துழைப்பை நல்கிய தோட்டத் தொழிலாளருக்கு இன்னும் ஒரு விதமானநன்மையும் கிடைக்கவில்லையே!

ப: நாட்டின் நலனைக் கருதியேயன்றி சுயநலனுக்காக ஒத்துழைப்பு அளிக்கவில்லையே!

ஃ

கண்ணன்,
முன்னேஸ்வரம்.

கே; போயா விடுமுறை நாள் நீடிக்குமா? மக்களின் எதிர்ப்பிருக்குமா?

ப: நீடிக்கும். நடை முறையில் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதெனினும், பழக்கமாகி விட்டால் சிக்கல் சிக்கலாகத் தெரியாது முன்னைய வாரவிடுமுறை மிக இலகுவானதாக இருந்தது. ஆங்கிலேயர் எப்பொழுதும் தங்களின் விடுமுறையை இலகுவாக்கிக் கொள்வது வழக்கம்.

ஃ

எம். எஸ். ஆர்.,
வாழைச்சேனை.

கே: திருமணம் மனிதனுக்கு முக்கியமா?

ப: சிற்சில விதிமுறைகளின் அடிப்படையிலேயே மனித சமுதாயம் வளர்கிறது. அத்தகைய விதிமுறைகளில் திருமணமும் ஒன்று மனிதனின வளர்ச்சிக்கு மட்டுமின்றி மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் திருமணம் தேவையே!

ஃ

கதிர். செல்வநாயகம்,
மாதகல் மேற்கு.

கே: பொருட்களைப் பதுக்கி வைத்துப் பொல்லாத முறையில் பணத்தைச் சம்பாதிக்கும் வர்த்தகர்களின் நிலை என்ன வாயிற்று?

ப: நிலையில் மாற்றமில்லை. பொருட்களை மட்டுமின்றி அதனைக் கறுப்புச் சந்தையில் விற்றுத் திரட்டும் பணத்தையுமல்லவா பதுக்கி வைக்கின்றனர்? பதுக்கல் பணக்காரர்களின் கைவந்த கலை! அக்கலையை நாசமாக்க சமுதாய அமைப்பில் மாறுதல் ஏற்பட வேண்டும்.

ஃ

எம். எம். சின்னையா,
நாவலப்பிட்டி.

கே: காதல் என்றால் எனக்கு இனிக்கிறது உங்களுக்கு...?

ப: காதல் என்பது ஓர் இன்பமான உணர்ச்சிதான் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் பெருந்துன்பத்தைக் கொடுக்கும் சக்தியும் அதற்கு உண்டென்பதை மறந்து விடாதீர்.

ஃ

எஸ். ஆர். சிறிதரன்,
மட்டக்களப்பு.

கே: நான் ஒரு பாடகன் எனது இனிய குரலைப் பாதுகாத்துக் கொள்ள என்ன செய்யலாம்?

ப: பந்தாட்டங்களையோ, விழாக்களையோ பார்க்கச் சென்றால் 'ஹா, ஹூ' என்று கத்தாதிருங்கள். குரலை பாதுகாத்துக் கொள்ளலாம்.

ஃ

டி. சண்முகம்,
பதுளை.

கே: 'அபிவிருத்தித் திட்டம்' என்று அடிக்கடி பத்திரிகைகளில் வெளியிடுகிறார்களே, அத் திட்டம் யாது?

ப: பெருந்தொகையான பணத்தைக் கொட்டி குறைந்த நேரத்தில் எதைச் செய்யப்போவதாகக் கூறுகிறார்களோ, அதுதான் அபிவிருத்தித் திட்டம்.

ஃ

மேரி,
கொழும்பு-15.

கே: எங்களின் காதல் கல்லூரித் தோழிகளுக்குத் தெரிந்து, வீட்டுக்கும் அண்டை அயலாருக்கும் தெரிந்துவிட்டது. இதைக் கண்டு எனது காதலர் பயப்படுகிறார். என்ன செய்யலாம்?

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: அதாவது, உங்களின் காதல் அம்பலமாகி விட்டது இச்சோதனையில் தேர்ச்சி பெற்றால்தான் அது காதலாக முடியும். பொதுவாக, அம்பலமான பின்னர் காதல் நீடிப்பது அபூர்வம்.

ஃ

கணேசன்,
திருமலை.

கே: எனக்கு வயது 21. நான் 35 வயதுள்ள ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் எங்களின் மண வாழ்க்கை இன்பகரமாக இருக்குமா?

ப: ஏன் இருக்க முடியாது? பேராசிரியர் சாமுவேல் ஜோன்சன் என்பவர் தன்னைப் போல இரட்டிப்பு வயதுள்ள ஒரு விதவையை மணந்து இன்ப வாழ்வு வாழ்ந்தாராம். ஏன், மகாகவி ஷேக்ஸ்பியரே தனது 19 வது வயதில் 27 வயதுள்ள பெண்ணைத்தானே மணந்து கொண்டார்!

ஃ

கே. ஜோண்,
புளியந்திவு.

கே: நான் ஒரு இளம் வாலிபன் நான் ஒவ்வொரு நாளும் தவறாதுஉடல் பயிற்சி செய்து வருகிறேன். ஆனால் நோய்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதன் மர்மம் யாது?

ப: உங்களின் உடற் பயிற்சி முறை தவறாக இருக்கலாம். மேனாட்டு முறையைக் கையாண்டால் கீழ் நாட்டு முறையைக் கையாள வேண்டாம். இரண்டு முறைகளையும் கலந்து செய்வது ஆரோக்கியத்துக்கு கேடு விளைவிக்கும் நீங்கள் யோகாசனப்பயிற்சிகள் செய்து வந்தால எந்த நோயும் உங்களை அணுகாது.

ஃ

எஸ். கிருஷ்ணமூர்த்தி,
மாத்தளை.

கே: இருவருக்குத் திருமணம் முடிந்தால், பெண்ணிற்கு அடையாளமாக தாலியை கட்டுகிறார்கள் தாலியைக் கட்டுகின்ற அந்த ஆணிற்கு என்ன அடையாளம்? எப்படி தெரிந்து கொள்வது?

ப: ஆணுக்குஅடையாளம் கிடையாது. இருதார வழக்கில் சிறைக்குச் செல்வதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

சாமிநாதன்,
மட்டக்களப்பு.

கே: நான் இங்கு மிகவும் பொறுப்புள்ள ஒரு வேலைக்கு பயிற்சி அளிக்கப்படுகிறேன். காலை 5 மணி அளவில் என்னை நித்திரையிலிருந்து எழுப்பி விடுகிறார்கள். எனக்கு 14 வயது நான் காலையில் 5 மணிக்கு எழுவது ஏற்றதா?

ப: அதிகாலையில் எழுந்திருத்தல் உடல் நலனுக்கு நன்மையே உங்களின் வேலைப் பயிற்சி எதுவாக இருப்பினும் அதிகாலையில் எழுந்திருக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

ஃ

ஆனந்த சர்மா,
வறக்காபொல.

கே: சிறிதுகாலம் யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தற்பொழுது என்னசெய்கிறது?

ப: சாதியளவு முன்னேறிவிட்டமையால் மூன்றாகப் பிரிந்துவிட்டார்களாம்.

கே: பெண்களுடைய கேள்விகளுக்குத்தானே எப்பொழுதும் நீங்கள் முதலிடம் கொடுக்கிறீர்கள்.

ப: பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்றால் நான் எம்மாத்திரம்?

ஃ

எஸ். எம். சகீட்,
தோப்பூர்.

கே: சுதந்திரன், பத்திரிகையில் பேனா நண்பர் பகுதியொன்றை ஆரம்பித்தால் நன்றாயிருக்குமே.

ப: வளர்மதி மாமாவுக்கு இது பற்றி ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்துப் பாருங்கள்!

ஃ

ஆர். எஸ் கோவிந்தராஸ்,
புசல்லாவ.

கே: டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தமிழ் அரசு கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டதிலிருந்து என்ன தெரிகிறது?

ப: ஆயுட்காலம் முழுவதும் ஒருவரையே தலைவராகக் கொண்ட கட்சியல்ல தமிழரசுக்கட்சி என்பது.


## 'இலவசம்'! 'இலவசம்'!!

உத்தியோகத்தில் உயர்வு பெற, எதிரிகளை அடிபணியச் செய்ய, எதிர்பார்க்கும் இளைஞன்—இளம் பெண் மனதை வெல்ல, வயது வந்தோரின் விருப்பத்தைப் பெற முதலிய எப் பிரச்சினையும் எம்மால் நீங்க வேண்டுமா?


இன்றே கேளுங்கள்

**பண்டார மந்திராச்சாரியார்**

அன் கம்பெனி,

தலாவ (வழி) அநுராதபுரம்.





பாட்டாளி முதல் பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

# கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

**கமலா ஸ்டோர்ஸ்,**

தந்தி: தாமரை | நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11. | தொலைபேசி: 3597-6522

# 29-வது பிரிவு பொருளாதார பாதுகாப்பா?*சோல்பரிக் குழு முன் திரு. ஜீ. ஜீ.

# அரசியற்கட்சிகளும் அரசியலமைப்பு மாற்றமும்

பூங்குன்றன்

**இன்றைய அரசியலமைப்பு முறையைத் திருத்தியமைப்பதென எதிர்க்கட்சிகளும், அரசாங்கக்கட்சிகளும் முடிவு செய்துள்ளன. ஆனல் அரசியலமைப்பில் சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கென சேர்க்கப்பட்ட 29-வது பிரிவை முற்ருக நீக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் வாதிடுகின்றன. அரசாங்கக் கட்சியினரும் இது பற்றி பல தரப்பட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். இவற்றை யிட்டு விரிவாக ஆராய்கிறது இக்கட்டுரை**

இலங்கை அரசியல் அமைப்பில் மாற்றம் செய்யவேண்டுமென்ற கருத்து கடந்த பத்து ஆண்டுகாலமாக நாட்டில் உள்ள சகல அரசியற் கட்சிகளினதும் விருப்பமாக இருந்து வருகிறது. இன்றைய அரசியல் அமைப்பு முறை ஒன்றுக்கு மேற்பட்ட இன மக்களைக் கொண்ட நமது நாட்டுக்குப் பொருத்தமானது அல்ல என்பதை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனது ஆரம்ப நாளிலிருந்தே எடுத்துக் கூறி வந்திருக்கிறது. இந்தக் கருத்தை நாட்டில் முதன் முதலாக முன் வைத்த பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே உண்டு.

1956ம் ஆண்டிலிருந்து இன்றைய அரசியல்அமைப்பு முறையை புனரமைப்புச் செய்வதற்கென அவ்வப்போது இரு சபைகளினதும் (பாராளுமன்றம், மூதவை) உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் குழுக்கள் நியமிக்கப்பட்டு வந்துள்ளன. இக் குழுக்கள் பலமுறை கூடிய பொழுதிலும் எத்தகையஒரு முடிவுக்கும் வந்ததாக செய்திகள் வெளியாகவில்லை. ஆனல், பல வகையான அரசியல் அமைப்பு முறைகளையிட்டு இவர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள் என்பது பட்டும் வெளியுலகின் அபிப்பிரயமாகும்.

## டாக்டர் என். எம். ஏற்படுத்திய பிரச்சினை

பத்தாண்டு காலமாக நடை பெற்றுவந்த இந்த முறையைப் பின் பற்றி புதிய பாராளுமன்றமும் அரசியல் அமைப்பு முறையைப் புனரமைப்புச் செய்வதற்கென புதிய தெரிவுக் குழுவை நியமிக்க விருபியது. இச்சந்தர்ப்பத்தில் வெளியான சதிவழக்கின் கோமறைச் சபை (Privy Council)த் தீர்ப்பு ஒரு புதிய பிரச்சினையைக் கிளப்பி விட்டது. டாக்டர் என். எம். பெரேரா அவர்கள் சதிவழக்கில் கோமறைச் சபை வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் இலங்கைப் பாராளுமன்றம் இறைமையுடையதல்ல என்று கருத்தை வெளியிட்டார்.

சதி வழக்கின் தீர்ப்பு நமது பாராளுமன்றத்தின் இறைமையைச் சந்தேகிப்பதாக இருப்பதால் வெறுமனே அரசியலமைப்பு முறையைப் புனரமைப்புச் செய்வதற்கென இரு சபை உறுப்பினர்களையும் கொண்ட தெரிவுக் குழுவை நியமிப்பதில்அர்த்தமில்லையென்ற வாதத்தை எதிர்க்கட்சிகள் கூட்டாக முன்வைத்தன. சதி வழக்கின் தீர்ப்பு எந்த வகையிலும் பாராளுமன்றத்தின் இறைமையைப் பாதிக்கவில்லையென்பதை இந்நாட்டின்ஒரேதலைசிறந்த அரசியலமைப்பு முறைச் சட்டவாதியான கனம் மு. திருச்செல்வம் அவர்கள் பல ஆதாரங்களுடன் எடுத்து விளக்கியுள்ளார் (சுதந்திரன்-பொங்கல் மலர்) என்றாலும் அரசியலமைப்பை மாற்றுவதென்று அரசாங்கக் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துவிட்டன.

## பொருளாதார பாதுகாப்பு

அரசியலமைப்பை மாற்றுவதென்ற முடிவைத் தொடர்ந்து பல பிரச்சினைகள் இன்றுதோன்றியுள்ளன. குறிப்பாக எதிர்க்கட்சிகள் அனைத்தும் எமது அரசியலமைப்பின் 29-வது பிரிவை அகற்ற வேண்டுமென்று ஒற்றைக் காலில் நின்று வாதிடுகின்றன. எமது இன்றைய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 29-வது பிரிவு பெரும்பான்மை மக்களான பௌத்த சிங்களவர்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதாக எதிர்க் கட்சிகள் பிரச்சாரம் மேற்கொண்டுள்ளன.

அரசியலமைப்புச் சட்டத்தில் 29 வது பிரிவு சேர்க்கப்பட்டிருப்பது ஏன்என்பதற்கு எதிர்கட்சிகள் பல விசித்திரமான விளக்கங்களைக் கொடுக்கத் தொடங்கியுள்ளன. அன்று பொதுசனவாக்குரிமை வந்தபொழுது சேர். பொன். இராமநாதன் அதை எதிர்த்து வாதிட்டதற்கும், இன்றைய அரசியல் அமைப்பில் 29வது பிரிவு சேர்க்கப் பட்டிருப்பதற்கும் காரணம் ஒன்றே என்பது எதிர்கட்சிகள் இன்று முன்வைத்திருக்கும் வாதங்களில் ஒன்ருகும். தமிழ் பேசும் மக்களின் வேலை வாய்ப்புக்களைப் (பொதுத் துறையில்) பெருக்கிக் கொள்வதற்கும் பாது காத்துக் கொள்வதற்குமே 29வது பிரிவு இருப்பதாக எதிர்க் கட்சிகளின் முக்கியமான தலைவர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

## எதிர்க் கட்சிகள் விளக்கம்

பொது சன வாக்குரிமை கிடைத்தால் ஆட்சிப் பொறுப்பில் சிங்கள மக்களின் கை ஓங்கி விடுமென்றும்,அதனல்அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியில் தமிழர்கள் பெற்றிருந்த செல்வாக்கும், தமிழர்கள் அரசாங்க துறையில் கொள்ளைகொண்டிருந்த வேலை வாய்ப்புக்களும் பறி போய்விடுமென்று சேர். பொன் இராமநாதன் கருதினராம். அவரின் பயத்தில் உண்மையிருந்ததென்றும், அது உண்மையில் நடைமுறைக்கு வரமுன்னர் இன்றைய அரசியலமைப்பின் 29வது பிரிவு மீண்டும் பழைய வாய்ப்பை அல்லது பாதுகாப்பை தமிழர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து விட்டதென்பதும் அவர்களின் வாதம். அரசியலமைப்பின் 29வது பிரிவு தமிழர்களுக்கு அவர்களின் விகிதத்திற்கும் மிக அதிகமான முறையில் அரசாங்கத் துறையில் வேலை வாய்ப்பைப் பெற உதவியாக இருக்கிறது. எனவே இப்பிரிவு தமிழர்களுக்கு ஒரு வகையான பொருளாதார பாதுகாப்பு என்பது எதிர்க் கட்சிகளின் கருத்தாகும்.

சிங்களம் மட்டும் சட்டமும், கல்வி நிலையங்களை அரசாங்க உடமையாக்கியமையும் தமிழர்களுக்குப் பாதுகாப்பான 29வது பிரிவுக்கு விரோதமானதாக இருந்த போதிலும், அப்பிரிவு இச்சட்டங்கள் பெற்றிருந்தளவு வலிவுபெற முடியாது போனமையால், இவற்றை எதுவும் செய்ய முடியவில்லையென்பதும் எதிர்க் கட்சிகளின் விளக்கமாகும். என்றாலும் இப்பிரிவு பௌத்த சிங்கள மக்களின் பல உரிமைகளைக் கட்டுப்படுத்துகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

## தோல்வியுற்ற அரியணை உரை

கூட்டரசாங்கம் கடைசியாக (1964 டிசம்பர்) சமர்ப்பித்த அரியணை உரையில் (தோல்வியுற்ற) பௌத்த மதத்தை இந்நாட்டு அரசாங்க மதமாக்கக்கூடிய முறையில் இலங்கை அரசியலமைப்பின் 29வது பிரிவு மாற்றப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தது இங்கு சுண்டு நினைவுபடுத்தக் கூடியதாகும். இந்த பின்னணிச் சூழ்நிலையில் அரசியல் அமைப்பு முறையை மாற்றுவதென்று முடிவாகியுள்ளது.

இலங்கை அரசியல் அமைப்பு முறையை மாற்ற வேண்டுமென்பதற்குப் பல நீதியான காரணங்கள் இருக்கின்றன. இன்றைய அரசியல் அமைப்பின் அடிப்படையே மாற்றியமைக்கப் பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மொழி, பண்பாடு, கலாசாரம் உடைய மக்களைக் கொண்ட ஒரு நாட்டிற்கு இன்றைய அமைப்புமுறை உகந்ததல்ல இன்று நடைமுறையில் இருக்கும் அமைப்பு முறை வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்ற முறையின் மறுபதிப்பாகும். இது எமது நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும். நிர்வாக ஒழுங்கீனங்கள் பலவற்றிற்கும் இன்றைய அமைப்பு முறையில் உள்ள கோளாறே காரண மாகும். ஆனல் எதிர்க் கட்சிகளுக்கு முக்கியமாகப்படுவது 29-வது பிரிவாகும்.

## சோல்பரி காரணம்

எதிர்க் கட்சிகள் கண்டு கதி கலங்கும் இந்த 29-வது பிரிவுஎப்படி நமது அரசியல் அமைப்பு முறையில் இடம் பெற்றது என்பதும் இன்றைய சந்தர்ப்பத்தில் ஆராயப்படவேண்டியதாகும். இலங்கை அரசியல் முறையில் மாற்றஞ் செய்வதற்கென 1944-ம் ஆண்டு அரச ஆணைக் குழு சோல்பரி அவர்கள் தலைமையில் இலங்கைக்கு வந்தது. இக்குழுவிடம் பலரும் தங்கள் கருத்தை எடுத்துக் கூறி சாட்சியமளித்தார்கள். தமிழ் பேசும் மக்கள் தாங்கள் சிறுபான்மையினராக இருப்பதால் சட்ட மூலமான நிரந்தர பாதுகாப்பு வேண்டுமென்று எடுத்துக் கூறினர்கள். சிறுபான்மையினர் சார்பாக சோல்பரி ஆணைக் குழுமுன் சாட்சியமளித்தவர்கள் இத்தகைய பாதுகாப்பைக் கோருவதற்கு ஆதாரமாக பல சம்பவங்களை எடுத்துக் காட்டினர்கள். பொதுசன வாக்குரிமை வழங்கப்பட்ட பின்னர் பெரும்பான்மையினர், பெரும்பான்மையினர் என்ற அதிகாரத்தைக் கொண்டு எடுத்து வந்த நடவடிக்கைகளே சட்ட மூலமான பாதுகாப்பை சிறுபான்மையினர் கோருகின்ற அளவிற்கு நியாயமான அச்சத்தைத் தோற்றுவித்தது.

தமிழ் மக்களின் நியாயமான அச்சத்தை சோல்பரி ஆணைக் குழுவும் உணர்ந்திருந்தது. என்றாலும் ஆர்ச் பிஷப் அவர்களும, இந்திய அரசாங்கமும் சிறுபான்மையினருக்கு சட்ட மூலமான நிரந்தர பாதுகாப்பு வேண்டுமென்று பலமாக எடுத்துக் கூறியிருந்தார்கள். சிறுபான்மை மதத்தினரதும், இலங்கை வாழ் இந்திய மக்களினதும் பாதுகாப்பை முன்னிட்டே இவர்கள் இத்தகைய

(9-ம் பக்கம் பார்க்க)


# ரிஷி லேகியம்

(கருணைக் கிழங்கு)



மூல முளைகள், இரத்தம், சீழ் பௌந்தம், வாய்வுகள், உள் மூலம், வெளி மூலம், தீராத மலச்சிக்கல், மூலச் சூட்டினுல் உண்டாகும் எல்லா உபாதைகளுக்கும் கைகண்டது.

ரிஷி மார்க்கைக் கவனித்து வாங்கவும்

டின் 1க்கு ரூ. 3-50

தபால் செலவு 1-10 சதம்

எவ்வித தீராத வியாதிக்கும் எம்மைக் கலந்து ஆலோசியுங்கள்.

அனேக மருந்துகள் அடங்கிய கேட்லாக் இனும்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.



ஆண் பெண் இருபாலாருக்கும்

தனிமைக் குணம், பேய் தோஷம், எலும்புருக்கி நோய், வயிறு நெஞ்சு எரிவு, நச்சுத்தன்மையான சாப்பாடு வயிற்றிலிருத்தல், மெலிவடைதல், உடல் அவலெட்சணம், ஆகியவற்றை மர்ம வழியில் காலக் கிரமத்தில் குணப்படுத்திப் பார்ப்போர் பரவசமடையும் விதத்தில் உடலை மாற்றி விடுவேன். விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

வைத்தியாச்சாரி

பி. எம். திசாநாயக்க,
த. பெ 1281,
கொழும்பு.






# அதிர்ஷ்ட எண்ஞானம்

(எண்களில் உங்கள் அதிர்ஷ்டம்)

நம்முடைய வெற்றி தோல்விகளுக்கு நாமே பொறுப்பாளியேயன்றி பிறரோ, சூழ்நிலையோ அல்ல என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

எண்கள் விசித்திர சக்திகளை விளைவிக்கும் ஆற்றல் பெற்றது. மனிதர்களின் வாழ்க்கையை நிர்மாணிக்கக் கூடியது என்பதை நீங்கள் அறிவீர்களா?

இதுகாறும் துரதிர்ஷ்டசாலிகளாக இருந்தவர்களை மிகச்சுலபமாகஅதிர்ஷ்டசாலிகளாக இந்நூல் செய்துவிடும், வாழ்க்கை வெற்றிமேல் வெற்றியாக அமைய நூற்றுக்கு நூறுபங்கு உதவும்.

வெற்றிகரமான அதிர்ஷ்ட வாழ்க்கையை அமைத்துக்கொள்ள விரும்பும் ஒவ்வொருவருக்கும் இது ஓர் பொக்கிஷம்.

விலை ரூ. 3/75 (தபால்செலவுடன்)

நவலட்சுமி புத்தகசாலை

136, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# வித்தியாபகுதி பட்டதாரி உதவி ஆசிரியர் பதவிகள்

1. அரசினர் பாடசாலைகளிலுள்ள உதவி ஆசிரியர்களுக்கான பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளாகவுள்ள பட்டதாரிகளிடமிருந்து (ஆண் பெண் இருபாலாரிடமிருந்து) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. 'கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1966ம் ஆண்டு மார்ச் மாதம் 12ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் 'வித்தியாதிபதி (ஸ்தாபனக் கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2' என்ற விலாசத்துக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பட்டதாரி உதவி ஆசிரியர்—சிங்கள தமிழ்மொழிமூலம்' எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

3. 'சம்பளமும் சகாயப்படிகளும்—I ம் வகுப்பு அல்லது II ம் வகுப்பு சிறப்புப்பட்டதாரிகளுக்கு:-

ரூபா 3,180—10x120, 7x180—ரூபா 5,640 வருடாந்தம் ஏனையபட்டதாரிகளுக்கு:-

ரூபா 2,700—10x120, 7x180—ரூபா 5,160 வருடாந்தம்.

சீவன சகாயப்படி, விசேட சீவன சகாயப்படி, வாடகைப்படி ஆதியன விதிக்கப்பட்ட விதிகளுக்கமையக் கொடுபடும்.

4. 'தேவைப்படும் தகைமைகள்—பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாக விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும்.

(அ) 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 12ந் திகதியன்று 18வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ் வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலையின் பட்டதாரியாக இருக்க வேண்டும்.

'குறிப்பு:—பட்டப் பரீட்சைக்கு கீழே கொடுபட்டுள்ள பாடங்களில் ஒன்றை அல்லது கூடியவற்றை எடுத்துள்ளவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும். சிங்கள மொழிப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில்—பாடங்கள் கணிதம், பூமிசாத்திரம், பொருளாதாரம், சரித்திரம், மனையியல், விவசாயம், கணக்கியல்.

தமிழ்மொழிப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில்:- பாடங்கள்—பூமிசாத்திரம், சரித்திரம், சமஸ்கிருதம், பொருளாதாரம், விவசாயம், கணக்கியல்.

(இ) பட்டப் பரீட்சைக்கு எடுத்துள்ள பாடங்களை க. பொ. த. ப. (சாதாரண தர) வகுப்பிலும் க. பொ. த. ப. (உயர்தர) வகுப்பிலும் சிங்கள தமிழ்மொழி மூலம் கற்பித்தற்கு ஆற்றல் உடையவராய் இருப்பதுடன் க. பொ. த. ப. (சாதாரண தர) பரீட்சையில் சிங்கள தமிழ்மொழியில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமுடையவராய் இருக்கவேண்டும்.

(உ) தீவின் எப்பகுதியிலேனும் சேவை புரிதற்கு விருப்பமுடையவராகவும் அதற்கு வேண்டிய உடற்றகுதி உடையவராகவும் இருக்கவேண்டும்.

5. நியமன நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்.

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையாகவும்பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவாகவும் இருக்கும்.

(ii) நியமிக்கப்படுபவர் ஒவ்வொருவரும் பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின்கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்கான கட்டணம் கட்டவேண்டும். நியமிக்கப்படும் ஆசிரியர்கள் (ஆண்கள்) ஆசிரியர் கைம்பெண், அனுதைகள் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு அதற்கான கட்டணமும் செலுத்தவேண்டும்.

(iii) ஏற்கனவே நிரந்தர, இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய சேவையில் அரசினரின் கீழ் சேவை புரியாதவர்கள் இப்பதவிகளுக்கு நியமிக்கப்படுமிடத்து அவர்களுடைய நியமனங்கள் மூன்று வருடகாலத்துக்கு தகுதிகாண் முறையில் அமையும். ஏற்கனவே நிரந்தர இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய சேவையில்அரசினரின் கீழ் சேவை புரிபவர்கள் நியமிக்கப்படுமிடத்து அவர்களுடைய நியமனங்கள் ஒரு வருட காலத்துக்கு பதில் நியமனங்களாக அமையும்.

(iv) தெரிவு செய்யப்படுவோர் தீவின் எப்பகுதியிலும் சேவை புரிதற்கு ஆயத்தமாய் இருக்கவேண்டும்.

(v) தெரிவு செய்யப்படுவோர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைநடைமுறைக்குக் கொண்டுவருதற்கு, குறிப்பாக 1956ம் ஆண்டின் 33ம் இலக்க அரசகருமமொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை (நடைமுறைக்குக் கொண்டுவருதற்கு) ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கும் இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய ஒழுக வேண்டும்.

"விண்ணப்பதாரிகள், கேட்கப்படும் நேரத்தில், கீழ்க்காணும் சாதனங்களில்எவற்றையேனும் யாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்:-

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(மு. கு.: ஞானஸ்நானப்பத்திரம் அல்லது உதவி நன்கொடைப் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்திற்காகக்கொடுபடும் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரமும் சிங்கள தமிழ்மொழியில் பெற்றுள்ள ஆகக்கூடிய தராதரப்பத்திரம்.

(இ) இரு நற்சாட்சிப் பத்திரங்கள். இவற்றுள் ஒன்று உரிய காரியாதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாய்இருக்கவேண்டும்.

குறிப்பு: 1—சாதனங்களையேனும் சாதனங்களின் பிரதிகளையேனும் விண்ணப்பப்பத்திரத்துடன்இணைத்தனுப்பப்படலாகா.

குறிப்பு 2—கேட்கப்படும் நேரத்தில் வேண்டிய சாதனங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் உரிமைகள் தீர்க்கப்படமாட்டா.

7. அரசினர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் சேவை செய்யும் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்படவேண்டும்.

8. விண்ணப்பங்களும் விண்ணப்பங்கள் சம்பந்தமான யாதேனும் கடிதங்களும் வித்தியாதிபதிக்கு ஒழிய வித்தியா பகுதியிலுள்ள வேறு எவ்வுத்தியோகத்தர்க்கேனும் அனுப்பப்படலாகா.

9. அரசினர் செய்திமடலின் I ம் பகுதி II ம் பிரிவில் வெளியிடப்படும் அரசினர் சேவையிலுள்ளபதவிகளுக்கு அமையும் பொது நிபந்தனைகளுக்கு உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

10. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய விதிக்கப்பட்ட திகதிக்குப் பின்பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எனவே காகிதப் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய தாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளுமுகமாக விண்ணப்பங்களை நேர காலத்துடன் அனுப்பிவைக்குமாறு ஆலோசனை கூறப்படுகிறது.

11. 1965ம்ஆண்டுபெப்ருவரி மாதம் 12ம், 26ம் திகதிகளில் வெளியான அரசினர் செய்திமடலில் வெளிவந்த விளம்பரங்களுக்கு அமைய பட்டதாரி உதவி ஆசிரியா பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களும இவ் விளம்பரத்துக்கு அமையஇப்பதவிகளுக்குத் திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.

ஈ. எச். டி. அல்விஸ்,
வித்தியாதிபதி.

தாபனக் கிளை,
வித்தியாபகுதி, மலாய்வீதி,
கொழும்பு-2,
1966ம் ஆு பெப்ருவரி மீ 10ந் தேதி.

(மேலே குறிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம்)

பட்டதாரி உதவிஆசிரியர்பதவிகளுக்கான விண்ணப்பம்—சிங்கள—தமிழ் மொழிப் பாடசாலைகள்.

1. முழுப்பெயர்: வண. திரு.திருமதி செல்வி: (தெளிவாக எழுதவும்).

2. விலாசம்:

3. விண்ணப்பதாரி விவாகம் செய்தவரா செய்யாதவரா?:

4. விண்ணப்பதாரி ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவராயின் அத்தகைய சேவைபற்றிய விபரங்கள்:—

(i) சேவை செய்த பகுதியின் பெயர்:—

(ii) வகித்த பதவி:—

(iii) நியமனத் திகதி:—

(iv) சேவையிலிருந்துவிலகிய திகதியும் அதற்கான காரணமும்:

5. (i) பிறந்த இடமும் திகதியும்:—

6. (ii) வயது:—

7. விண்ணப்பதாரியின் தகப்பனின் முழுப்பெயர்:—

பின்வருவோர் பிறந்த இடம்:—

(அ) விண்ணப்பதாரியின் தகப்பன்:—

(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன்:—

(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன்:—

8. (அ) சாகியம்:—

(ஆ) இலங்கையராயின் வம்சாவழியாலா அல்லது பதிவு காரணமாகவா?:—

9. உத்தியோகத்திலிருப்பின் சேவை விபரங்களுடன் தற்போதைய உத்தியோகம்:—

10. தராதரங்கள்:—

பட்டம்பற்றிய விபரங்கள்:

(அ) சிறப்பு அல்லது பொது:

(ஆ) வகுப்பு:—

(இ) சர்வகலாசாலை:—

(ஈ) வருடம்:—

(உ) பட்டப் பரீட்சைக்கான பாடங்கள்.—

(ஊ) இடைமானிப் பத்திரப் பரீட்சைக்கெடுத்த பாடங்கள்:—

(எ) எம்மொழி மூலம்:—

11. சிங்களத்தில், தமிழில் பெற்றுள்ள ஆகக்கூடிய தராதரம்:—

12. விசேட உரிமைகள், தராதரங்கள் அல்லது அனுபவம் பற்றிய விபரங்கள்:—

3. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியோரின் பெயரும் விலாசமும்:—

மேலே கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என நான் இத்தால் அத்தாட்சிப் படுத்துவதுடன் இவற்றில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவையென நான்தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்டபின் காணப்படின் சேவையிலிருந்து விலக்கபபடுதற்கும் நான் பாத்திரராவேன் என அறிவேன்.

விண்ணப்பதாரியின்
கையொப்பம்.

திகதி:——

# நிதி அமைச்சர் முயற்சி

வட்டுக்கோட்டைத் தொகுதிப் பா. உ. திரு. அ. அமிர்தலிங்கம் முயற்சியால் மலேசியா விதவைப் பென்சன் வெட்டை நிறுத்தி வைக்குமாறு மலேசிய அரசாங்கத்தை நிதி அமைச்சர் திரு. வனனிநாயக்கா கேட்டுள்ளார்.




# தீங்கிழைக்கும் கிருமிகளினின்று உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள்

பயங்கரமான கிருமிகள் ஒவ்வொரு வீட்டிலும் பதுங்கியிருந்து நோய்களைத்தொற்றவைத்துப் பரப்புகின்றன.

இந்தத்தீங்கிழைக்கும் கிருமிகளினின்று உங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற உங்கள் வீட்டில் நம்பிக்கை வாய்ந்த ஒரு தொற்றுநாசினி தேவை.

டெற்றேல்—உலகின் அதி நம்பிக்கை வாய்ந்த தொற்று நாசினி—உங்கள் குடும்பத்தை எப்போதும் காப்பாற்றும்.

டெற்றேல்- வெட்டுக்காயம், கிறற்புண் முதலியனவற்றைத் தொற்றுக் கிருமிகளிலிருந்து காப்பாற்றும்.

டெற்றேல்- தொண்டைப்புண்ணைத் தடுக்கவும் குணமாக்கவும் உதவும்.

டெற்றேல்- மாதரின் பிரத்தியேக சுகாதாரத்துக்கு மிகவும் உகந்தது; ஏனெனில் டெற்றேல் இதமூட்டி, சுத்தம் தருவதோடு, தொற்றுக் கிருமிகளிலிருந்தும் காப்பாற்றும்.

டெற்றேல்- கர்ப்ப காலத்திலும், பின்னரும் குழந்தையையும் தாயையும் காப்பாற்றுகிறது.

எப்போதும் வீட்டில் ஒரு போத்தல் டெற்றேல் வைத்திருங்கள்.

டெற்றேல் உபயோகிக்கமுன் எப்போதும் நீர் கலந்து கொள்ள வேண்டும்.

உலகின் அதி நம்பிக்கைவாய்ந்த தொற்று நாசினியான டெற்றேலை உலகெங்குமுள்ள டாக்டர்கள் உபயோகிக்கிறார்கள்.

# டெற்றேல்

றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

JWT. RC. 98

# சிங்கப்பூரில் தமிழ் முழக்கம்

## ஜே. எம். சாலி

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்பரவும் வகைசெய்தல் வேண்டும்'' என்பது பாரதியின் குரல். கடல் கடந்த நாடுகளில் தமிழ் முழக்கத்தை பாரதி கேட்கா விட்டாலும் நாம் கேட்கிறோம். சிங்கப்பூரில் இன்று திசையெல்லாம் தமிழ் முழங்குகிறது சமூக வாழ்வில் ம[...]ன்றி, அரசியலிலும் தனக்குரிய இடத்தைத்



ராஜரத்தினம்

தமிழ் பெற்றிருக்கிறது. சுதந்திர சிங்கப்பூரின் பாராளுமன்றத்தில் நாளெல்லாம் முழங்கும் தமிழோசையைக் கேட்டு, தமிழன் தலைநிமிர்ந்து நிற்கலாம்.

### பொன்னுலகு

தென்கிழக்காசியாவில் கேந்திர முக்கியத்தும் வாய்ந்த சிங்கப்பூர், இரண்டாண்டு காலம் மலேசியாவின் ஒரு பகுதியாக இருந்துவிட்டு, அரசியல் வேறுபாடு காரணமாக, சென்ற ஆகஸ்டில் தனி நாடாகியது; குடியரசாகவும் ஆகிவிட்டது. சிங்கப்பூரில் நிலவிவரும் பன்மொழிக் கொள்கையை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. பல இன மக்கள் இங்கே வாழ்கிறார்கள். பல சமயங்கள் தழைத்தோங்குகின்றன. பல்வேறு கலாசாரங்களின் பிரதிநிதியாகச் சிங்கப்பூர் திகழ்கிறது.

எல்லா இன மக்களுக்கும் சமஉரிமையும், எல்லா மொழிகளுக்கும் சமத்துவமும் இங்கே உண்டு. மலாய், சீனம், தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளுக்கும் எல்லாத் துறைகளிலும் சம அந்தஸ்து உண்டு இந்த நான்கு மொழிகளும் ஆட்சி மொழிகள் மலாய் பொது மொழியாக இருப்பதால், அது தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

### தமிழின் உபயோகம்

தமிழும் அதிகாரத்துவ மொழியாகையால் உரிய மதிப்போடு ஆட்சி பீடத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. எந்தவொரு அரசாங்க அலுவலகத்திலும் தமிழில் விண்ணப்பங்களைக் கொடுக்கலாம் பார்லிமெண்டில் தமி



எஸ். வி. லிங்கம்

ழில் பேசலாம். உயர் நிலைப் பள்ளிகளில்தமிழ் போதனை மொழியாக இருக்கிறது. சிங்கப்பூர் சுதந்திரமடைந்த இந்த நான்கு மாதங்களில், தமிழுக்குரிய இடத்தைப் பேணுவதில் அரசியல் வாதிகள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர்.



தேவன் நாயர்

பார்லிமெண்ட் கூட்டங்களில் தமிழ் உறுப்பினர்கள் தமிழிலேயே பேசி வருகின்றனர். உறுப்பினர் தமிழில்பேசினாலும், மற்ற உறுப்பினர்களும் மந்திரிகளும் உடனுக்குடன் அவரவர் மொழியில் கேட்டுக் கொள்ளலாம்.

### மக்களவையில் தமிழ் முழக்கம்

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர், திரு. எஸ். ராஜரத்தினம் இந்தியாவுக்குப் புதியவர் அல்ல. சபாநாயகர் திரு. ஏ. பி. ராஜாவும் தமிழர், திரு கோவிந்தசாமி, திரு. எஸ் ராஜு, திரு எஸ். வி லிங்கம், திருமதி தேவன் நாயர் ஆகிய நால்வரும் தமிழ் உறுப்பினர்கள். நான்கு உறுப்பினர்களும் நாடாளுமன்றக் கூட்டங்களில் தமிழ் முழக்கம் செய்து வருகின்றனர். சிங்கப்பூர் அரசாங்கம் அவர்களின் குரலை அக்கறையோடு கேட்கிறது.

> சிங்கப்பூரில் தமிழர்கள் சீரோடும் சிறப்போடும் வாழ்கிறார்கள். தமிழ் மொழி தனக்குரிய தகைமையைப் பெற்றுள்ளது. சட்டசபைகளில் தமிழ் முழக்கம் கணீரென ஒலிக்கிறது. ஐந்து தமிழ் உறுப்பினர்கள் சிங்கப்பூர் சட்டசபையில் வீற்றிருக்கிறார்கள். அவர்கள் பிரச்சினைகள் அனைத்தையும் கன்னித் தமிழிலேயே எடுத்துக் கூறுகிறார்கள். பிற மொழியாளர்கள் உடன் மொழி பெயப்பாளர்களின் உதவியுடன் அவர்களின் கருத்தை அறிகிறார்கள். அதே போன்று ஏனைய மொழியாளர்களின் கருத்தையும் இவர்கள் உடன் மொழி பெயர்ப்பாளர்களின் உதவியுடன் தமிழிலேயே கேட்கிறார்கள். நமது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இவர்கள் முன்மாதிரியாக திகழட்டும். சிங்கப்பூர்த் தமிழர்களுக்கு இன்று தமிழாசிரியர்கள் பற்றுக் குறையே பெரும் பிரச்சினையாகும். இதைத் தீர்ப்பதற்கும் கல்வி அமைச்சர் உடன் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். சிங்கப்பூர் இன ஒற்றுமைக்கு முன்மாதிரியாக மட்டுமல்லாது பல்வேறு கலாசாரங்களினதும் ஒரு அரங்கமாகவும் திகழ்கிறது.

தமிழும், தமிழ்க் கல்வியும் சிங்கப்பூரில் தழைத்தோங்க அரசாங்கம் கடமையாற்ற வேண்டும் என்பதை திருமதி தேவன் நாயர் நாடாளுமன்றத்தில் எடுத்துச் சொன்னார். திருமதி தேவன் நாயர் மோல்மீன் என்ற தொகுதி உறுப்பினர். திரு. தேவன் நாயர் மலேசிய பார்லிமெண்டில் உறுப்பினராக இருக்கிறார். அவர் நாடறிந்த தொழிசங்கவாதி.

### ஆசிரியர் பற்றுக் குறை

அண்மையில் ஒரு முக்கிய பிரச்சினையைத் திருமதி தேவன் நாயர் எழுப்பினார்.



கோவிந்தசாமி

'உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்பு வரை தமிழைப் போதனை மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்கள் மேற்கொண்டு படிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றனர். அவர்கள் தமிழிலேயே உயர் கல்வி கற்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தமிழ் ஆசிரியர் பற்றுக்குறை இருந்து வருகிறது.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பகுதி இருந்தும், தமிழில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தால் தமிழ்ப் பகுதியில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு பற்பல வசதிக் குறைகள் ஏற்படுகின்றன. இவற்றிற்கு அரசாங்கம் உடனே பரிகாரம் காண வேண்டும்.

தமிழை முதல் மொழியாகக் கொண்டு உயர் நிலைப் பள்ளி இறுதி வகுப்பில் தேறிய மாணவர்களில், திறமை மிக்கவர்களுக்கு உபகாரப்பணம் அளித்து இந்தியாவுக்கு அனுப்பி மேற்படிப்பு படித்துவரச் செய்யலாம். அவர்கள் திரும்பி வரும்போது— அதாவது சில ஆண்டுகளில் பற்றுக்குறை நீங்கிவிடும். அதுவரை தற்காலிகமாக இந்தியாவிலிருந்து தேர்ச்சிமிக்க தமிழாசிரியர்களை ஒப்பந்தத்தின் மீது தருவித்து, தமிழில் உயர் கல்வியும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்க் கல்வியும் போதிக்க ஏற்பாடுசெய்வது பொருத்தமாகும். கல்வி அமைச்சு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'.



எஸ். ராஜு

### தமிழ் நாட்டில் பயிற்சி

இது திருமதி தேவன் நாயரின் தமிழ்க் குரல். அவருடைய குரலுக்கு நல்ல எதிரொலி ஏற்பட்டிருக்கிறது. தமிழ்க் கல்வி கட்டிக் காக்கப்படும் என்பதற்குக் கல்வி அமைச்சர் உறுதி கூறினார். தேர்ச்சிமிக்க தமிழாசிரியர் பற்றுக்குறையை அரசாங்கம் உணர்ந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். அதற்குப் பரிகாரம் காணப்படும் என்றும் அமைச்சர் உறுதிமொழி கூறி இருக்கிறார்.

மேல் படிப்புக்கு தமிழ் மாணவர்களை இந்தியாவுக்கு அனுப்புவது பற்றியும், குறுகிய கால ஒப்பந்தத்தின் மேல் தேர்ச்சிமிக்க தமிழாசிரியர்களை இந்தியாவிலிருந்து தருவிப்பது பற்றியும் அரசாங்கம் இப்போது பரிசீலித்து வருகிறது என்று கல்வி அமைச்சர் தெரிவித்திருக்கிறார். இது தமிழர்களுக்குப் பெருமை அளிக்கக் கூடிய மகத்தான அம்சம்.

தமிழ்ப் பள்ளியில் பயின்று வெளியேறும் மாணவர்களின் நிலையைப் பற்றி மற்றொரு உறுப்பினரான திரு. எஸ். ராஜு பார்லிமெண்டில் தெரிவித்தார். அரசாங்கம் அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார் அவர்.

### தொலை நோக்கியில் தமிழ்

சிங்கப்பூர் வானொலியிலும், டெலிவிஷனிலும் தமிழ் நிகழ்ச்சிகள் அதிக முன்னேற்ற மடையவில்லை என்றும், அரசாங்கம் அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். வானொலி, டெலிவிஷன் ஆகியவற்றில் தமிழ்ப் பகுதி மேலும் சீர்திருத்தப்பட வேண்டும் என்பதை 'அல்ஜுனைத்' என்ற தொகுதி உறுப்பினரான திரு. எஸ். வி. லிங்கம் எடுத்துச் சொன்னார். டெலிவிஷனில் தமிழ்ப் பகுதிக்கு நிறைய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நல்ல நிகழ்ச்சிகளைப் பார்க்கும் நாள் வரவேண்டும் என்பதாக அவர் கூறினார்.

உறுப்பினர்கள் எழுப்பிய ஆக்ககரமான பிரச்னைகளை அரசாங்கம் அக்கறையோடு கேட்டுக்கொண்டிருக்கிறது.

சிங்கப்பூர் நாடாளுமன்றத்தில் கேட்கும் தமிழ் முழக்கம் தமிழர்களுக்குப் பெருமை அளிக்கக் கூடியதே!

[நன்றி! 'ஆனந்த விகடன்']

---

## மக்கள் குரல்

### அடிக்குறிப்பு அவசியமா?

12-2-66-ல் வெளியான சுதந்திரனில் பிரசுரிக்கப்பட்ட "ஈழத்து இலக்கியம் வளர்ந்திருக்கிறதா?" என்ற கட்டுரையில் தேவன்-யாழ்ப்பாணம் அவர்கள் கூறியிருந்த படுமோசமான கருத்திற்கு எதிரான கருத்து இது. தேவன்-யாழ்ப்பாணம் அவர்களின் கருத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொழுது, மற்றவர்கள் நால்வரின் கருத்தையும் நான் முற்று ஏற்றுவிடவில்லை. தேவனின் படுமோசமான கருத்தென்றபடியாற்றான் அவரின் கருத்தை வாசித்துவிட்டுச் சும்மா இருக்க மனம் வராமலே இதை எழுதுகின்றேன்.

தற்கால இலக்கிய வடிவங்கள் யாவற்றிலும் போதிய அளவு ஆக்கத்திறனும், இரசனையும் கொண்ட தேவன்-யாழ்ப்பாணம் அவர்களுக்கு, ஈழத்துக் கவிதை, கதை, கட்டுரைகளைப் படித்தறிய அவ்வவற்றின் கீழ் அடிக்குறிப்புத் தேவை என்று

(12-ம் பக்கம் பார்க்க)

சவால்! சவால்!! சவால்!!!

முற்பணம் வேண்டாம்!

மனம் விருப்பும் காரியங்கள் அத்தனையும் நிறைவேற இலவசமாக யந்திர மந்திர விஷயங்கள் செய்து தரப்படும். பலன் கிட்டிய பிறகு பணம் தாருங்கள்! விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்.

—மாந்திரீக கலாநிதி—

பி. எம். திசாநாயக்க,

நான்கு கோவில்களின் தர்மகர்த்தா

கம்பளை. போன் : 454.

## தமிழ் நாட்டு தேர்தற் களம்

# "நாட்டில் நல்லாட்சி மலர அணிதிரண்டு பணிபுரிவோம்"

# ஆரணியில் அறிஞர் அண்ணா



1967-ல் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கான பிரச்சாரங்கள் இப்பொழுதே இந்தியத் துணைக் கண்டத்தில் ஆரம்பமாகிவிட்டன. ஒவ்வொரு கட்சியும் மக்களிடம் சென்று நிதி சேர்க்கவும் அதே நேரத்தில் அவர்களின் வாக்குகளைக் கேட்கவும் தொடங்கிவிட்டன. இந்தியத் துணைக் கண்டத்தில் இருபது கோடிக்கு மேற்பட்டவர்கள் வாக்குரிமை பெற்றுள்ளார்கள். ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதியும் மூன்று இலட்சத்து ஐம்பதினாயிரம் வாக்காளர்களையும், சட்ட சபைத் தொகுதி ஒவ்வொன்றும அரை இலட்சம் வாக்காளர்களையும் கொண்டதாகும். தமிழ் நாட்டில் இரண்டு கோடிக்கு மேற்பட்டவர்கள் வாக்குரிமை பெற்றுள்ளார்கள். இவர்களின் வாக்குகளை ஏழுக்கு மேற்பட்ட அரசியற் கட்சிகள் வேண்டி நிற்கின்றன. என்றாலும் தி. மு. கழகத்திற்கும் காங்கிரஸ் கட்சிக்குமிடையிலேயே உண்மையான போட்டி உண்டு. தி. மு. கழகத்திற்கு சுதந்திராவும், முஸ்லீம் லீக்கும் ஆதரவு கொடுக்கின்றன. காங்கிரசிற்கு கம்யூனிஸ்டுகள் ஆதரவு கொடுக்கிறார்கள்.

கடந்த வாரம் ஆரணியில் நடைபெற்ற தேர்தற் பிரச்சாரக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா நிகழ்த்திய உரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது. ஏனைய கட்சித் தலைவர்களின் கருத்துக்களும் அவ்வப்போது இங்கு பிரசுரிக்கப்படும்.

காமராஜருக்கு நம் மீது கடுங் கோபம் ஏற்பட்டிருக்கிறது! ஏனெனில் அவரை வடக்கே உள்ள தலைவர்கள் 'உங்களுக்கு ஆற்றலும், செல்வாக்கும் அவ்வளவு இருக்கிறதே—இருந்தும் இந்தக் கழகத்தையா ஒழித்துக்கட்ட முடியவில்லை' என்று அவர்கள் கேட்கிறார்கள்!

'இதோ ஒழித்துக்கட்டி விடுகிறேன்' என்று சொல்லுகிறார்! சொல்லச் சொல்ல கழகம் வளர்ந்துகொண்டே இருக்கிறது! இதைப்பற்றி காமராஜரைக் கேட்கும் போது அவருக்குக் கடுங் கோபம் உண்டாகிறது!

எத்தனையோ கட்சிகள் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துப் பார்த்து ஏமாற்றம் அடைந்து முடிவில் சரண் அடைந்துவிட்டன!

சில கட்சிகள் பிளந்து போய்விட்டன!

தீவிரமான கட்சி என்று சொல்லப்பட்ட கம்யூனிஸ்டு கட்சி வலது—இடது என்று இரண்டாகிவிட்டது!

பிரஜா சோஷலிஸ்டு கட்சியில் பிளவு ஏற்பட்டுவிட்டது!

எல்லாக் கட்சிகளும் இப்படிப் பல கட்சிகளாகிவிட்டனவே இந்தக் கழகம் மட்டும உருக்குலையாமல், கட்டுக்கோப்புடன் இருக்கிறதே, வளர்கிறதே என்பதை எண்ணிப் பார்க்கும்போது கோபமாகத்தான் இருக்கும்!

'ஆனைப்பட்ட பெரியாரையே நம் வழிக்குக் கொண்டுவந்து விட்டோம—ஆனால் இந்தப்பயல் அண்ணாதுரை' என்று நினைக்கும் போது ஆத்திரமாகத்தான் இருக்கும்!

## பணத்தால் முடியுமா?

இதன் காரணமாகத்தான் காமராஜர் 20 இலட்சம் ரூபாய் தேர்தல்நிதி திரட்டி மூட்டைக்கட்டி வைத்திருக்கிறார்! இந்த இருபது இலட்சத்தைக்கொண்டு கழகத்தை ஒழித்துக்கட்டி விட முடியும் என்றும் நினைக்கிறார்!

பணத்தினால் எதனையும் செய்திட முடியும் என்று எண்ணி காங்கிரஸ்காரர்கள் மகிழ்ந்திடவேண்டாம்—கழகத் தோழர்களும் பீதியடைய வேண்டாம்!

இவ்வளவு பணபலத்தோடுதான், பணக்காரர்களையும் பக்கத்திலே வைத்துக் கொண்டுதான் காங்கிரஸ் கட்சி சென்ற முறையும் தேர்தலில் ஈடுபட்டது!

அப்படி இருந்தும் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்த வாக்குகள் ஐம்பது இலட்சம் தான்!

பணமற்ற நமக்குக் கிடைத்த வாக்குகள் முப்பத்திநாலு இலட்சம்!

ஆகவே பணத்திற்கு மயங்காதவர்கள், அஞ்சாதவர்கள்—சாதிப் பிடியிலே அகப்படாதவர்கள்—ஜனநாயகத்தின் பக்கம் நின்றுவாக்களித்தவர்கள் முப்பத்திநாலு இலட்சம் பேர்! ஆகவே எல்லாமக்களையும் பணத்தாலேயே வீழ்த்தி விடலாம் என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்கவேண்டாம்!

கழகம் அதுபோலவே யாரோ சில புள்ளிகளை நம்பிக்கொண்டில்லை! எண்ணற்ற தனது உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் நம்பிக்கொண்டிருக்கிறது!

சில வேளைகளில் நானே கூட எண்ணிப் பார்ப்பது உண்டு! எவ்வளவு எளிய நிலையில் இருந்துக்கொண்டு எத்தனை பணபலம்கொண்ட கட்சியை எதிர்த்து நிற்கிறோம்! எப்படி அதுமுடிகிறது என்று எண்ணிப்பார்ப்பது உண்டு!

## 'கார்'ப் பலம்

நான் சில மாதங்களுக்கு முன்பு ஜெயப்பூர்சென்றிருந்தேன்! இரவு முழுவதும் ரயில்வண்டி—டெல்லியிலிருந்து! அப்போது நானாக எண்ணிப் பார்த்துக் கணக்குப் போட்டேன்—நம்முடைய கழகத் தோழர்களில் எத்தனை பேருக்கு 'மோட்டார் இருக்கிறதென்று!

விரலை மடக்கி மடக்கிப் பார்க்கிறேன், கழக முன்னணி வீரர்களில் ஏழு பேருக்கு மேல் மோட்டார் இல்லை! அந்த ஏழு மோட்டாரிலேயும் இரண்டு மாதத் தவணை! இந்த எளிய நிலையிலிருந்துகொண்டு காங்கிரஸ் கட்சியை நாம் எதிர்க்கிறோம்!

காங்கிரஸ் கட்சியில் எத்தனையோ பேருக்கு 7 மோட்டார் இருக்கிறது!

ஷெவர்லெட் எடு என்கிறான், பியூக் போச்சா என்கிறான், வாக்சால் வந்ததா என்கிறான், மாரிசில்மருமகப் பெண்ணை அனுப்பு என்கிறான்! இப்படிப்பட்ட சீமான்கள் நிறைந்த காங்கிரஸ் கட்சியை நாம் எதிர்க்கிறோம்!

சென்ற தேர்தலில் பணத்திற்குப் பயப்படாமல் முப்பதுஇலட்சம் வாக்காளர்கள் நம் பக்கம் இருந்திருக்கிறார்கள்! ஆகவே காங்கிரஸ்கட்சி சேர்த்து வைத்திருக்கிற பணத்தைக்கண்டு நாம்பயப்படத் தேவையில்லை!

## மக்கள் பலம்

நான் இப்படிச் சொல்லுவதால் பணமே தேவையில்லை என்று எண்ணிவிடாதீர்கள்!

முதலாளிகளிடம், பெரிய புள்ளிகளிடம் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் பணம்பெறவேண்டும் என்பதில்லை! பெரிய புள்ளிகளிடம் பெரும் தொகையை தேர்தலுக்கு வாங்கிவிட்டால் பிறகு தன்னாலேயே மேல் வேட்டி இடுப்புக்கு வந்துவிடும்! அதனால்தான் சாமானியர்களிடம் சிறு சிறு தொகையைக் கேட்டுப்பெறுகிறோம்!

வானத்திலே ஒரே நிலவு போதும்என்று ஆண்டவனே கருதியதாகத் தெரியவில்லை! எண்ணற்ற நட்சத்திரங்களும் மின்னிக்கொண்டிருக்கின்றன! வானத்தின் அழகே அதில்தான் இருக்கிறது!

## பிரச்சாரம்

நாம் செய்யவேண்டியதெல்லாம் இந்த ஆட்சியின் கொடுமைகளைப்பற்றி எல்லா இடங்களிலும், எடுத்துச் சொல்லவேண்டும்! நாம் பல காலமாக இதைச் சொல்லிக் கொண்டு வருகிறோம் என்றாலும் நம்முடைய மக்களுக்கு அடிக்கடி இவைகளை நினைவூட்ட வேண்டும்!

'ராமர் கதை' எல்லோருக்கும் நெடுங்காலமாகத் தெரிந்ததுதான்! ஆனால் அதை மக்கள் எங்கே மறந்து விடுவார்களோ என்று காலட்சேபக்காரர்கள் சதா எப்படி எப்படி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!

மூன்றுமாத இராமாயண பிரசங்கம், முப்பது நாள் இராமாயண பிரசங்கம்—பாதுகா பட்டாபிஷேகம், பட்டாபிஷேகம் என்று கவனப்படுத்தியபடி இருக்கிறார்கள்!

புராணக் கதைகளுக்கே இவ்வளவு கவனப்படுத்தத் தேவை இருக்கிறது என்றால் காங்கிரஸ்கட்சியின் கேடுகள் பற்றி ஒரு கூட்டத்திலே எடுத்துச் சொல்லிவிட்டால் அப்படியே பதிந்துவிடுமா?

இதனால் மற்ற நாட்டு மக்களைவிட நம் நாட்டு மக்களுக்கு அறிவுத் தெளிவு குறைவுஎன்று நான் சொல்லவில்லை! ஆனால் வாழ்க்கைத் தொல்லை அந்த அளவுக்கு இருக்கிறது, மறதியை உண்டாக்கி விடுகிறது!

ஆகவேதான் இந்த ஆட்சியின் கொடுமைபற்றி, அலங்கோலத்தைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும், ஒவ்வொருநாளும் சொல்ல வேண்டும் என்றுகூறுகிறேன்!

## கடமை என்ன?

ஒவ்வொரு மாவட்டத்திலும் பேச்சாளர்கள், செயலாளர்கள் எல்லாம் கூடி கலந்துபேசி, எந்தெந்த பிரச்சினைகளை மக்கள்முன் வைக்க வேண்டும், கருத்துகளை எந்த முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதுபற்றி திட்டமிட்டுக்கொள்வதுகூட நல்லது என்று நினைக்கிறேன்!

காங்கிரஸ்கட்சியின் ஆட்சியில் மக்கள் படும் தொல்லைகளை, துயர்களை நித்தம் நித்தம் எடுத்துச்சொல்ல வேண்டும்!

காங்கிரஸ் ஆட்சியில் விலை ஏறிவிட்டது, வரி அதிகமாகிவிட்டது, முதலாளி கொழுத்துவிட்டான் என்றெல்லாம் குறைகூறினால் மட்டும் போதாது!

உள்ளூர உங்களுக்குக்காங்கிரஸ் ஆட்சி பிடிக்கவில்லை என்றால் அடுத்த தேர்தலில் அந்த காங்கிரஸ் ஆட்சியை மாற்றுவதற்குத் துணிவு வேண்டும்!

அதைச் செய்யாமல் மறுபடியும், மறுபடியும் காங்கிரஸ் ஆட்சியை ஆதரித்து ஓட்டுப் போட்டுவிட்டு—'ஐயோ-விலை ஏறிவிட்டதே, வரி அதிகமாகிவிட்டதே' என்று குறைபட்டுக்கொள்வதில் பயனில்லை!

## குட்டிக்கதை

தெலுங்கு வீடுகளில் ஒரு கதை சொல்லுவார்கள்! ஒரு அம்மையார் தனது குழந்தையை விசித்திரமான முறையில் வளர்த்திருந்தார்!

இரவில் தூங்கப் போகும் போது அந்தக் குழந்தையை நாலு அறை அறைவார்கள்! அந்த அறை தாங்காமல் அந்தக் குழந்தை கேவிக் கேவி அழும்! அழுத மயக்கத்தில் அந்தக் குழந்தை தூங்கி விடும்!

ஒருநாள் அந்த அம்மையார் குழந்தையை தனது கணவனிடம் விட்டு விட்டு வெளியூருக்குப் போய்விட்டார்கள்! அன்று இரவு குழந்தையைத் தூங்கவைக்க முயன்றார்! முடியவில்லை!

'ஏம்மா; தூங்கம்மா என்று குழந்தையைக் கெஞ்சிக் கேட்டார்!

அந்தக் குழந்தை—'மா அம்மா பெட்டே தானி பெட்டவாலா (எங்க அம்மா வைக்கவேண்டியதை வைக்க வேண்டும்) என்றது!

'என்ன உங்கம்மா தரு வாங்க பழமா' என்று கேட்டார்!

'தானி காது' (அது இல்லை) என்றது குழந்தை!

'காய்ச்சிய பால் தருவாளா' என்றார்!

'தானி காது' (அது இல்லை) என்றது குழந்தை!

புரியாமல் தவித்தார்! பிறகு பக்கத்துவீட்டுக்காரர் வந்து விஷயத்தை விளக்கினார்!

பிறகு குழந்தையை அப்பாவும் நாலு அறை அறைந்தார்! அது தூங்கிவிட்டது!

அந்தக் குழந்தையைப் போல நீங்களும் 'மா அம்மா பெட்டதானி பெட்டவாலா' என்று கூறினால் காங்கிரஸ் கொடுக்கும் அறைகளை வாங்கிக்கொள்ளுங்கள்! குழந்தையைப்போல அல்ல என்றால் ஆட்சியை மாற்றுங்கள் அடுத்த தேர்தலில்!

## ஆட்சி மாறட்டும்

அரிசியை உலையில் போடுவதற்கு முன்பு கல், மண்ணைப் பார்த்து எடுத்துவிடவேண்டும்! அரிசியை அரிக்காமல் போட்டு வடித்துவிட்டு சோற்றிலே மண்இருக்கிறது, கல் இருக்கிறது என்று கூறினால் என்ன பயன் இருக்க முடியும்!

எந்த அளவு உப்புப் போடவேண்டும் என்று கணக்குப் பார்க்கிறநேரத்திலே உப்பை அள்ளிப்போட்டு பிறகு குழம்பிலே 'உப்பு அதிகம், உப்பு அதிகம்' என்றுபேசுவதாலே என்ன பலன் கிடைக்கும்!

பெண்ணுக்கு கண் ஒரு மாதிரி, கால் ஒரு மாதிரி என்று தெரிந்தால் கட்டக் கூடாது! அது தெரிந்து அதையே கட்டிக்கொண்டு விட்டு—'கொண்டவளுக்கு கண் நொள்ளை, கால் நொண்டி' என்று கூறினால் என்ன பயன் ஏற்படும்?

(15-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன்
SUTANTIRAN

1966 பெப்ரவரி மாதம் 27-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-13.
தொலைபேசி எண் - 3411 த. பெ. 1183

# தமிழ் மொழிச் சட்ட அமுல்

பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் மொழிச் சட்ட விதிகள் அமுலுக்கு வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இம் மாதத்தின் முதல்வாரத்திலேயே அதற்கான வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டது. ஆனால் இச் சட்ட விதிகளை அமுல் நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கூட இதுவரை செய்ததாகத் தெரியவில்லை. தமிழ்ப் பிரதேசங்களில் அரசாங்க நிர்வாக அலுவல்களும், கூட்டுத் தாபனம் முதலியவற்றின் அலுவல்களும், முன்போலவே இன்னும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே நடைபெறுவதாக ஒரு செய்தி கூறுகிறது. நியாயமான தமிழ் உபயோகப் பிரமாணங்களின்படி இந்த அலுவல்களைத் தமிழிலும் செய்வதற்கான நடவடிக்கைகள் இன்னும் எடுக்கப்படவில்லை.

இழந்த உரிமைகளிலொன்று மீட்கப்பட்டுள்ளது என்பதைத் தமிழ் பேசும் மக்கள் உணர வேண்டுமானால், தமிழ் மொழிச் சட்ட விதிகள் ஒழுங்கு முறைப்படி அமுல் நடத்தப்பட வேண்டும். அமுலைத் துரிதப்படுத்துமாறு வற்புறுத்த வேண்டியது பொதுமக்களின் கடமையாகும். புதிய நிலைமைக்கேற்ப தமிழ் பேசும் மக்கள் தங்களின் போக்கை மாற்றிக்கொண்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்ட விதிகளை அமுலாக்க ஆவன செய்தல் வேண்டும்.

அரசாங்க அலுவலகங்களுடனும், கூட்டுத் தாபனங்களுடனும் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளும் வழக்கத்தை அவர்கள் உடனடியாகக் கைவிட்டுவிட வேண்டும். இந்த ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து வரும் ஒரு பழைய பழக்கமாகும். இந் நாட்டில் எஞ்சிய ஏகாதிபத்தியத்தின் சின்னம் என்று இதனை வருணித்தாலும் மிகையாகாது. ஆங்கிலம் மூலம் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதை நிறுத்துவதால் ஆங்கிலத்துக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்ச வேண்டியதில்லை.

தமிழ் மூலம் எல்லாத் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளத் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் துணிவுடன் முன்வரவேண்டும். வேறு சொற்களிற் கூறின், 'எல்லாம் தமிழ் இயக்கம்' புத்துயிர் பெற்று எல்லாத் துறைகளிலும் தீவிரமாகப் பரவ வேண்டும். இவ் இயக்கம் அன்று மொழியுரிமைப் போராட்டத்தின் ஓர் அம்சமாகத் திகழ்ந்தது; பெற்றுள்ள மொழியுரிமையை அமுல் நடத்தும் ஒரு கருவியாக இன்று அது பயன்பட வேண்டும். தமிழ் பேசும் மக்கள் தங்களின் அலுவல்கள் அனைத்தையும் தமிழில் செய்தாலன்றி, தமிழ் மொழிச் சட்ட விதிகளை வெற்றிகரமாக எப்படி அமுல் நடத்த முடியும்? இத்துறையில் தமிழ் பேசும் மக்களைத் தூண்ட வேண்டியது தமிழரசுக் கட்சியின் கடமையாகும்.

தமிழ் மொழிச் சட்ட விதி அமுல் பற்றி திறைசேரி இதுவரை அவசியமான சுற்றறிக்கைகளை அரசாங்கத் திணைக்களங்களுக்கு அனுப்பவில்லை என்று தெரிகிறது. அரசாங்க வர்த்தமானியில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பதால், சட்டவிதிகளின் அமுலுக்கு திறைசேரியின் சுற்றறிக்கை அத்தியாவசியமில்லை. திறைசேரியின் சுற்றறிக்கையை விட வர்த்தகமானி அறிவிப்பு மேலானதாகும்.

ஆகவே அரசாங்க ஊழியர்கள், குறிப்பாகத் தமிழ் அரசாங்க ஊழியர்கள் சட்ட விதிகளை உடனடியாக எத்தகைய தடங்கலுமின்றி அமுல் நடத்தலாம். அவர்கள் பழைய போக்கிலே மூழ்கிக்கிடக்காமல், சட்ட விதிகளை விரிவான முறையில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். இதில் அவர்கள் தீவிரம் காட்ட வேண்டும். அமுலின் பெரும்பகுதி அவர்களின் கையில் இருக்கிறதென்றே கூறலாம்.

தமிழ் மொழிச் சட்ட விதிகளை அமுல் நடத்துவதற்கான அறிவிப்பை அரசாங்க வர்த்தகமானியில் வெளியிட்டால் மட்டும் போதாது. அவற்றை நிரந்தரமாக அமுல் நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

அரசாங்கத் திணைக்களங்களினதும், கூட்டுத்தாபனங்களினதும் படிவங்களும், மக்களின் உபயோகத்துக்கான ஏனைய தஸ்தாவேசுகளும் உடனடியாகத் தமிழில் அச்சிடப்படவேண்டும். ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் அச்சடிக்கப்பட்ட பழைய படிவங்களை பொதுமக்களிடம் கொடுத்தால், 'இதுதானா தமிழ்மொழி சட்டவிதிகளை அமுல்நடத்தும் இலட்சணம்?' என்று கேட்பார்கள். எல்லாப் படிவங்களும் தமிழிலும் இருந்தாலன்றி சட்ட விதிகளை எப்படி அமுல் நடத்த முடியும்? ஆகவே உடனடியாகத் தமிழ்பேசும் மக்களுக்கு தமிழ்ப்படிவங்கள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இதில் அசமந்தப் போக்குக் கூடாது.

தமிழ்ச்சட்ட விதிகளின் அமுலுக்கு உதவிபுரிய அரசகரும மொழித் திணைக்களத்தில் தமிழுக்கென தனிப் பிரிவு ஏற்படுத்தப்படவேண்டும். சிங்கள அதிபரின் கீழ் பெயரளவில் ஒரு தனிப்பிரிவு இருப்பதால் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை. தமிழ்ப் பிரிவு தமிழர் ஒருவரின் கீழ் தனியாக இயங்கவேண்டும். அவர் திணைக்களத்தின் உதவி அதிபராக இருத்தல் அவசியமாகும். இல்லையேல் தமிழ்மொழியை அரசாங்க நிர்வாகத்திற்குப் பிரயோகிக்கும் பணியில் இத்தமிழ் பிரிவு எதுவித சேவையும் செய்யமுடியாது.

இவைபோன்ற அவசியமான ஏற்பாடுகளையெல்லாம் உடனுக்குடனாகச் செய்தாலன்றி தமிழ்மொழிச் சட்டவிதிகளின் அமுல் தாமதமாகலாம். தேசிய அரசாங்கம் இவற்றை நிறைவேற்றுமென்பதில் ஐயமில்லை. ஆனால் உடனடியாக நிறைவேற்றுமாறு அரசாங்கத்தைத் தூண்டவேண்டியது தமிழரசுக்கட்சியின் கடமையாகும்.

தமிழ்ச் சட்ட விதிகள் பூரணமாகவும் நிரந்தரமாகவும் அமுல் நடாத்தப்படுவதற்கு மாவட்ட சபை அமைக்க வேண்டியது அவசியமாகும். 'சட்ட விதிகளைத்தான் வழங்கி விட்டோமே! மாவட்ட சபை மசோதாவைத் தாமதப்படுத்தினாலென்ன?' என்ற எண்ணம் ஆட்சியாளருக்கு இருப்பின், அந்த எண்ணத்தை அகற்றிவிட வேண்டும். தமிழ் மொழிச் சட்ட விதிகளின் நிலையான அமுலுக்கும் மாவட்ட சபைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதை உணர்ந்து, கூடிய விரைவில் மாவட்ட சபை மசோதாவையும் சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவர வேண்டியது அவசியமாகும். தேசிய அரசாங்கம் இவ்விடயத்தில் கவனம் செலுத்துமென்று நம்புகின்றோம்.

# வட-கிழக்குப் பகுதிகளுக்கு விமோசனம் இல்லையா?

இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல் சிறுபான்மை மக்கள் பதவியிலிருந்த அரசாங்கங்கள் அனைத்தையும் எதிர்த்தே வந்திருக்கிறார்கள். இந்த எதிர்ப்புணர்ச்சி கடந்த பத்தாண்டு காலத்தில் மேலோங்கி நின்றிருக்கிறது. இதனால் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகள் பொருளாதார ரீதியில் பெருமளவு புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது. இப்பொழுது தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகள் அனைவரும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள். இச் சந்தர்ப்பத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து கடந்த 10 ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்ட இவ்விரு மாகாணங்களை முன்னேற்ற முயற்சிக்க வேண்டும்.

இந்த முயற்சி சிறிதேனும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. தேசிய அரசாங்கம் உருவாகி பத்து மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இந்த இடைக்காலத்தில் வட—கிழக்கு மாகாணங்களில் குறிப்பிடக்கூடிய ஒரு பொருளாதார முயற்சியாவது நடைபெற்றிருக்கிறதா என்றால் இல்லை. கடந்த மாதம் மீன்பிடி அமைச்சர் பலஇலட்சரூபா செலவிலான ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறார். இத்திட்டத்தில் வட-கிழக்கு மாகாண மீன்பிடித் துறைமுகங்கள் எதுவும் அடங்கியிருப்பதாகத் தெரியவில்லை.

இலங்கையின் மிகச்சிறந்த மீன்பிடித் தளங்களாக வடக்கு கிழக்குக்கரையோரங்களே விளங்கிவருகின்றன. 1963ம் ஆண்டு இலங்கையில் மொத்தமாக 16, 88, 313

சுதந்திரன் அரசியல் நிருபர்

அந்தர் மீன்கள் பிடிக்கப்பட்டன. இதில் 12, 82, 818 அந்தர் வடக்கு கிழக்கு மாகாணக் கரைகளில் பிடிக்கப்பட்டுள்ளன. இத்தனை முக்கியமான பிரதேசம் புதிய திட்டத்தில் அடங்கவில்லையென்றால், அதையிட்டு நமது தமிழ் பிரதிநிதிகள் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை மிகுந்த வேதனையுடன் கூறிவைக்க விரும்புகிறோம்.

வட—கிழக்கு மாகாணங்கள் இலங்கையின் நெற்களஞ்சியம். இப் பிரதேசங்களில் உள்ள நீர்த்தேக்கங்கள் அனைத்தும் கடந்த பல ஆண்டுகளாக திருத்த வேலைகள் நடைபெறாது புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கின்றன. மேலும் இந்நிலை நீடிப்பது விரும்பத்தக்கதல்ல. இதற்காக நாம் தேசிய அரசாங்கத்தைமட்டும் தனியேகுறை கூறவில்லை. நமது தமிழ்ப் பிரதிநிதிகள் இதுவரை என்ன பொருளாதாரத் திட்டத்தை தேசிய அரசாங்க அமைச்சரவையிடம் ஒழுங்காக சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறோம்?

தமிழ்பேசும் மக்கள் பிரதிநிதிகள் அரசியல் ரீதியில் ஒன்றுபட்ட கருத்துடையவர்கள் அல்லாது இருக்கலாம். ஆனால் வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்தியில் அத்தகைய மாறுபட்ட கருத்து இருக்கமுடியும் என்று நாம் நினைக்கவில்லை. எனவே தமிழ் பேசும் பிரதிநிதிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களின் உடனடித் தேவைகளையாவது தேசிய அரசாங்க அமைச்சரவையிடம் சமர்ப்பித்து புதைபட்டுப்போய் இருக்கும் வட கிழக்கு மாகாண மக்களுக்கு உதவ முன்வரட்டும்.

# மாவட்டசபை மசோதாவை உடன் கொண்டு வருக

அரியணை உரையில் குறிப்பிடப்படுகின்ற விடயங்களை அந்த ஆண்டுக்குள் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்பது பொதுவான அரசியல் சம்பிரதாயம். இந்த வழமை 1960-ம் ஆண்டுவரை இலங்கையில் ஓரளவு காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது திருமதி சிறீமாவோ அம்மையார் பதவியேற்ற பின்னரே இந்த ஒழுங்கு முறை பொறுப்பற்ற முறையில் அசட்டை செய்யப்பட்டதுடன், அரியணை உரையில் குறிப்பிடப்பட்ட வேலைத் திட்டங்களை புறக்கணிக்கும் முறையும் உருவானது. தேசிய அரசாங்கம் சிறீமாவோ அரசாங்கம் பின்பற்றிய அநாகரிக வழியை விட்டு பழைய சம்பிரதாயத்தைப் பின்பற்றும் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர்.

தேசிய அரசாங்கத்தின் முதலாவது அரியணை உரையில் பல முக்கியமான விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது பலரும் அறிந்ததே. அவற்றுள் பல நிறைவேற்றப்பட்டுவிட்டன. குறிப்பாக வாழ்க்கை செலவைக்குறைப்போம் என்று தேசிய அரசாங்கம் தனது அரியணை உரையில் குறிப்பிட்டிருந்தது. இற்றைவரை வாழ்க்கைச் செலவு குறைக்கப்படவில்லையென்றாலும், எதிரிகளும் குறை சொல்ல முடியாதவாறு வாழ்க்கைச் செலவைக் குறைக்க தேசிய அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்திருக்கிறது. போயா தினங்களை விடுமுறையாக்குவோம் என்று அரியணை உரையில் குறிப்பிட்டது போன்று விடுமுறையாக்கியுள்ளார்கள். தமிழ் மொழி மசோதாவையும் குறிப்பிட்டது போன்று எதிர்க் கட்சிகளின் பலத்த எதிர்ப்புக்குள் நிறைவேற்றியிருக்கிறார்கள். மேலும் எஞ்சியிருக்கும் வேலைத் திட்டங்கள் அதிகம் இல்லை

மாவட்டசபை மசோதா

பாராளுமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடரை ஒத்திவைக்க வேண்டிய காலமும் நெருங்கிக்கொண்டிருக்கிறது. இந்தக் குறுகிய கால எல்லைக்குள் ஏனைய திட்டங்களையும் நிறைவேற்றிவிட்டால் தேசிய அரசாங்கம் பாராளுமன்ற சம்பிரதாயத்தை ஓரளவு கடைப்பிடித்திருக்கிறது என்ற நல்ல பெயரை பெற்றுவிட முடியும். அரியணை உரையில் குறிப்பிட்ட விடயங்களில் இன்று நிறைவேற்றப்படாது எஞ்சியிருக்கும் மிக முக்கியமான மசோதா மாவட்ட சபைத்திட்டமாகும். மாவட்ட சபை மசோதாவையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றி விட்டால் தேசிய அரசாங்கம் தனது முதலாவது அரியணை உரையில் குறிப்பிட்ட வேலைத் திட்டத்தை ஓரளவு பூரணப்படுத்திவிட்டது என்ற பெருமையைத் தேடிக்கொள்ள முடியும். இந்தப் பெருமையைத் தட்டிக்கொள்ள தேசிய அரசாங்க அமைச்சரவை தவற மாட்டாது என்று நம்புகிறோம்.

# தமிழிலும் உண்டு

மோட்டார் வாகன ஓட்டுனர் அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மட்டுமே இருப்பதாக பலர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களிடம் முறையிட்டதைத் தொடர்ந்து, திரு இரத்தினம் அவர்கள் இப்பிரச்னையை அஞ்சற் திணைக்கள முதல்வரின் கவனத்திற்கு சமர்ப்பித்திருந்தார். இம் முறையீட்டைத் தொடர்ந்து அஞ்சற் திணைக்கள முதல்வர் கடந்த 17ம் திகதி திரு இரத்தினத்திற்கு எழுதிய கடிதமொன்றில் இவ்வடையாள அட்டையைப் பெறுவதற்கு இருவகை விண்ணப்பப் படிவங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். சிங்களம்—தமிழ் விபரங்களைக் கொண்ட விண்ணப்பப் படிவமும், சிங்கள—ஆங்கில விபரங்களைக் கொண்ட விண்ணப்பப்படிவமும் அஞ்சற் திணைக்களத்தால் வெளியிடப்பட்டிருக்கிறதாம். இப்படிவங்கள் அவ்வப் பகுதி அஞ்சலக அதிபர்களிலிருப்பத்திற்கேற்பவே அனுப்பப்படுகிறதென்றும் அக் கடிதத்தில் அஞ்சற் திணைக்கள முதல்வர் தெரிவித்திருக்கிறாராம்.

தமிழ்ப் பொது மக்கள் தமிழ்—சிங்களப் படிவங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறிய திரு. இரத்தினம் அவர்கள், அஞ்சற் திணைக்களத்தின் இப்புதிய முறை அரசாங்கப் பணத்தை ஒரு வகையில் வீண் விரயம் செய்வதாகுமென்றும் இம் முறையால் தமிழ் பேசும் மக்கள் பெரிதும் கஷ்டப்படுவார்கள் என்றும் கூறியுள்ளார். மூன்று மொழிகளையும் கொண்ட ஒரே படிவமே பலவகையிலும் பொதுமக்கள் பாவனைக்குவசதியாகஇருக்குமென்று திரு இரத்தினம் அஞ்சற் திணைக்கள முதல்வருக்கு ஆலோசனை கூறக் கூடும் என்று தெரிகிறது.

# வெங்காய இறக்குமதிக்குத் தடை

## துரைரத்தினம் முயற்சியால் மார்ச்சில் அமுலாகிறது

யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வாண்டு பெருமளவு வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதால் யாழ்ப்பாண வெங்காயம் விற்பனையாகாது தேங்கியுள்ளது. இதையிட்டு பருத்தித்துறைப் பா. உ. [illegible] க. துரைரத்தினம் வர்த்தக அமைச்சருடனும், நிதி அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்தியதன் பயனாக அடுத்த மாதம் முதல் பம்பாய் வெங்காய இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் மீண்டும் யாழ்ப்பாண வெங்காயத்திற்கு கிராக்கி ஏற்படவிருக்கிறது.

இவ்வாண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் வெங்காய உற்பத்தி அதிகமாக இருந்ததன் காரணமாக அதற்குக் கிராக்கி இல்லாமற் போய்விட்டது. இதனால் வெங்காயப் பயிரிட்ட விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட வேண்டியேற்பட்டுவிட்டது. கிராக்கி இல்லாமற் போனதற்குக் காரணம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் வெங்காயமே. யாழ்ப்பாணத்தில் உபரியாக உள்ள வெங்காயத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முதலில் யோசனை கூறப்பட்டது என்றாலும், பின்பு அது சாத்தியமில்லை எனக் கைவிடப்பட்டது.

வெங்காயம் உற்பத்தி செய்த இந்த விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்குவதற்காக தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பருத்தித்துறை நிறுப்பினர் திரு. க. துரைரத்தினம் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டார். நிதியமைச்சருடனும், வர்த்தக அமைச்சருடனும் அவர் நடத்திய பேச்சுவார்த்தையில் பம்பாய் வெங்காயத்தை இவ்வாண்டு இறக்குமதி செய்வதைத் தடைவிதித்தால், யாழ்ப்பாண வெங்காயத்துக்கு மதிப்பு ஏற்படுத்தலாம் என யோசனை கூறி இருந்தார்.

அத்துடன் பம்பாய் வெங்காயத்தைத் தடை செய்வதன் மூலம் மூன்று கோடி ரூபாய் வெளிநாட்டுச் செலாவணியும் மீதமாகும் என்றும் அவர் அமைச்சுக்கு விளக்கியிருந்தார்.

திரு. க. துரைரத்தினத்தின் இந்த யோசனையை அமைச்சு ஏற்றிருப்பதாகத் தெரிய வருகிறது. அனேகமாக, அடுத்த மாதம் முதற்கொண்டு பம்பாய் வெங்காயம் இறக்குமதி தடை செய்யப்படலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.



வெள்ளவத்தை

## அஞ்சலகத்தில் தமிழ்

தமிழ் மொழியிலும் கருமமாற்றுவதற்கு கொழும்பு—வெள்ளவத்தை அஞ்சலகத்தில் இத்திங்கள் முதல் ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டு விட்டதாக தபால் அமைச்சர் கிளிநொச்சிப் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் அவர்களுக்கு அறிவித்துள்ளார். இதற்கான ஒழுங்குகளை உடன் செய்து கொடுக்கும் வண்ணம் கடந்த ஆண்டில் திரு. இரத்தினம் கேட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இதற்கான உத்தரவு கடந்த மாத இறுதியில் வெள்ளவத்தை அஞ்சலகத்திற்கு அனுப்பப்பட்ட பொழுது, அஞ்சலகத்தைச் சேர்ந்த சிங்கள அதிகாரிகள் சிலர் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்களாம். தபால் அமைச்சர் இவர்கள் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார். கொள்ளுப்பிட்டித் தபால் நிலையத்திலும் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தபால் அமைச்சர் கடந்த பாராளுமன்ற அரசாங்கக் கட்சிக்கூட்டத்தில் திரு. இரத்தினத்திடம் கூறியுள்ளாராம்.

வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள தமிழ் மக்கள் தமிழ்த் தந்திகளையும், பதிவுக் கடிதங்களையும் வெள்ளவத்தை அஞ்சலகத்தின் மூலமே அனுப்பலாம். கொழும்பு நகரின் ஏனைய பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைக்காத சலுகை ஒன்று வெள்ளவத்தையில் வாழும் தமிழர்களுக்கு இப்பொழுது கிடைத்திருக்கிறது.

## "மூவர்ண வேட்டி"

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூவர்ணங்களை கரைகளாகக் கொண்ட வல்வை நெசவு ஆலையில் நெய்யப்பட்ட வேட்டிகள் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையினால் ஒரு வேட்டி ரூபா 13 சதம் 50க்கு விற்பனை செய்யப்படுகின்றதென்றும் வேட்டி தேவையானோர் 32, காலி வீதி, பம்பலப்பிட்டி சந்திக்கருகாமையிலுள்ள அனந்தா கோப்பரேசனில் பெற்றுக் கொள்ளும்படியும் தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளையின் செயலாளர் திரு இ. சிகமலைநாதன் ஓர் அறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

## அரசியற்கட்சிகளும்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்திருந்தார்கள். இச் சந்தர்ப்பத்தில் சட்ட நிரூபண சபை அமைச்சர்கள் திரு. டி. எஸ். சேனநாயக்கா தலைமையில் இன்றைய அரசியல் அமைப்பு முறையிலுள்ள 29-வது பிரிவைக் கொடுப்பதற்கு தயாராக இருப்பதாகவும் எடுத்துக் கூறினார்கள். 29-வது பிரிவு ஆர்ச் பிஷப், இந்திய அரசாங்கம், திரு. டி. எஸ். சேனநாயக்கா ஆகியோரின் முயற்சியாலேயே எமது இன்றைய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது எனலாம்.

### திரு ஜீ ஜீ. சாட்சியம்

சோல்பரி ஆணைக்குழு முன் சாட்சியமளித்த திரு. ஜீ ஜீ பொன்னம்பலம் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இதுபோன்ற அரச ஆணைக்குழு இலங்கைக்கு வந்து நிலைமையை ஆராய வேண்டுமென்றும் கேட்டிருந்தார். இலங்கை இந்த நூற்றாண்டில் சுதந்திரம் அடையாது என்ற எண்ணத்துடனேயே திரு. பொன்னம்பலம் அத்தகைய ஒரு வேண்டுகோளை விடுத்தார் என்று கருத முடிகிறது. சோல்பரி ஆணைக்குழு முன் திரு. ஜீ. ஜீ. அவர்கள் வாதிட்ட முறை தொடர்ந்து இந்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி நிலவ வேண்டுமென்பதாகவே இருந்தது. எச் சந்தர்ப்பத்திலும் சுதந்திர இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் பூரண சுதந்திர மக்களாக எத்தகைய நெருக்குதலுமின்றி வாழ வேண்டுமென்ற நோக்கத்துடன் திரு ஜீ. ஜீ. வாதிட்டார் என்று கூற முடியாது. அதற்கான பலம் பொருந்திய வாதத்தை அவர் சோல்பரி ஆணைக் குழு முன் வைத்திருந்தார் என்று கூற முடியாது ஆனால் சோல்பரி ஆணைக் குழுவின் முடிவை தமிழ் பேசும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக திரு. சி. சுந்தரலிங்கம் ஏற்றுக்கொண்டமையினால் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இக்கால கட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் தெளிவானதே.

வளரும்

## காணிக்கச்சேரி விசுவமடுக்குளத் திட்டம்

வேலையற்ற இளைஞர்கட்கு விஸ்வமடுக் குளத் திட்டத்தின்கீழ் காணி வழங்கப்படவிருப்பது பற்றிக் கடந்தவாரம் சுதந்திரன் செய்தி வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இத்திட்டத்தின்கீழ் காணி பெறவிரும்பி விண்ணப்பித்தவர்களுக்கான காணிக்கச்சேரி பின்வரும் இடங்களில் உள்ள காரியாதிகாரிகளின் காரியாலயத்தில் குறிப்பிட்ட நாள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

| | |
|---|---|
| கிளிநொச்சி | 29-3-66 |
| துணுக்காய் | 30-3-66 |
| தெல்லிப்பளை | 1-4-66 |
| கோப்பாய் | 6-4-66 |
| சாவகச்சேரி | 9-4-66 |
| யாழ்ப்பாணம் | 11-4-66 |
| பூநகரி | 16-4-66 |
| சங்கானை | 18-4-66 |
| பளை | 21-4-66 |
| ஊர்காவற்றுறை | 23-4-66 |
| பருத்தித்துறை | 25-4-66 |
| நெடுந்தீவு | 28-4-66 |

விண்ணப்பகாரர்கள் காணிக்கச்சேரிக்கு நேர்முகமாகச் சமூகம் கொடுப்பதுடன் தங்கள் அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தையும் எடுத்துச் செல்லவேண்டும்.

## இவ்வாரச் செய்திகள்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

### பெப்புரவரி-18-வெள்ளிக்கிழமை

அரசியல் சட்டத்திலிருந்து 29-வது பிரிவை அகற்றக் கோரும் எதிர்க்கட்சியினரின் முயற்சிகளைத் தமிழரசுக் கட்சி முழுமூச்சாக எதிர்க்கும் என்று தமிழரசுத்தந்தை சா. ஜே. வே. ஒரு அறிக்கையில் கூறினார். இந்நாட்டில் சுதந்திரத்தை விரும்பும் எவரும், 29-வது சரத்து தொடர்ந்திருக்க வேண்டும் என்பதை ஆதரித்தே நிற்பர் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கைக்கு 10,000 தொன் அரிசி ஏற்றிவந்த கப்பல் ஒன்று ஜோகூர் நீரிணையில் மற்றொரு கப்பலுடன் மோதி கடலில் அமிழ்ந்துவிட்டது. இதனால் இலங்கைக்கு ரூபா 50 லட்சம் நட்டம் என அறிவிக்கப்பட்டது.

இன்று இந்துக்களின் சிவராத்திரி தினம்.

காஷ்மீரில் 1949ம் ஆண்டிலிருந்த அளவுக்கு படைபலத்தைக் குறைக்க இந்திய—பாகிஸ்தான் இராணுவத் தளபதிகள் ஒப்புக்கொண்டனர்.

இந்தியாவுக்கு அமெரிக்கா 10 கோடி டாலர் கடனை வழங்க முன்வந்திருக்கிறது.

தி. மு. கழகத்தின் தலைவர்களில் ஒருவராகிய திரு. மு. கருணாநிதி, மேமாதம் இரண்டாவது வாரத்தில் மலேசியா செல்ல இருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டது.

### பெப்புரவரி-19-சனிக்கிழமை

தனியார் நிறுவனங்களில் வேலைசெய்யும் 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஊழியர் சேமலாபநிதி வழங்கவேண்டும் என முதலாளிமார்களை நிர்பந்திக்கும் சட்டம் ஒன்றைத் தயாரிக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

உலகின் எப்பகுதியையும் வைத்தகுறி தப்பாது சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகள் தம்மிடம் இருப்பதாக சோவியத் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

சுதந்திர நாகநாடு கேட்டுப் போராடிவரும் நாகா தலைவர்கள் இந்தியப் பிரதமர் திருமதி காந்தியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள்.

### பெப்புரவரி-20-ஞாயிற்றுக்கிழமை

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தமது சொந்தச் செலவில்—வைத்திய பரிசோதனைக்காக நேற்றிரவு அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

பெருகிவரும் மாணவர் தொகைக்கேற்ப பல்கலைக் கழகக் கல்வி வசதிகளை அளிக்கும்வரை லண்டன் பல்கலைக்கழகப் பரீட்சையை மீண்டும் இந்நாட்டில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என ஊர்காவற்றுறை பா. உ. திரு. வ. ந. நவரத்தினம் அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருக்கிறார்.

### பெப்புரவரி-21-திங்கட்கிழமை

கொழும்பில் இரண்டு நாட்களாக நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அரசியற் சட்டத்தின் 29ம் பிரிவை அகற்றும் முயற்சிகளைப் பலமாக எதிர்ப்பதென்று முடிவுசெய்யப்பட்டது.

ஏப்ரல் 10, 11ம் திகதிகளில் நடைபெறவிருந்த தமிழரசு மாநாடு, அவசரகால நிலைமை காரணமாக காலவரையறையின்றி ஒத்திப்போடப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனின் புரட்சிகரமான புதிய பொருளாதாரத் திட்டப்படி சோவியத் மக்கள் அனைவருக்கும், அதிக சம்பளம், குளிர்சாதனப் பெட்டிகள், டெலிவிஷன்கள், கார்கள் ஆகியவற்றை அளிக்க முடியும் என்று சோவியத் யூனியன் இன்று அறிவித்தது.

'இந்திப் பிரச்சினையில் காங்கிரஸ் ஆட்சி சரியான முறையில் நடக்காத ஒரே காரணத்தினால் மட்டுமே அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரசைத்தோற்கடிக்க முடியும்' என்று ராஜாஜி கூறியிருக்கிறார்.

### பெப்புரவரி-22-செவ்வாய்க்கிழமை

கடந்த டிசம்பரில் பேராதனையில் நடைபெற்ற அசம்பாவிதங்களையொட்டி ஐந்து பல்கலைக்கழக மாணவர்கள் தற்காலிகமாக விலக்கப்பட்டனர். அவர்களில் தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவின் புதல்வரும் ஒருவர்.

மட்டக்களப்பில் இ. ப. தொ. கழகத்தின் கூட்டத்தில் [illegible] டாக்டர் இ. மு. வி நாகநாதன், மார்க்சியவாதிகளின் தொழிற்சங்கத்தால், தமிழ்பேசும் மக்களுக்குப் பயன் இல்லையென்பது தெரிந்துவிட்டதால், அவர்கள் மொழிவழித் தொழிற்சங்கங்களில் உடனடியாகச் சேரவேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்

ஜீ. ஸீ. ஈ. பாட புத்தகங்கள்
கல்விப் பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சைக்கான பாட நூல்
'கந்த புராணம்'
(உற்பத்தி காண்டம்)
காமதகனப் படலம் — மோன நீங்கு படலம்
தவங்காண் படலம் — கணங்கள்செல் படலம்
வரைபுனை படலம் — மணம் பேசு படலம்
ஆகிய படலங்களில் உள்ள செய்யுட்களுக்கான பதவுரை—பொழிப்புரை முதலியவற்றைக் கொண்ட நூல்
உரையாசிரியர்:-
பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
விலை ரூ. 3-75 தபாற் செலவு சதம் 75 தனி.
வியாபாரிகளுக்கு கழிவு உண்டு
★ மார்க்கண்டேயப் படலம் விலை 4-00
நவலட்சுமி புத்தகசாலை,
136 (S) செட்டியார் தெரு, கொழும்பு-11.

**சமூகத்தின் புரையோடிய புண்ணைச் சுட்டிக் காட்டி, சிந்திக்க வைக்கிறது, இக் கதை;**

**சீனிக்குட்டியின் அறியாமையை கந்தசாமி போன்ற 'வெறித் தம்பி'கள் பயன்படுத்திக் கொள்ளும் பரிதாபத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறார், 'கோபதி'.**

# மனமாற்றம்

குட்டியனின் நிசப் பெயர், சீனிக்குட்டி, அந்த இனிப்பான பெயர், எக் காரணங் கொண்டு முன்புறத்தால் வெட்டப்பட்டும் பின்புறத்தில் ஒட்ட வைத்தும் இப்படிக் கசப்பான உருவமெடுத்தது என்ற உண்மை யாழ் மண் வாசனை கமழும் எவருக்கும் விளங்கும். கொட்டில் எல்லைக்குள் நிற்கும்போது எவரும் அவனைச் 'சீனிக்குட்டி' என்றே அழைப்பார்கள். கொட்டிலிலிருந்து எட்டப் போனாலும், மனிதனை மனிதனாக மதிக்கும் பண்பு மிககவர்கள் 'சீனிக்குட்டி' என்றே பேசிக்கொள்வர். மற்றவர் 'குட்டியன்' என்பது மரபு.

சீனிக்குட்டியின் கொட்டிலுக்கு விஜயஞ் செய்வோரை 'கடன் இல்லை' என்ற பதம் பொறித்த அட்டையொன்று வாசலில் வரவேற்கும் மாதக் கணக்கில் கடனுக்குக் குடித்து வருபவர்களுக்கும், நாணயமுள்ள குடிகாரரிடம் நாணயமில்லாத சமயங்களில் அவர்கள் கடன் சொல்லும் போதும், இந்த விளம்பர அட்டை விதி விலக்கு!

கந்தசாமி உயர் சாதி என்று தம்மைக் கூறிக் கொள்ளும் இந்துக் குடும்பமொன்றில் பிறந்தவன். ஆனால் ஒழுக்கத்தில் அவன் உயரவில்லை. தேகச் சூட்டைத் தணிப்பதற்காக, அவன் தனது பெற்றோரின் சம்மதத்துடன் பருக ஆரம்பித்த பானங்கள், காலப்போக்கில் தாகம் எடுத்த நேரமெல்லாம் அவனுடைய மனதின் முன் நர்த்தனமாடத் தொடங்கிவிட்டது!

அன்று கந்தசாமி சீனிக்குட்டியின் தண்ணீர்ப் பந்தலில்' தாகசாந்தி செய்து கொள்வதற்காகப் போயிருக்கிறான்.

'சீனிக்குட்டி ஒரு தென்னை கொண்டுவா'

'அண்டையில் இரண்டு போத்தல் காசும் வைச்சாத்தான் இணைடைக்குக் கிடைக்கும்'

'காசு கிடக்கு ஒரு தென்னை கொண்டுவா சீனிக்குட்டி'.

'எங்கை இப்படிக் காசை வையும்' என்று கையை நீட்டினான் சீனிக்குட்டி,

'இதென்ன நம்பிக்கையில்லாமல் கதைக்கிறாய் இந்தா' என்று கூறியவாறு மடியிலிருந்த சில்லறை நாணயங்கள் அத்தனையையும் எடுத்துச் சீனிக்குட்டியின் கையில் திணித்தான் கந்தசாமி.

சில்லறை நாணயங்களைப் பக்குவமாக எண்ணி முடித்த சீனிக்குட்டி,

'சரி, ஒரு ரூபா இருபது சதமிருக்கு, அண்டையில் இரண்டின் காசும் சரி, இப்ப தாறத்துக்குக் காசை வையும்' என்று கையை நீட்டினான்.

'ஒண்டு கொண்டுவா நாளைக்குத் தாறன்'

'ச்ச, ச்ச, அந்த போட்டைப் பாரும், அதையும் மீறி உயக்கொரு ஆளுக்குத்தான் நான் கடன் தாறது; மற்றநாள் தாறனென்டு சொன்ன காசை ஒரு கிழமை கழிச்சு இப்ப தாறிர். இந்தக் காசும் எப்ப தருவீரோ? இனிமேல் கடன் எண்ட பேச்சில்லை' என்று நெஞ்சைக் கல்லாக்கிக் கூறிவிட்டான் சீனிக்குட்டி.

'உன்னுடைய நாளைக்குத் தாறன் ஒன்று கொண்டுவா' நாவிற்கு அடிமைப்பட்ட கந்தசாமியுடைய நப்பாசையின் எதிரொலி

இல்லை என்பதற்கு அறிகுறியாகச் சீனிக்குட்டியின் சிரம் பக்கவாட்டில் மூன்று நான்கு முறை அசைந்தது!

விலை மாது ஒருத்திக்குப் பணத்தை அள்ளி அள்ளி வீசிய பின்னும் இன்பம் நுகர முடியாத முழு ஏமாற்றம் கந்தசாமிக்கு! பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற வெறி அவனுடன் கூடச் சென்றது!

**''கோபதி''**

சீனிக்குட்டிக்கு உள்ளது ஒரே ஒரு மகன். அதுவும் விவாகமாகிப் பன்னிரண்டு வருடங்கள் குழந்தையில்லாமல் தவங்கிடந்து பதின்மூன்றும் வருடம் அருமையாகப் பிறந்த பிள்ளை, அந்தக் குழந்தைக்கு 'அருமைத்துரை' என்று பெயரிட்டனர் பெற்றோர்.

வருடங்கள் ஐந்து உருண்டன. ஆரம்பக் கல்விக்காக அருகாமையிலிருந்த தமிழ்க் கலவன் பாடசாலையொன்றில் மகனைச் சேர்த்தான் சீனிக்குட்டி, 'அருமைத்துரை ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகத் தேறிக்கொண்டே வந்தான். அவனுக்கு ஒன்பது வயது பூர்த்தியாகும் போது, தமிழ்ப் பாடசாலையிலுள்ள கடைசி வகுப்பான ஐந்தாம் வகுப்பிலும் சித்தியடைந்துவிட்டான்,

பிறகு—

அருமைத்துரை, கிறிஸ்தவ மதத்திலும், உடுவில் ஆங்கில பாடசாலையிலும் சேர்ந்து வருடங்கள் ஆறு நகர்ந்துவிட்டன. அவன் ஆங்கில சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்குப் தோன்ற வேண்டிய காலமும் வந்தது. பரீட்சைக்கு மனுச் செய்வது சம்பந்தமாக, பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று வேண்டுமென்றார் பாடசாலை அதிபர். சீனிக்குட்டி இரண்டு ரூபாக்களுக்கு முத்திரையொட்டி, மகனின் பிறப்புச் சான்றிதளுக்கு மனுச் செய்திருந்தான்.

இரண்டு வாரங்கள் கழித்துத் தபாலில் வீடு தேடி வந்திருந்த பிறப்புச் சான்றிதழில் தங்கள் தவப் புதல்வனுக்கு ஆசையுடன் சூட்டிய நாமம் உருவிழந்திருந்ததைக் கண்ட பெற்றோரின் உள்ளங்கள் வெதும்பின! பிறப்புச் சான்றிதலின் பிரகாரம் 'அருமைத்துரை' 'துரையன்' என்று காட்சி அளித்தான்.

சந்தர்ப்பவசத்தால், 'வலது குறைந்த' ஒரு சமூகத்தில் பிறந்ததைத் தவிர வேறோர் குற்றமுமறியாத அந்தத் தம்பதிகளின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தோடியது!

'பிரதம பதிவாளருக்கு மனுச் செய்தால் பெயரை மாற்றிவிடலாம், என்று யாரோ ஒருவர் கூறிய ஆறுதல் வார்த்தையில் சாந்தி அடைந்தனர் சீனிக்குட்டியும் மனைவியும்.

சீனிக்குட்டி, வெள்ளை வேட்டியும் நீளக் கைச் சட்டையும் அணிந்திருந்தால், அன்று அவன் தனது கிராமத்திற்கு வெளியே புறப்படுகிறான் என்று அர்த்தம். அன்றும் சீனிகுட்டி, வெள்ளை வேட்டியும் நீளக் கைச் சட்டையும் அணிந்துகொண்டு மகனின் பெயர் மாற்ற விசயமாகக் கச்சேரிக்குப் பயணமானான். சுண்ணாகத்திலிருந்து பஸ்ஸில் புறப்பட்ட சீனிக் குட்டியைக் கவனித்த கந்தசாமி, சீனிக்குட்டிக்குத் தெரியாமல் அவனைப் பின் தொடர்கிறான்.

காலையில் சுமார் எட்டரை மணியளவில் புறப்பட்ட சீனிக்குட்டி, கச்சேரியில், மகனின் பெயர் மாற்றத்திற்கு மனுச் செய்யும் விசயத்தை முடித்துக் கொண்டு பெரிய கடை வந்தடைய பிற்பகல் இரண்டு மணியாகி விட்டது.

**எமது சிறுகதை**

காலையில் வெறும் தேனீர் மட்டும் அருந்திவிட்டு வந்த சீனிக்குட்டிக்கு, பசியும் தாகமும் உடலைப் பிடுங்கித்தின்றன. அந்தி வெயிலின் வெப்பத்தால் அணிந்திருந்த சட்டையை வியர்வை நனைத்துவிட்டபடியால், சட்டையின் கைகளைச் சிறிது மடித்துவிட்டுக் கொண்டான். நாவோ வறண்டுவிட்டது. தாகத்திற்கு ஏதாவது பருகாவிட்டால் மயக்கம் போட்டுவிடக் கூடிய நிலை!

'தானும் மனிதன் என்ற சுயமரியாதையைக் காப்பாற்றி, குட்டு வெளிப்பட்டால் நையப்புடைக்கப்படும் அபாயத்தையும் எதிர் நோக்கி, ஒரு தேனீர்ச் சாலையினுள் புகுந்து சமமாக அமர்ந்து ஏதாவது பருகித் தாகத்தைத் தீர்த்துக் கொள்வதா?' அல்லது 'மிருகமாக ஒரு தேனீக்கடைக்கு வெளியில் நின்று போத்தலில் ஏதாவது பானம் பருகுவதா?' என்ற இரு கேள்விகள் சீனிக்குட்டியின் முன் தோன்றின!

முன்னைய அபாயகரமான முயற்சியையே தேர்ந்தெடுத்து, ஒரு தேனீர்க் கடையினுள் பிரவேசிக்கும் போது, மடித்துவிடப்பட்டிருந்த தனது சட்டையின் கைகளை நீட்டிப் பொத்தான்' பொருத்திக் கொண்டான் உள்ளே சென்றவன் ஒரு நாற்காலியில் அமர்ந்ததும், சிப்பந்தி ஒருவன் ஓடோடி வந்து 'என்ன சாப்பிடுகிறியள்' என்று அன்பாக விசாரித்தான்.

சீனிக்குட்டி சுருக்கமாக முடிக்க எண்ணி,

'ஒரு பால்த்தேத்தண்ணி' என்றான்,

வியாபாரத் தந்திரம் தெரிந்த கடைச்சிப்பந்திக்கு சீனிக்குட்டியின் சாதி தெரிந்திருந்தால் திரும்பவும்,

'சாப்பிடுவதற்கு என்னண்ணை கொண்டுவர' என்று அன்பாகவும் பண்பாகவும் கேட்டிருக்கமாட்டான்.

'வந்து முடிஞ்சுதாம் இனிக்குடிச்சாலும் சாப்பிட்டாலும் ஒண்டுதான்' என்று எண்ணிய சீனிக்குட்டி,

'இரண்டு உழுந்துவடை கொண்டாருங்கோ என்றான் சிலவினாடிகளால் சூடான உழுந்து வடைகள் இரண்டு சீனிக்குட்டிக்கு முன் மேசையில் வைக்கப்பட்டன.

ஒருபக்கம் மிதமிஞ்சிய பசி, மறுபக்கம் தன்னைத் தெரிந்தவர் யாராவது காணமுன் புறப்பட்டுவிட வேண்டும், என்ற இரு காரணங்களினாலும், வைத்த இரு வடைகளையும் நொடிப் பொழுதில் சாப்பிட்டுவிட்டுக், கடைச்சிப்பந்தியைத் தேடிநோட்டம் விட்டபோதுதான், முதலாளியின் மேசையருகில் தனக்குத் தெரிந்த ஒரு உருவத்தைக் கண்டான் சீனித்தம்பி, மறுகணம் அவ்வுருவம் கடையை விட்டு வெளியே சென்றுவிட்டது. சீனிக்குட்டிக்கு அவன் சாப்பிட்ட வடை உடனே செமித்துவிட்டது; முகத்தில் முத்துக்களாய் வியர்வை சுரும்பின.

திரும்பிவந்த கடைச்சிப்பந்தி, மேலும் மூன்று உழுந்து வடைகளையும் இரண்டு கப்பல் வாழைப் பழங்களையும் சீனிக்குட்டியின் முன் வைத்து விட்டு, 'நல்ல பசிபோலையிருக்கு நல்லாய்ச் சாப்பிடுங்க அண்ணை" என்றான்.

'இதென்னடாப்பா புதுமுறையாக உபசரிக்கிறுங்க, சாப்பாடு வயிறு நிறையத் தந்திட்டுத்தான் உதைக்கப் போறுங்களாக்கும், ஏதோ நடப்பது நடக்கட்டும்' என்று எண்ணியவாறு, வடைகளை ஒன்றன்பின் ஒன்றாக உள்ளே செலுத்திக் கொண்டேயிருந்தான் சீனிக்குட்டி, பிறகு வைத்த வடை மூன்றையும் 'தீர்த்துக்கட்டியதும் பால்க்கோப்பி வந்தது மேசையில் சீனிக்குட்டிக்கு வயிறு நிறைய நிறையப் பயமும் அதிகரித்துக் கொண்டே போனது. மனத்தை ஒரு விதமாகத் தேற்றிக்கொண்டு காப்பியும் குடித்து முடிந்ததும், கணக்குத் தீர்ப்பதற்காக முதலாளியின் மேசையருகில் சென்று, 'கணக்கு எவ்வளவு' என்றான் சீனிக்குட்டி.

'அதெல்லாம் உங்களுக்குத் தெரியாமலே, உங்க சிநேகிதர் ஒருவர் கட்டிவிட்டுப் போட்டார் நீங்க போங்க' என்றார் முதலாளி. தனக்காகப் பணங்கொடுத்தது, சற்று முன்பு முதலாளியின்மேசையருகில்நின்று விட்டுச் சென்ற கந்தசாமி என்று அறிந்ததும் சீனிக்குட்டிக்கு எல்லாம் ஒரே குழப்பமாயிருந்தது!

'பகைவனுக்கு நன்மை செய்யும் அளவிற்குத் திருந்திவிட்டானா கந்தசாமி? அன்றிச் சமூகமே மாறிவிட்டதா? அல்லது நான்தான் மாறிவிட்டேனா?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான் சீனிக்குட்டி 'அன்று தான் கடன்காசைப் பெற்றுக் கொண்டு அவனுக்குக் கடனுக்குக் கள் கொடாது அனுப்பிய குற்றத்திற்கு, தர்மமான மனிதாபமான— நாகரீகமான முறையில் தண்டனை கொடுத்துவிட்டானே கந்தசாமி!' என்று அவனுடைய உள்ளம் அழுதது!

அன்று வெள்ளிக்கிழமை சந்தை நாள் சுண்ணாகச் சந்தை மனித வெள்ளத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது! காய்கறி வாங்குவதற்காகச் சந்தைக்குச் சென்ற சீனிக்குட்டி, தற்செயலாகக் கந்தசாமியைச் சந்திக்கிறான். கந்தசாமியின் தோள்களைத் தனது வலக்கரத்தால் அணைத்தவாறு

'தம்பி என்னுடைய கொட்டிலுக்கு ஒரு தரம் வந்திட்டுப்போக வேணும் என்று இரங்கினான் சீனிக்குட்டி.

கந்தசாமிக்குத் தன் காதுகளையும் கண்களையும் நம்ப முடியவில்லை.

'ஏன் நீதானே கடன் குடுக்கிறதில்லை' என்றான்

'தம்பி அண்டைக்கு நடந்ததை மன்னிச்சிடும், ஏதோ தவறுதலாய்ச் செய்திட்டன்'

கந்தசாமிக்கு மேலும் குழப்பமாயிருந்தது. அவன் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிக் கடத்தவே பார்த்தான், ஆனால் சீனிக்குட்டி விட்டபாடில்லை.

(14-ம் பக்கம் பார்க்க)

# உயிர் வாழும் நாளில் இறப்பையும் ஞானிகள் அனுபவிப்பர்

## இறப்பு என்பது அறிந்தவை நீற்பே

[redacted]சக்தீ அ. பாலையா

கருத்துமேடை —[5]— வள்ளலார் மறைவு

'ஆண்டவன் வந்தருளுந் தருணைதனில் செத்தவர்களையெல்லாம் எழுப்பி சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தைச் சாருபபடிச் செய்வார்' என்றும் அடிகள் கூறினார். இது பற்றி 30-3-1871ல் சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாநுக் கட்டளை என்னுந் தலைப்பிட்டு அடிகள் வெளியிட்டுள்ள பிரகரத்தில்:-

'...எனது தந்தையராகிய எல்லாம் வல்ல திருச் சிற்றம்பலக் கடவுள் பார்வதிபுரம் சமரசவேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு எழுந்தருளி காட்சி கொடுக்குந் தருணம் மிகவும் அடுத்த சமீபமாக இருக்கின்றது. அந்தத் தருணத்தில் சாலைக்கு உரியவர்களாயிருந்து இறந்தவர்களையெல்லாம் எழுப்பிக் கொடுத்தருளுவார். இது சத்தியம். சத்தியம். (வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு 3-ம் பதிப்பு பக்கம் 383). என்பதை வைத்து வள்ளலாரே தமது சித்தின் மகிமையால் செத்தாரை எழுப்பித் தருவதாகக் கொள்வது பொருந்தாது.

கருணையால் கனிந்திருந்த வள்ளலாற்பெருமான், தாமறிந்த உண்மைகளை பிறரும் அறிந்து அருட்பெருஞ்சோதி ஆண்டவனை அடையவேண்டுமெனவே விரும்பினுர். ஆனுல் அம் மகா ஞானியைப் புறக்கணிப்பதிலேயே மதவாதிகளிருந்தமையால், தாம் மேலும் காத்திருக்க விரும்பினுரில்லை போலும். ஆதலின் வள்ளலார் அற்புதங்கள் செய்யப்புறப்பட்டுத் தோற்று விட்டார் என்பது ஒவ்வாத கருத்து.

### மறைமலை அடிகள் கருத்து

வள்ளலாரின் மறைவு குறித்து ஆங்கிலத்தில் மறைமலை அடிகள் டயறிக் குறிப்பில் எழுதியிருந்ததை ஆராய்வு முடிபு எனக் கொள்ள முடியாது. தாம் கேள்விப்பட்டதையே அவர் குறித்து வைத்திருக்கவேண்டும். ஆராய்ந்திருப்பாரானல் வரலாறு அவரால் உருவாகியிருக்கும். அந்த டயறிக் குறிப்பின் தமிழ் மொழி பெயர்ப்பில்.

'சுவாமிகள் உண்மையில் இறந்துவிட்டார். அவர் எலும்பை ஒரு மட்பாண்டத்திலிட்டு ஞானசபையின் அடியில் ஒரு சிறு அறையில் வைக்கப்பட்டது. அவர் அற்புதங்கள் செய்து தோற்றுவிட்டார்' என்றும் மறைவான (இரகசியம்) செய்திகளை அறிந்தேன்' எனக் காணப்படுவதாக ஈழவேந்தனின் கட்டுரை கூறுகிறது

மேற்கூறிய கருத்து மறைமலை அடிகளார் கேள்விப்பட்டதன் குறிப்பு. அதுவும் வள்ளலார் மறைந்து 38 ஆண்டுகளுக்குப்பின் அவ்வூர் முதியவர் பலரிடம் பல கேள்விகள் கேட்டு ஒரு முடிவுக்கு வந்தார் மறைமலை அடிகள் என்பதும் நமக்குப் புரியாமலில்லை.

வள்ளலாரைப் பற்றிய உண்மைவரலாறு வெளிவராமல் அவர் வாழ்ந்த காலத்திலேயே கட்டுக் கதைகளைச் சமயவாதிகள் மக்களிடம் வளர்த்து வந்துள்ளனர் என்பதை வலியுறுத்தினேம். ஆதலால் அந்தக் கருத்து வேறு விதமாக இருக்க முடியாதல்லவா!

### திரு. வி. க. கருத்து

இது தவிர மருட்பாக் குழுவில் வள்ளலாருக்குஎதிராகப் பிரச்சாரஞ் செய்த திரு. வி. க. கூறுகிறுர்......

'சாகாநிலையென்னும் ஒரு நிலையுண்டு என்பது எனது ஆராய்ச்சியில் விளங்கிய உண்மைகளுள் ஒன்று. அது குறித்து எனக்கு ஐயமாதல், திரிபாதல், மயக்கமாதல் இல்லை. அந்நிலையில் எனக்கு உறுதியுண்டு......சாகாநிலை பற்றி இது போழ்து எனக்கு எவ்வித ஐயப்பாடுமில்லை, சாகாநிலையென்னும் பெருநிலை ஒன்று உண்டு. அது குறித்து எவரும் ஐயுறுது உறுதிகொண்டு அந்நிலையெய்த உழைக்க விரைந்து எழுங்கள்! எழுங்கள்!!'

(வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு பக்கம் 439:- (இராமலிங்கர் திருவுள்ளம். பக்கம்:- 102).

மேலும்:-

ம. பொ. சி. அவர்களின் நூலில்:-

ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சகோதரர்களே!

'நாம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனின் ஆணைப்படி கடையை விரித்தோம்; கொள்வாரில்லை; கட்டிவிட்டோம். ஆதலால்இனிஇரண்டரைக் கடிகை நேரம் உங்களுடைய ஊனக் கண்களுக்குத் தோன்றமாட்டோம். நீங்கள் இந்தத் தீபத்தினைக் கடவுள் எனக்கொண்டு ஜீவகாருண்ய நெறியில்வழிபட்டு உய்யுங்கள். பிறகு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வருவார். அப்போது பல அற்புதச் சித்தக்களை நிகழ்த்துவார். திருவருட் செங்கோலாட்சி செலுத்துவார். அகவினத் தார்களுக்குச் சாகாவரமும் ஏனையோருக்குப் பரியாக நிலையையும் அளிப்பார்.'

(வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு:- பக்கம்-399.)

என்னும் போதனையிலிருந்து வள்ளலார் ஒரு மகா சித்தர் என்பதையும், ஜீவன் முக்தர் என்பதையும் காண்கிறேம். இத்தனை சித்துக்கள் கைவரப்பெற்ற வள்ளலார் ஏன் இறந்தவர்களை எழுப்பவில்லை என்று கேட்கப்படுகிறது. இந்தக் கேள்வி எங்கிருந்து யார், யார் வாயிலிருந்து, எந்தச் சூழலிலிருந்து என்பதைச் சிந்திக்கவேண்டும். வள்ளலார் பெருமானின் சத்தியவாழ்வையும், சத்திய போதனைகளையும், இறைவன் ஒரு பொது என்ற கருத்தையும் மூடபக்தியில் மூழ்கிக் கிடக்கும் எந்தக் கும்பல்கள் மறுக்கின்றனவோ அந்தக் கும்பலின் கேள்வியாகத்தான் இது இருக்க முடியும்.

மகா ஞானிகள் தன்னடக்கமிக்கோராவர். தாம் அடைந்த சித்திகளை வீண் விரயம் செய்யார்கள் என்பதை அறிந்தும் 'வள்ளலார் தமது சித்துக்களால் 'ஏன் செத்தாரை எழுப்பவில்லை' எனக் கேட்பவர்கள் சாவை அறியாதவர்[illegible]த்து என்பதை ஜாலவித்தை என்று கருதும் மனிதர்களே இதனைக் கேட்டதாகக் கருதுதல் வேண்டும்.

வள்ளலாரின் உண்மைஉள்ளத்தைப் புரிந்துகொள்ளாதவாறு செய்யப் பண்ணியவர்கள் செத்தாரை எழுப்பினுல் மட்டும் உண்மை என நம்புவாரா? அப்படி அவர் செய்திருந்தால் இறையருளைத் துஷ்பிரயோகம் செய்ததாகவே இருக்கும். அதனுற்றுன் இறந்தவரை எழுப்பும் தருணத்தின் முன்னரே வள்ளலார் மறைந்து விட்டார். இதனுல் வள்ளலார் தோற்றுவிட்டார் என்பதற்கில்லை. அப்படியானுல் தேவாரம்' திருப்பதிகங்கள்பாடிய நமது நாயன்மார்களும் தோற்றுப்போனதாகவே நாம் காணலாம்.

### ஏது இறப்பு?

இன்று நம்மிடையே வாழும் பரமஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி இறப்பு என்பதைப்பற்றி என்ன சொல்கிறுர் என்பதைப் பார்ப்போம்:-

'இறப்பு என்பது என்ன? அறிந்தவையாவும் முற்றுக நீற்றுப் பெறுவதே இறப்பு. அறிந்தவை அனைத்தும் நீற்றுப் பெறவில்லையானுல் அது இறப்பன்று. இறப்பைப்பற்றி முன்கூட்டியே அறிந்திருந்தால் இறப்பைப்பற்றிய அச்சம் வேண்டியதில்லை, ஆனுல் இறப்பைப்பற்றி தெரிந்து கொண்டுள்ளீரா? உயிரோடிருக்கும்போதே முடிவற்றதான இப்போராட்டத்திற்கோர் முடிவைக்கண்டு அநித்தியத்திலிருந்து நித்தியத்தை அறிய முயன்றுள்ளீரா?

'உயிருடனிருக்கும்போதே இறப்பு என்னும் அறிதற்கரிதான நிலையைத் தெரிந்து கொள்ள முடியுமா? இறப்பின் பின் என்ன நடக்கப் போகிறதென்றும், நூல்களில் படித்தவைகளையும், உள்மனத்தின் ஆசைக்கனவுகளையும், அல்லது அந்நிலையின் அனுபவத்தையும், விளக்கங்களையும் மனத்திலிருந்து அகற்றும் நிலையை உம்மால் அடைய முடிகிறதா? அப்படி அந்நிலையை இப்போது அனுபவிக்க முடியுமானுல் உயிர் வாழ்வதும்—இறப்பதும் ஒரே தன்மையுடையனவாகும்.

'அப்படியானுல் சிறந்த கல்வியும், அறிவும், பல்வேறு அனுபவங்களும், போராட்டங்களும், நேசமும், வெறுப்பும் உடையவனுக இருக்கும் நான், அந்த 'நான்' என்ப

(14ம்- பக்கம் பார்க்க)

# கொட்டாவி வருவது ஏன்?

## உங்கள் நோய்

பதிலளிப்பவர்:
**வைத்திய கலாநிதி நா. கந்தையா**

எஸ். என். கே. பி. சுந்தரம், பதுளை.

கே: 'மணிமாந்திர ஔஷதம்' என்ற வாக்குக்கு அமைய சித்த வைத்திய முறைக்கு சோதிடமும் மந்திரமும் கைக்கொள்ளப்பட வேண்டுமா?

ப: தமிழர் வைத்தியமாகிய சித்த வைத்தியத்தில் மணி-மந்திர-ஔஷதம் என்ற முப்பிரிவும் அடங்கும். ஆனுல் பொதுவாகஇப்போது ஔஷதமுறையே ஆக்கபூர்வமாக இருக்கின்றது. இதற்கென அரசாங்கங்கள் தகுந்த நடவடிக்கைகள் எடுத்தும் வருகின்றன. மற்றைய இரண்டும் தனிப்பட்டோரின் முயற்சியால் நடைமுறையில் சாத்தியமாகிக் கொண்டு வருகின்றன. எனவே இவற்றின் சரியான கணிப்புகள் கணிக்கப்பட்டு அத்துடன் ஔஷதப் பிரயோகமும் பிரயோகிக்கின் எவ்வகை ரோகமும் அஃதாவது, கன்மரோகம், பேய் பிசாசு, வைசாகமும் முதலிய வற்றால் ஏற்படும் ரோகங்கள், வாத பித்த கபமாகிய முத்தோஷவயப்பட்ட ரோகங்கள் ஆகந்துக காரணங்களினுல் ஏற்படும் ரோகம் முதலியவை மிகமிக ஆச்சரியப்படும் வகையில் சுகப்படுமென்பது கண்கண்ட உண்மையாகும்.

செல்வி. இ. பாலசுந்தரி, அளவெட்டி.

கே: என் வயது இப்போது 18. 12 வயதில் புஷ்பவதியாகி விட்டேன். அன்று தொட்டு மாதவிடாய் ஏற்படுகின்றது. ஆனுல் நன்றுகப் படுவதில்லை. உடம்பும் பருத்துவிட்டது. பலரிடம் வைத்தியம் செய்[illegible] பயனில்லை. இதற்குரிய சிகிச்சை முறை கூறுவீர்களா டாக்டர்?

ப: இன்றைய உலகில் இளம் சுந்தரிகளுக்கு ஏற்படும் இக்கட்டான நிலை இது. காரணம் அவர்கள், வேலைசெய்வதில்லை. நன்கு சரீரம் வளைந்து வேலைசெய்தால் இவைகள் ஏற்படாது. சதா நாற்காலி நங்கைகளாக வாழ்வோர் வாழ விரும்புவோர்களும், போஷாக்கான உணவின்மையாலும் இது ஏற்பட ஏதுவுண்டு.

எனவே வீட்டில் நிறையவேலை செய்வதுடன், நல்ல உணவும் எடுக்கவும். உணவுவகையில்,சீரகம், பூண்டு, பெருங்காயம், மல்லி, இவைகளைச் சேர்த்தல் அவசியம்.

மாதவிடாயாகும் காலங்களில் குறிஞ்சாய் இலை சேர்த்த பிட்டோ, களியோ, தாராளமாகப் பாவிக்கவும் இது கசப்பாயிருந்தாலும், வியப்பானகுணத்தைக் கொடுக்கும்.

க. அ. லிங்கம், பருத்தித்துறை.

கே: வயது 18 எப்பொழுதும் என் முகம் வியர்த்துக்கொண்டு இருக்கின்றது. இதைக் குறைக்க தங்கள் ஆலோசனை [illegible]ரவும்.

ப: சிலருக்கு உடல் பெலவீனம் அடைந்திருப்பதினுலும் சிலருக்கு உரோமமுள்ள, அஃதாவது கமக்கட்டு, முகத்தில் மீசை, தாடியுள்ள பகுதிகளிலும் வியர்வை ஏற்படலாம்.

முன்னவை காரணமாகஇருந்தால், தகுந்த சத்துள்ள ஆகார வகைகள் நன்று.

அமுக்கரா கிழங்கை தோல் நீக்கி காயவைத்து இடித்துத் தூள் செய்யவும். இதில் வெரிகடிப் பிரமாணம் பாலில் இட்டு காலை மாலை குடித்துவரின்நல்ல குணம் கிடைக்கும். அத்துடன் காலை மாலை குளிப்பு நன்று.

செல்வி. செ. தவபாக்கியம், பெரியபளை.

கே: 16 வயதுடைய எனக்குசுமார் மூன்று வாரகாலமாக படிக்கும்போது கொட்டாவி வருகின்றது. இதனுல் படிக்க முடிகின்றதில்லை. தயவுசெய்து தக்க ஆலோசனை கூறவும்.

ப: படிக்குமிடம் தகுந்த காற்றோட்டமுள்ளதாகவும், வெளிச்சம் உள்ளதாகவும் இருத்தல் அவசியம். அன்றியும் இடைக்காலங்களில் மனதுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டு திடீரென அது மாறி விடுவதனுலும் இக்கால ஆண் பெண் இருபாலருமாகிய மாணவ மாணவிகளை வாட்டுகின்றது எனலாம் எனவே அதிகமான இன்பப் போதைகளுக்கு நெஞ்சில் இடங்கொடுப்பதையும் தவிர்த்தல் அவசியம். இவ்விதமான காரணங்கள் இல்லாவிட்டால் இன்னொரு மாணவியையும் சேர்த்துக்கொண்டு படித்தல் சிறந்த பலனைக் கொடுக்கும். ஏனெனில் சில சிக்கலான விஷயங்களைத் தீர்த்துக்கொள்ளலாம் அல்லவா?

## ஆடவர்களுக்கு மட்டும்....

கல்யாணம் கட்டப் போகும் ஆடவர்களே! ஆண்மைக் குறைவை நிவர்த்தி செயது நீடிய இன்பம் அனுபவிக்க இதோ ஓர் 'இரகசிய மருந்து'. விபரங்கட்கு எழுதுங்கள்.

வைத்தியாச்சாரி
**பி. எம். திசாநாயக்க,**
தபால் பெட்டி : 1281,
கொழும்பு.

## மக்கள் குரல்


(6-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டிருந்தார். இது உண்மையென்றால், கட்டுரையைத் தொகுத்த ஆசிரியர், தேவன் யாழ்ப்பாணம் பற்றி எடுத்துக்கொண்ட கணிப்பிற்கே சவாலாகும்.

கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதனைத் தன் இலக்கிய 'குரு'வாக மதித்து, அவர் சொன்னது உண்மையிற் சரிதானா? ஈழத்து இலக்கியம் அவ்வளவு பின் தங்கிய நிலையில்தான் நிற்கின்றதா என்று சிந்தித்து பார்க்காமல், 'குருக்கள் அல்லவோ திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். அப்படியென்றால் சரிதான்; சரிதான் குருநாதா எனக்கும் விளங்கவில்லைத்தான், எனக்கும் அடிக்குறிப்புத்தான் தேவை என்று 'ஆமாசாமி' போட்டிருக்கின்றார்.

ஈழத்தில் அண்மையில் வெளிவந்த, ஜீவாதாரப்


(13-ம் பக்கம் பார்க்க)



# டிஸ்பிரின்

## வலியிலிருந்தும் காய்ச்சற் குணத்திலிருந்தும் நம்பிக்கையான துரித நிவாரணமளிக்கிறது.

டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உட்கொள்ளுங்கள். அது உங்களுக்கு உடனடி நிவாரணம் தரும்.




விரிவான ஆராய்ச்சிகள் செய்து விசேஷ சேர்வம்சங்கள் கொண்டதாக தனி முறையில் தயாரிக்கப்பட்டது - டிஸ்பிரின். இதனால் தான் டிஸ்பிரின் விரைவாய் இரத்தோட்டத்தில் சேர்ந்து உடன் நிவாரணமளிக்கிறது.

தலைவலி, காய்ச்சற் குணம், உடல் வலி, பல்வலி, மாதவிடாய் முதலியன தரும் வேதனையிலிருந்து விடுபட, டிஸ்பிரின் உட்கொள்ளுங்கள்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் நம்பிக்கையுடன் சிபார்சு செய்வது டிஸ்பிரின்.

டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். அதைத் தண்ணீரிற் கரைத்துக் குடிக்கலாம்; அல்லது வில்லையாகவே விழுங்கி விடலாம்.

றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

J.W.T R.C.91

## இவ்வாரச் செய்தி தெரியுமா?

### பெப்புரவரி-13-ஞாயிற்றுக்கிழமை

புதிய அரசியற் திட்டத்தில் அடிப்படை உரிமைச் சாசனம் ஒன்று அத்தியாவசியமானது என்று தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் கூறியிருக்கிறார்.

இலங்கைக்குகூடியவிரைவில் விஜயம் மேற்கொள்ளுமாறு பிரதமர் டட்லி சேனநாயக்கா இந்தியப் பிரதமா திருமதி. இந்திராவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பர்மியத் தலைவர் ஜெனரல் நீ வின், இன மத ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார்.

பௌத்த பிக்குகள் அரசியலிலீடுபடுவதையும் ஜெனரல் நீ வின் பகிரங்கமாகக் கண்டித்துள்ளார்.

தமிழ்மொழிச் சட்டத்தை நிறைவேற்றியதற்காக தேசிய அரசையும், பிரதமரையும், யாழ் மாநகர சபை பாராட்டியது.

இவ்வருடம் இந்தியாவில் உணவுப் பஞ்சம் ஏற்படாது என உணவு அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அபிப்பிராயம் தெரிவித்தார்.

பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையிலான நீண்ட இடைவெளியை குறுகச்செய்யும் முயற்சியில் காங்கிரஸ் வெற்றிபெறவில்லையென்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராசர் ஒப்புக்கொண்டார்.

இந்தோனேஷியாவில் உள்ள சீன நிருபர் ஒருவரை இந்தோனேஷிய அரசாங்கம் கடுமையாக எச்சரித்தது.

இந்தியாவுக்கான பொருளாதார உதவியை உடன் கொடுத்துதவுமாறு அமெரிக்க சனாதிபதி ஜோன்சனுக்கு இந்தியப் பிரதமர் திருமதி. காந்தி அவசரக் கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார்.

### பெப்புரவரி-14-திங்கட்கிழமை

சனவரி 8-ம் திகதி நடைபெற்ற சம்பவங்களைத் தூண்டியவர்களின்மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்ய தேவையான ஆலோசனைகளை அளிக்குமாறு பொலீஸ் பகுதியினர் அட்டோனி ஜெனரலைக் கேட்டுள்ளனர்.

வடபகுதி வெங்காயத்துக்கு கிராக்கி ஏற்படுத்துவதற்காக அடுத்த மாதம் முதல் பம்பாய் வெங்காய இறக்குமதியைத் தடைசெய்ய வர்த்தக அமைச்சு ஆலோசனை செய்து வருகிறது.

திரு. க. துரைரத்தினம் பா. உ. வின் வேண்டுகோளைத் தொடர்ந்தே அமைச்சு இந்த நடவடிக்கையை எடுக்க இருக்கிறது.

முதலிக்குளத் திட்டத்தின் கீழ் நடைபெறும் காணி வினியோகத்திற்கு திருமலை மாவட்டவாசிகள் மட்டும் மார்ச் 1-ம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கலாம்.

### பெப்புரவரி-15-செவ்வாய்க்கிழமை

இன்று நண்பகல் அமெரிக்காவிடமிருந்து மீண்டும் பொருளாதார உதவி பெறுவதற்கான உடன்படிக்கையில் இலங்கை கையெழுத்திட்டது. இதன்மூலம் 75 லட்சம் டாலர் இலங்கைக்கு கடனாகக்கிடைக்க இருக்கிறது.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு, ஜவுளி, கருவாடு, கொச்சிக்காய் முதலியன அனுப்புவதன்மூலம், இலங்கைக்கு இரண்டுகோடி ரூபா கடன்வழங்க இந்தியா ஒப்புக்கொண்டிருக்கிறது.

கட்சி அரசியல் இலங்கைக்கு ஏற்பட்ட ஒரு சாபக்கேடு என்று திரு. வில்மட் ஏ. பெரேரா அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபரில் இந்தோனேஷியாவில் தோல்வியடைந்த புரட்சியில் சம்பந்தப்பட்ட திரு. என். ஜோனு என்ற கம்யூனிஸ்ட்தலைவர்மேல் இராணுவவிசாரணை ஆரம்பமாகியது.

சோவியத் அரசாங்கத்திற்கு களங்கம் ஏற்படக்கூடிய புஸ்தகங்களை எழுதியதாக இரு ரஷ்ய எழுத்தாளர்களுக்கு சோவியத் அரசாங்கம், முறையே 5 வருடம் 7 வருடம் கடுழியச் சிறைத் தண்டனையளித்தது.

சலிஸ்பிரியில் உள்ள ஒரே ஒரு வார ஏடான 'சன்டே மெயில்' ஏடும், ஏனைய பத்திரிகைகளுடன் சேர்ந்து ரொடீசிய அரசாங்கத்தின் பத்திரிகைத் தணிக்கையை மீறியது.

### பெப்புரவரி-16-புதன்கிழமை

பாடப்புத்தகங்களினதும், மற்றும் பாடசாலை உபகரணங்களினதும், விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புத்தாண்டுக்கு முன்பு கூடுதலாக துணிகளை இறக்குமதி செய்ய கூ. மொ. வி. நடவடிக்கை எடுத்துவருகிறது.

தனிச்சிங்களச் சட்டத்தால், இலங்கையைவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்று சேவைசெய்துகொண்டிருக்கும் அறிஞர்களை மீண்டும் இலங்கை வருமாறு அரசாங்கம் அழைத்துள்ளது.

இந்தோனேஷியாவிலுள்ள 3 கோடி அங்கத்தவர்களைக் கொண்ட கொம்யூனிஸ்ட்கட்சி கலைக்கப்பட்டு விட்டதாக, இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சர் டாக்டர். சுபாந்திரியோ அறிவித்தார்.

### பெப்புரவரி-17-வியாழக்கிழமை

அரசியலமைப்பு மாற்றத்திற்கு எதிர்க்கட்சிகள் கொண்டுவரும் தீர்மானத்தில் தற்போதைய அரசியற் திட்டத்தின் (சிறுபான்மையினருக்கு ஒரேயொரு பாதுகாப்பளிக்கும்) 29-ம் பிரிவை அகற்றிவிடும்படி கோரப்பட்டிருக்கிறது. அத்துடன், செனட்சபையையும்அகற்ற வேண்டும் எனவும் அது கூறுகின்றது.

பிரதமர் டட்லியும், ஜெனரல் நீ வின்னும் விடுத்த கூட்டு அறிக்கையில், ஐ. நா. ஸ்தாபனத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

மார்க்ஸீயத் தொழிற்சங்கங்களை முறியடிக்கும் வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமது தொழிற்சங்கத்தைப் பலப்படுத்த தமிழரசுக்கட்சித் தொழிற்சங்கத்தின் புதிய நிர்வாகச் செயலாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் நடவடிக்கை எடுக்க இருக்கின்றார்.

சீனவுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க இந்தியா என்றும் ஆயத்தமாக உள்ளது என்று திருமதி. இந்திரா காந்தி கூறினர்.

(9-ம் பக்கம் பார்க்க)

# பத்மினி மீண்டும் முன்னணிக்கு வருவாரா?

## சினிமா வட்டாரங்களில் எழுந்துள்ள கேள்வி

பத்மினிக்குத் திரையுலகில் முன்பிருந்த செல்வாக்கு மீண்டும் ஏற்படுமா என்ற கேள்வி இன்று சினிமா வட்டாரங்களில் பரவலாக அடிபடுகிறது. திருமணத்தின் பின்பு படங்களில் நடிக்கப் போவதில்லை யென்றும் அந்நாட்களில் ஒப்பந்தமாகியிருந்த படங்களை திருமணத்தின் பின் முடித்துக் கொடுப்பதற்கு மட்டுமே ஸ்டுடியோக்களுக்குள் நுழைவேன் என்று முன் பத்மினி அறிவித்திருந்தது வாசகர்கள் அறிந்ததே. ஆனால் திரையுலகை விட்டு பத்மினி முற்றுக வெளியேறிவிடவில்லை. சிறிது காலம் ஒதுங்கியிருந்துவிட்டு மீண்டும் சிறிது சிறிதாக படவுலகில் காலூன்றி இன்று பழையபடி படங்களில் நடிக்க ஆரம்பித்துள்ளார்.

ஒரு காலத்தில், தனது ஈடிணையற்ற உணர்ச்சி நிறைந்த நடிப்பினுல் ரசிகர்களின் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டு, தமிழ்த் திரையுலகிலும், இந்திப் பட உலகிலும் தன்னிகரற்று விளங்கியவர் பத்மினி என்பது யாவரும் அறிந்ததே.



ஆனல், அவரது திருமணத்துக்குப் பின்பு, யாது காரணத்தினுலோ, இனிமேல் நடிக்கப் போவதில்லை என்று அறிவித்திருந்தார். சிறிது காலம் ஒதுங்கியும் இருந்தார். பத்மினி பட உலகை விட்டு ஒதுங்கியதும், அவரது உருவம் ரசிகர்களின் மனத்திலிருந்தும், சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தது.

### காட்டு ரோஜா

பழைய படங்களை முடித்துக் கொடுப்பதற்காக மீண்டும் திரையுலகில் புகுந்த பத்மினி, மெல்ல மெல்ல மீண்டும் படவுலகில் காலூன்றத் தொடங்கினர்.

'அன்று போனவள் இன்று வந்து விட்டாள்' என்று பாடிக்கொண்டு காட்டு ரோஜாவில் மீண்டும் தோன்றினர் பத்மினி. ஆனலும் ரசிகர்கள் மத்தியில் அவ்வாருக அது எடுபடவில்லை.

### சித்தி

தற்பொழுது தமிழகத்தில் திரையிடப்பட்டிருக்கும் உணர்ச்சிகரமான 'சித்தி' என்ற திரைப்படம் பத்மினிக்கு மீண்டும் பழைய புகழைத் தேடிக் கொடுத்து விட்டது என்று கூறப்படுகிறது. 'சித்தி' படத்தில் உணர்ச்சியைக் கொட்டி மிக அற்புதமாக நடித்திருக்கிருர் பத்மினி. 'சித்தி' பாத்திரத்தை பத்மினியால் மட்டுமே நடிக்க முடியும் என்ற சொல்லும் அளவுக்கு அவரது நடிப்பு மெய்மறக்கச் செய்கிறதாம். தமிழகத்து ஏடுகள் எல்லாம் அவரது நடிப்பைப் போற்றியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### முன்னணிக்கு வருவாரா?

'சித்தி'யில் கோபாலகிருஷ்ணனின் உள்ளத்தைத் தொடும் கதையும், பத்மினியின் உள்ளத்தை உருக்கும் நடிப்பும்—பத்மினியை முன்னணிக்குக் கொண்டு வரலாம் என்று சொல்லப் படுகிறது.

எம். ஜி. ஆர், சிவாஜி ஆகிய முன்னணி நட்சத்திரங்களுடன் இப்பொழுது பத்மினி நடித்து வருகிருர். இந்திப் படம் இரண்டொன்றிலும், அவர் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



கவர்ச்சிப் பாவை விஜயா இப்படி ஒயிலாக உட்கார்ந்திருக்க, கட்டிளங்காளை முத்துராமன் குனிந்து நின்று காதல் கீதம் இசைக்கிருரோ? இப்பொழுது 2-வது வாரமாக சினிமாஸ் திரைகளில் ஓடிக்கொண்டிருக்கும் 'சர்வர் சுந்தரம்' படத்தில் உள்ளத்தைத் தொடும் ஒரு காதல் கட்டம்.

## 'மதமாற்றம்'

விமர்சனம்

அடுத்த வாரம்

# பதினெரு நாட்களில் தயாரான 'முகராசி'

## தேவரின் புதிய சாதனை

தமிழ்த் திரையுலகில் இது வரை காலமும் யாரும் செய்யாத ஒரு சாதனையைச் செய்து முடித்திருக்கிருர், திரு. சின்னப்பதேவர்.

பதினெரு நாட்களில் ஒரு படத்தை-அதுவும் எம். ஜி. ஆரை கதாநாயகனுக வைத்து-எடுக்கப் போவதாக முதலில் அவர் அறிவித்த போது, முடியுமா அது எனப் பலர் முணுமுணுத்தனர்.


ஆனல் சொன்னதை அப்படியே நிறைவேற்றிவிடும் தேவர், இதையும் அப்படியே செய்து விட்டார். சனவரி 28ம் திகதி 'முகராசி' படத்தைத் தயாரிக்க, வாகினி ஸ்டுடியோவில் ஆரம்பித்த அவர் பெப்ரவரி 9ம் திகதி படத்தை முடித்து விட்டார்.

எம். ஜி. ஆரையும்ஜெமினி கணேசனையும் 'முகராசி'யில் சேர்த்து வைத்த தேவர் ஓய்வொழிச்சலின்றி உழைத்து இந்தச் சாதனையை நிலைநிறுத்தியுள்ளார்.

'முகராசி' படம் இப்போது தமிழ் நாட்டுத் திரைகளில் திரையிடப்பட்டிருக்கிறது.



பார்த்தால் பணக்காரராகத் தோன்றும் இவர் பார்த்தவர்கள் சிரிக்கும் நிலையில் ஏன் இப்படி அலங்கோலமாகக் காட்சி தருகிருர்? இப்பொழுது 2-வது வாரமாக என்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளில் வெற்றிப்பவனி வந்துகொண்டிருக்கும் 'என்ன தான் முடிவு' படத்தில் வி. கே. ராமசாமியின் ஒரு தோற்றம்.



''அனுபவம் சிறிதுமில்லாத இந்தப் பெண், நட்சத்திர நடிகனை என்னை-இந்த பரந்த விளையாட்டரங்கில் பலர் முன்னிலையில்-கட்டியணைக்க வருகிருளே என்ன செய்யலாம்? எப்படித் தடுக்கலாம்? இவளின் விருப்பத்திற்கு இடங்கொடுப்பதா?'' என்று நாகேஷ் நினைக்கிருர் போலும். எதற்கும் சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கும் 'காக்கும் கரங்களை'ப் பார்த்துவிட்டால் விடயம் புரிகிறது.

## பத்திரிகை நிருபராக எம். ஜி. ஆர்.

சரவணு பிலிம்ஸ் திரு. ஜி. என். வேலுமணி புதிதாக தயாரித்து வரும் படமொன்றில் எம். ஜி. ஆர். ஒரு பத்திரிகை நிருபராக நடித்து வருகிருர்.

அசோகன், ராதா, நாகேஷ் மற்றும் பலர் நடிக்கும் இப்படம், மே மாதம் திரைக்கு வருமாம்.

## சிவாஜி கணேசன் ரஷ்யா போகிருர்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அடுத்த மாதம் ரஷ்யாவுக்குச் செல்லவிருக்கிருர். அங்கு நடைபெறவிருக்கும் சினிமா விழாவொன்றில் அவர் கலந்து கொள்ளுவார்.

சிவாஜி, சாவித்திரி நடித்த 'நவராத்திரி' படம் ரஷ்ய சினிமா விழாவில் இடம் பெற விருக்கிறது. சாவித்திரியும் உடன் செல்லுவார் என்று தெரிகிறது.

## எம். ஜி. ஆர். மன்றத்தை ஜெமினி திறந்தார்.

சமீபத்தில் சென்னையில், எம் ஜி ஆர். கலைரசிகர் மன்றத்தை காதல் மன்னன் ஜெமினி கணேசன் திறந்து வைத்துள்ளார். இந்த விழாவில், சென்னைமேயர், திரு. இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்கள்.

## மக்கள் குரல்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகளைக் கருவாகக் கொண்ட குறு நாவல், சிறு கதைகளை நன்ருக வாசித்திருக்கும் தரமான வாசகன் ஒருவனுக்கு, ஆனந்த விகடனில் வரும் முத்திரைக் கதைகளைக் காட்டினல், இவைகளை ஏன்தான் எழுதுகின்ருர்களோ என்றுதான் எண்ணுவான் ஆனந்த விகடனில் வரும் ஒரு சில முத்திரைக் கதைகள் நல்ல தரமானவை தான். அதற்காக, பொதுவாக ஆனந்தவிகடன் முத்திரைக் கதைகள் எல்லாம் தரமானவை, அந்தத் தரத்தை யாவது ஈழத்துச் சிறுகதைகள் அடையவில்லையென்று சொல்வதைப் போல அறியாமை வேறென்ன இருக்கின்றது.

அடுத்ததாக, 'யதார்த்தம்', 'மண்வாசனை' என்ற கோசம், (ஈழத்து இலக்கியத்தை) நம்மைப் பின்னுக்கியே இழுத்துவிட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்ருர். இது எப்படியென்ருல், பெண்ணின் அழகை அவளின் வட்ட முகமும், கயல் விழிகளும்தான் குறைவுபடுத்துகின்றன என்பதைப் போலவாகும். எது தேவையோ அது கூடாதென்கிருர் தேவன் அவர்கள்.

வாழ்க்கையின் யதார்த்தத்தைக் காட்டுவது இலக்கியமென்ருல், யதார்த்தமில்லாமல் என்ன இலக்கியம்? மண்வளச் சொற்கள் இல்லாமல் கதைகள் எழுத முடியுமென்ருல் அது தேவனுல்தான் முடியும். அப்படியென்ருல் அது இலக்கியமாகாது இலக்கியமில்லை. இலக்கியமாக ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

ஈழத்து இலக்கியம், எந்த வகையிலும் இந்திய நாட்டு இலக்கியத்திற்குக் குறைவுபடவில்லை. குறைந்தும் விடாது. அப்படியான தாழ்வெண்ணம் வளரவும் விடக் கூடாது.

—வள்ளி,

கொழும்பு-13.

கல்வியே கருந்தனம்

# சடங்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டியை நடத்தத் தெரியாது. ஜெனிங்ஸ் போனதோடை எலலாம் மண்ணுப் போச்சுது' என்று தன்னுடைய அபிப்பிராயத்தைத் 'திருவாய் மலர்ந்தருளி'யிருக்கிறார்.

தனிமை[illegible]ய சுகிக்கும் இயல்பினர[illegible]ன செந்தில்நாதனுக்குச் சனநடமாட்டமில்லாத இடத்திற்குப் போகத்தான் விருப்பம். ஆனல், கடலுக்குள் இறங்க வேண்டுமென்று ஸ்ரீகாநதன் தகப்பனுடைய கையைப் பிடித்து இழுக்கின்ருன். மூவருயாக மணலுக்குள் இறங்கிக் கடலேநோக்கிப் போகின்றனர். அவர்கள் கணுக்கால் வரை நனையக்கூடிய கடலுக்குள் இறங்கிக் கிழக்குப் பக்கமாகவே நடக்கின்றனர். பொங்கிய பாலின் நுரை சரித்து, கரை அளைந்து பின்னேகும் அலைகளின் வேடிக்கையைக் குழந்தைகள் இரசிக்கிருர்கள்.

'மெயில் பஸ் போற நேரமல்லோ எங்கை இன்னும் காணேல்லை ...ஓமோம், மறந்து போனன்...இன்டைக் சனிக்கிழமையல்லோ...கட்டுக் கிடையா' என்று நினைத்துக் கொள்ளுகின்ருர். சந்தியில் கடற்கரை மணலில் ஐந்தாறு தென்னை மரங்களைச் சுற்றி 'அலம்பல்' வேலியடைத்து வைத்திருக்கிருர்கள். 'உதுகள் கள்ளுக்குக குடுக்கிற மரங்களாக்கும்'

'சாந்தினி! கவனம்...தம்பியைக் கவனமாப் பாத்துக் கொள். உன்னுக்கை இறங்க விட்டிடாதை. பேந்து கொய்யாவன்ரை கோவந் தெரியும் தானே?'-கரையில் நின்று சிப்பிகளும் சோவிகளும் பொறிக்கிக் கொண்டிருக்கும் பிள்ளைகளை எச்சரிக்கை செய்துவிட்டு, செந்தில்நாதன் மணலிலே போய்ச் சற்றே சரிகின்ருர்.

இந்தக் கடற்கரையைப் போல அழகான கடற்கரை இலங்கையில்-ஏன், உலகத்திலேயே-இல்லையென்பது செந்தில்நாதனின் அபிப்பிராயமாகும். ஒரே அகலத்திற்கு மணல் பரப்பியிருக்கும் முற்றம்போல அவருடைய சிறுவயது முதல் பழக்கப்பட்டுப் போன இடம். 'பெரிய அண்ணன்கள்' கொக்குக் கொடிகளையும், ஆறுமுழம்-எட்டு முழம் என்று அப்பத் தட்டிகளையும் ஏற்றும் பொழுது, கடற்கரையில் எறிக்கும் வெயில் முழுவதையும் குளித்தும் குடித்தும், சாப்பிடவும வீட்டிற்குப் போகாமல், நேரங்கழித்துப் போய் பெத்தாச்சிக் கிழவியிடம் ஏச்சுகளும், அடிகளும் எத்தனையோ தடவை பெற்றிருக்கின்ருர். வளர்ந்த பிறகு செந்தில்நாதனே கொடி ஏற்றி, வீட்டை கொண்டு வந்து கட்டி, இராக் கொடியாகவும் பறக்கவிட்டிருக்கிருர். பழைய நினைவுகள் அவருடைய ெ[illegible]ஞ்சிலே பசுமையாக நெளிகின்றன.

'இந்தக் கடக்கரையை இன்னும் கொஞ்சம் கரிசனை எடுததால் எவ்வளவு சோக்கா வைச்சிருக்கலாம். 'யூசி' என்ன படுத்துக் கிடக்குதே? அவையா செய்யலாமே?... உந்த நீச்சல்குளம் கட்டுறதுக்கு அத்திவாரக்கல் நாட்டிருக்கிருங்கள்... ஓம், கொஞ்சம் கல்லையும் எடுத்துப் பொறுக்கிப் போட்டிருக்கிருங்கள்....ஏதோ காணிவலும் வைச்சாங்களே காசு சேர்க்க...பேந்து சேர்ந்த காசை என்ன செய்திட்டினமோ?...'

'பாருங்கோவன் காத்து என்ன சோக்கா வீசுதெண்டு ...மனசாரப், 'பென்சன்'எடுத்துக்கொண்டு பேசாமல் வந்திருக்கச் சோக்கான இடந்தான் எங்கடை ஊர்...என்ன தான் படிச்சவங்கள் கன பேர் இருநதாலும, எல்லாரும் எரிச்சலும் பொருமையும் புடிச்சவங்கள்...'

கல்யாணமான புதிதில், ஒருநாள் அன்னலட்சுமியுடன கடற்கரைக்கு வந்த நிகழ்ச்சி அவருடைய நினைவிற்கு வருகின்றது. செந்தில்நாதனுடன் பகையென்று சொல்லக் கூடியவர்கள் எவருமிலர். இருப்பினும், அவர்களிருவரும் குஷாலாகப் பேசிக் கொண்டிருந்த பொழுது, அவர்களுக்கு மத்தியிலே மூன்று நான்கு கற்கள் வந்து விழுந்தன. அன்னலட்சுமியைத் தனியே விட்டுவிட்டுக் கல் எறிந்தவர்கள யாரென்று செந்தில்நாதன் போய்ப் பார்க்கவில்லை. 'வம்பங்கள், காடை-கடைப் புளியள்தானே உந்த வேலையைச் செய்வாங்கள்...? பேந்தேன வீண் கொழுவல்...' என்ற நினைப்பில், மனைவியுடன் எழுந்து வீட்டிற்கு வந்துவிட்டார- அதற்குப் பிறகுஇன்று வரை அன்னலட்சுமி அவருடன் 'சோடி'யாகக கடற்கரைப் பக்கம் வந்ததில்லை.

'நல்லா நேரஞ் செண்டு போய்ச்சு. விட்டை போவம் அம்மா தேடுவா' என்று கூறியபடி பிள்ளைகளை 'ரோட்'டுக்கு ஏற்றி 'லைற்' வெளிச்சத்திலே, அவர்களுடைய கால்களில் ஒட்டியிருந்த மணலை எல்லாம் தட்டிச் சுத்தப்படுத்துகின்ருர்.

நடக்கத் தொடங்கியதும், 'ஐயா எனக்கு விசில்' என்று கடைத்தெருவழியே போக வேண்டுமென்பதை ஸ்ரீகாந்தன் ஞாபகப்படுத்துகின்ருன்.

கடைத் தெருவில் சாந்தினிக்கும், மகனுக்கும்இரண்டு 'விசில்' கள் வாங்கிக்கொடுத்தார். 'மாலினி கடுக்கண்டவள். அவளுக்கு வேண்டாம். ரோகினிக்கு ஊதவும் தெரியாது' என்ற எண்ணத்திலே தானை வீட்டிலுள்ள பிளளைகளுக்கு 'விசில்' வாங்கவில்லை.

கடைத் தெருவில் வைத்து அன்னலட்சுமியின் நினைவு வரவே அவளுக்காக அவர் ஒரு பீடாவும் வாங்கிக் கொண்டார். மொத்தமாக இருபத்தைந்து சதம் துண்டு விழுந்து விட்டது. இருப்பினும், அவர் கவலைப்படவில்லை. அன்னலட்சுமிக்கு பீடா நல்ல விருப்பம். பீடா போட்டு, சொண்டுகள் சிவந்திருக்க அவள் சிரிப்பது ஒரு வடிவுதான். 'உங்கினை உள்ளவை சில பேருக்குள்ளதைப் போலை திரிவலைப்பல்லைப் போலையே அவளின்ரை பல்லு. பெரும் சீதணத்துக்காக உவையளைக் கட்டிக் கொண்டு பெண்சாதிமார் எண்டு வெட்கமில்லாமல் கூட்டித் திரிவினம். உவையளைக் கண்டுதானே பனங்கொட்டை சூப்பினதாலையும் முருங்கைக்காய் காந்தினதாலையும் தான் யாழ்ப்பாணத்தாங்களின்ரைபல்லுகள் முன்னுக்கு நீண்டு கிடக்கு எனறு பகிடிபண்ணுறவங்கள். அன்னலட்சுமியின்ரை பல்லைப் பாத்து எங்கை அப்பிடி ஒருவன் சொல்லட்டும் பாப்பம்'— இப்படியான நினைவுகள் நெஞ்சிலே அலைமோத, அவர் வீடு மீண்டார்.




# மனமாற்றம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

'கொட்டிலில் ஆட்களை அடுக்குப் பண்ணி வைத்து விட்டு என்னைக்கூட்டிக் கொண்டுபோய் அடிக்கப் போகிருஞ?' என்றும் ஒருகால் எண்ணினுன் கந்தசாமி. இருந்தும் அவனுடைய அழைப்பைத் தட்டிக் கழித்துச் செல்ல அவனுடைய சுயமரியாதை இடம் அளிக்கவில்லை. 'அளவுக்கு மிஞ்சினல் தன்னுடைய மடியிலிருக்கிற ஆயுதத்தால் முண்டுகிறவனைத் தீர்த்துக்கட்டவேண்டியதுதான்' என்று திடப்படுத்திய எண்ணத்துடன் சினிக்குட்டியுடன் செல்ல இசைந்தான்.

இருவரும் கொட்டிலை நோக்கி மௌனமாக நடக்கின்றனர்.

கந்தசாமிக்கு இருப்பதற்கு ஒரு பலகை போடப்பட்டதும் ஒரு போத்தல் 'தென்னை' பரிமாறப்படுகிறது.

'வெறி ஏத்திய பின் நொருக்கப் போறுங்களா? ச்ச, அப்பிடியெண்டால் சினிக்குட்டியையும் சின்னப்பையன் ஒருவனையும் தவிர வேறொருத்தரையும் காணவில்லையே கொட்டிலில், சில வேளை ஆட்களை மறைத்து வைத்து விட்டு வேஷம் போடுகிருஞசினிக்குட்டி? எதற்கும் பார்ப்பம்' என்று எண்ணிக் கொண்டே ஒரு போத்தல் தென்னங்கள்ளின் கடைசிச் சொட்டையும் உருசி பார்த்தான் கந்தசாமி!

'இன்னொரு 'தென்னை' கொண்டு வந்து தம்பிக்குக்குடடா' என்று ஆணை பிறக்கிறது சினிக்குட்டியிடமிருந்து.

'ஐயோ வேண்டாம் சினிகுட்டி'

'ச்ச, ச்ச அப்ப அரை கொண்டந்து வாரடா'

கடைசியாகக் கொடுக்கப்பட்ட 'அரையும்'முடிந்ததும் மடியிலிருந்து ஒரு ரூபா நோட்டை எடுத்து சினிக்குட்டியிடம் நீட்டினுன் கந்தசாமி.

'ச்சீ ச்சீ இதென்னகாசுக்காகவா உம்மை வலிஞ்சு கூட்டிக் கொண்டு வந்தனுன். அண்டைக்குப் பட்டணத்திலை நீர் செய்த மரியாதையை என் உயிர் உள்ள வரைக்கும் மறப்பேனு? என்ரை மானத்தைக காப்பாற்றியது மல்லாமல், நான் சாபபிட்ட காசையுமல்லே குடுத்திட்டு வந்தனீர். உம்மைப் போலை பத்துப் பேர் ஒவ்வொரு அயலிலும் இருந்தால், இநதச் சாதி என்கிற வியாதி தமிழற்றை மததியிலையிருந்து பாத்துப் பாத்து ஓடாதே...?

கந்தசாமிக்கு விசயம் இபபோதுதான புரிந்தது. தேனீர்கடை முதலாளிகு சினிக்குட்டியைக் குறிப்பால் காட்டி 'அந்த ஆளுக்கு நல்ல சாப்பாடு குடுத்து அனுப்புங்கோ பிறகு வாறன்' என்று தான் கூறியதை அவர் தவருகப் புரிந்து விட்டார் என்ற உண்மை புலனுயிற்று. 'அந்தத்தவறும்நன்மையையே அளித்திருக்கிறது'என்று எண்ணிய கந்தசாமி.

'இனி மேலெல்லாம் சினிக்குட்டி, நாங்கள் பழைய பிடியைக் கை விடாவிட்டால் எங்கள் சமூகத்திற்குவிமோசனமே இல்லை. என்ரை மனமாற்றத்திற்குக் காரணம் உன்ரை அன்பு, அன்பாலை என்னதான் சாதிக்க முடியாது சொல்லுபாப்பம் சினிக்குட்டி' என்றதும்,

'அது சரிதான்' என்று ஆமோதித்தான் சினிக்குட்டி.

(யாவும் கற்பனை)

# உயிர் வாழும் நாளில்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தலை ஒரு முடிவுகளுள்ளாக்க முடியுமா? 'நான்' என்பதோயனத்தில் பதிந்துபோன ஞாபகம்; அப்படியிருந்தும அந்த 'நான' ஒரு முடிவை அடையுமா? பிணியாலும், விபத்தாலும், அல்லமல நீங்களும நானும் இங்கே அமாந்திருக்கும் போதே அந்த முடிவைத் தெரிந்து கொள்ள முடியுமா? அப்படியானல் இறப்பைப்பற்றியும், இறவா நிலைபற்றியும், இறந்த பிறகு ஒரு உலகம் இருக்கிறதா என்பதும் போன்ற மதியீனமான கேள்விகளை ஒருபோதும் கேட்க மாட்டீர்கள்.

'அப்போது அந்தக் கேள்விகளுக்குரிய விடைகளையும நீங்களே தெரிந்து கொள்வீர்கள். ஏனெனில அறிவுக்கெட்டாதது அங்கே நித்தியமாகி விடும். அப்போது ஜீவ-மரண பயமும், சந்தேகத்திற்கிடமான மறு அவதாரங்கள் பற்றிய பல்வேறு அச்சங்களும், மூப்பு வருகிறதே என்ற பயமும், உலகிற்குப் பாரமாக உள்ளோமே என்ற பீதியும், தனிமைப் பயமும், எதிர்பார்த்து வாழும் பயமும் ஓர் முடிவடைவதை அறிவோம்.

'இவைகள் வீண்வார்த்தைகளன்று. எப்போது மனமானது அதன் தொடர்ச்சியான சிந்தனையை அற்றுச் சும்மாயிருக்கிறதோ அப்போது அறிதற்கரியது வந்தடைகிறது.'

(ஜே. கிருஷ்ணமூர்த்தி ஆங்கிலப் பேச்சு ஆகஸ்ட் 21-1955).

மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள இந்தக் கருத்து அழிவில்லாமையையும், இறப்பு என்பது என்ன என்பதையும் தெளிவாக்குகிறதல்லவா! பரம ஞானிகளின் மறைவு சாதாரண மக்களைப் போல இறந்து போவதன்று என்பதும் உயிர்வாழும் போதே ஞானிகள் இறப்பையும அனுபவிப்பர் எனபதும் இங்கு காணுதல் வெளிப்படை.

(வளரும்)

# புதிய சமாதான நீதவான்



திருநெல்வேலித் தமிழரசுக்கட்சிக் கிளைத் தலைவரும், தமிழியக்கங்களின் முன்னேடியும், தமிழரசுக்கட்சியின் நல்லூர்த் தொகுதி அச்சாணிகளில் ஒருவருமான திரு. தம்பாபிள்ளை இராமுப்பிள்ளை அவர்கள் இம்மாதம் இரண்டாம் தேதி, யாழ்ப்பாண மாவட்ட நீதிபரிபாலனப் பகுதியின் சமாதான நீதிபதியாக, மாவட்ட நீதிபதி திரு. இராஜேந்திரா முன்னிலையில் சத்தியப்பிரமாணம்செய்துகொண்டார்.

மலாயாவில் புகைவண்டி நிலையத் தலைவராகக் கடமையாற்றிய இவர் 1949ம் ஆண்டு ஓய்வுபெற்று இலங்கை திரும்பிய நாள் தொட்டு தமிழரசுக் கட்சியின் தீவிர பங்காளிகளில் ஒருவரானுர். திருநெல்வேலிப்பகுதி கோப்பாய்த் தொகுதியின் கீழிருந்த காலத்தில் திரு. இராமுப்பிள்ளை அமரர்வன்னியசிங்கம் அவர்களின் வலதுகரமாகத் திருநெல்வேலியில் விளங்கினுர்.

வயது 62 ஆயினும், வற்ருத இளமை வெழுச்சிமிக்க இவர் தமிழரசுக்கட்சியின் விடுதலைக் கிளர்ச்சிகளின் போது முதலணியில் நின்றவர்; நிற்பவர். இதனுல் இன்னல்பல ஏற்றவர்; தியாகத்தீயில் நோறறவர். 1956ம் ஆண்டு தமிழரசுக்கட்சியினர் காலிமுக மைதானத்தில் நடாத்திய அறப்போரின் போது தாக்குணட தமிழ் நெஞ்சினர். 1961ம் ஆண்டு அறப்போரின் போதும், அதற்கு முன்னரும் இயக்கப் பணிக்கும், இதரபணிகளுக்கும் செல்வத்தை வாரியிறைத்த திருநெல்வேலியின் பாரியாகிய இவர், சமூகத் தொண்டில் சளைக்காதவர்.

1961ம் ஆண்டு அறப்போரைத் தொடர்ந்துவந்த அவசரகாலச்சட்ட இராணுவ அட்டூழியத்திற்கு இவரது இல்லமும் இலக்காகியது. இதனுல இவரது இலட்சியதாகம் அதிகரித்தது.

அன்னருக்குக் கிடைத்த இச் சமாதான நீதிபதித் தகைமை அவர் தம்சேவைத் தளத்தை விரிவுபடுத்தஉதவுமாகையால், இதனுல் திருநெல்வேலிப் பொதுமக்கள், குறிப்பாக ஏழை எளியவர்கள், ஒரு தொணடுளத்தின் துணையைப் பெறுகின்றனர்.

# நாடகப் போட்டி முடிவுகள்

இலங்கை வானொலித் தேசிய ஒலிபரப்பு (தமிழ்) இளைஞர் மன்றத்தினுல சென்ற மாதம், நடாத்தப்பட்ட நாடக எழுத்துப் போட்டி முடிவுகள் இவ்வாரம் வெளியிடப்பட்டுள்ளன.

முதற் பரிசு: 'நட்பின் சுடர்' ஆ. மகாதேவன், குரும்பசிட்டி தெல்லிப்பளை.

இரண்டாவது பரிசு: 'தீண்டாமை வேண்டாமே' ச. இராஜம் புஸ்பவனம், அடம்பன்.

மூன்றும் பரிசு: 'கடன்' ஞா. பவுல் அந்தோனி கொழும்பு-9.

பாராட்டுப் பெறும், நாடகங்களும், எழுதியோரும்: 'உத்தமி உமா' சி. யோகேஸ்வரி சுழிபுரம், 'குடும்ப விளக்கு' எஸ். ஆமீனுபேகம் கொழும்பு-12, 'வரவும் பிரிவும்' தி. நித்தியானந்தன் தெல்லிப்பளை, 'புதிர்' நவாலியூர் த. பரமலிங்கம் கொழும்பு-13, 'பாசத்தின் விலை', 'பணமா, பாசமா' (இரண்டு நாடகங்கள்) வெ. நடராசா நோர்வூட், 'அன்பா அது எங்கே', ஜோதிபாய் மாணிக்கம்கந்தப்பளை, 'பாவ மன்னிப்பு' க. சிவபாலன் கொழும்பு-13, 'அவள் அறிந்துகொண்டாள்' தங்கம் சூரிய நாராயணன் கொழும்பு-14, 'பரிசு' வாணி தளையசிங்கம் வண்ணை பண்ணை 'அன்பின் வலிமை' இ. சரஸ்வதி ஸ்பிரிங்வில்லி, 'ஒரே முடிவு', களிக்கோ' கொழும்பு-12.




முழு நீள அறிவியல் விசித்திரக் கதை

# மண்ணிற்கு மேலே...

மறுநாள்... ஸ்டெலின், ஜோர்ஜின் வீட்டை அடைந்தபோது ஜோர்ஜும் அவனுக்காகவே காத்துக் கொண்டிருந்தான். அவனுடைய முகம் மகிழ்ச்சி அலைகளினால் நிரம்பியிருந்ததைக் கொண்டு ஏதோ ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சி நடந்துள்ளதென்பதை ஸ்டெலின் ஊகித்துக் கொண்டான். ஸ்டெலின் கேட்பதற்கு முன்னமே ஜோர்ஜ் "துப்பு அகப்பட்டு விட்டது..." என்றான்.

"என்ன துப்பு அகப்பட்டு விட்டதா" என்று வியப்புடன் கேட்டான் ஸ்டெலின் "ஆம் அகப்பட்டு விட்டது. அன்று அந்த அதிகாரி ஜீப்

அரியாலையூர் த. இந்திரலிங்கம்

பின் இலக்கத்தைச் சொல்லி, அதை எங்கு கண்டாலும் தனக்குப்போன் பண்ணும்படி கூறினாரே! அந்த இலக்கத்தையுடைய கார் இன்று 'ஹோட்டல் ஒலிம்பிக்' குள்ளிருந்து வெளியே சென்றதைக் கண்டேன்... ஆனால் போன் பண்ணநினைப்பதற்கு முன் அது வெகு வேகமாகச் சென்று என் கண்களிலிருந்து மறைந்து போய் விட்டது' என்றான், ஜோர்ஜ் ஸ்டெலின் சிந்தித்தான்:—'டோக்கியோ நகரிலிருந்து எச்சரிக்கைக்கடிதம் வந்திருக்கிறது. அதே நகரிலுள்ள ஹோட்டலிலிருந்து, தேடப்படும் இராணுவ ஜீப்பை யாரோ கொண்டுசெல்கிறார்கள்...எல்லாமே இந்த டோக்கியோவினுள்ளே தான் இருக்கின்றன' ஜோர்ஜிடம் சாயங்காலம் வருவதாகக் கூறி விட்டுப் பொலிஸ் ஸ்டேசனிற்கு விரைந்தான் ஸ்டெலின். அந்த அதிகாரி அவனைக் கண்டதும் ஆவலுடன், 'வேறு ஏதாவது சம்பவம் நடந்ததா?' என்று கேட்டார். 'நிறைய இருக்கின்றன' என்றுகூறிய வண்ணம்அத்தக்கடிதத்தை எடுத்துக் கொடுத்தான் ஸ்டெலின். பின்பு,நடந்த முழு விஷயத்தையும் விளக்கினான். அந்த அதிகாரி யாவற்றையும் கவனமாகக் கேட்டார். அதன் பின்னர் ஸ்டெலினின் ஸ்கூட்டரை ஸ்டேசனிலேயே வைத்து விட்டு'ஹோட்டல் ஒலிம்பிக்'கை நாடிச் சென்றான்.

'ஹோட்டல்ஒலிம்பிக்'வீதியிலே நடமாடுவதன் மூலம், பிரஸ்தாப ஜீப்பை மீண்டும் காணலாம் என்ற எண்ணம் அவன் மனதிலே இருந்தது' அவன்வீதியோரமாக நடந்து கொண்டிருந்த போது திடீரென்று ஒரு ஜீப் அவனருகே வந்து அவனை உராய்வது போன்று நின்றது. அதனுள்ளிருந்த ஒருவனது கை, சைலன்ஸர் பொருத்திய துப்பாக்கியொன்றை அவனை நோக்கிக் குறிபார்த்தது.மறு கை 'உள்ளே ஏறு!' என்று சைகை காட்டியது. ஸ்டெலின் சுற்று முற்றும் பார்த்தான். மின்னல் போன்று விரைந்து செல்லும் டாக்சிகளையும் கார்களையும் தவிர வீதியில் நடமாடுவோரைச் சமீபத்திற் காணோம். பயத்துடன் ஜீப்பினுள் ஏறினான்.உள்ளே அவனுக்குத் தெரிந்த இன்னொருவர் கட்டிப்போடப்பட்டிருந்தார். அவர் யாரென அறிய முன்னமே, 'குலோரபார்ம்' தோய்த்த கைக்குட்டை முகத்தில் அழுத்தப் பட்டது. புலன்கள் மறைந்தன.

'இது பூமியிலே விளைந்ததல்ல! பூமியின் மண் வளம் இப்படிப் பட்ட வைரக்கற்களை உற்பத்தி ஆக்கக்கூடியதல்ல! இது செயற்கைமுறையிலே செய்யப் பட்டிருக்க வேண்டும்! அல்லது வேறு கோள் களிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்! ஆனால் செயற்கை முறையில் இத்துணை சிறந்த, பெரிய வைரக்கற்களை ஆக்க முடியாது! அதைவிட இது,பூமியிலே இதுவரை கிடைத்த வைரங்களை விட இதுமிக உறுதியாகப்—பலமாக—இருக்கிறது. பிரிட்டிஷ் ராணியின் மகுடத்தை அலங்கரிக்கும் வைரக்கல் கூடஇதனிடம் பிச்சைவாங்க வேண்டும்... கோஹினூர் வைரமும் இதனிடம் தோற்றுப் போய் விடும்...' என்றார் விஞ்ஞானி நியூலாங்.

'அப்படியானால் இது பூமியிலிருந்து பெறப்பட வில்லை! என்று சொல்கிறீர்களா?' என்று கேட்டார் அந்தத் துப்பறியும் நிபுணர். (அவர்தான் இது வரை நமது கதையில் உலாவியவர்)

'என்னைப் பொறுத்தவரையில் அது தான் பதில்! இந்த வைரத்தைச்சுற்றி ஒருமாபெரும் சதி நடக்கிறது என்று எனது உள்ளுணர்வு கூறுகிறது...இத்தகைய வைரக் கல்லை அசட்டையாக விட்டு விட்டுப் போபவனும், சட்டைப் பையில் வைத்துக் கொண்டு திரிபவனும் எவ்வளவு பெரிய பணக்காரனாக இருக்க வேண்டும்! இந்த வைரக் கல்லை விலைமதிக்க முடியாது! அதாவது இதை வாங்கக் கூடிய செல்வந்தன் உலகிலேயேஇருக்கமுடியாது ஆதலினால் இதனைக் கூறுகளாக்கிப் பட்டை தீட்டி விற்றால் தான் எவராவது வாங்க முடியும் !இல்லாவிடில் இதை மேசையிலே 'பேப்பர் வெயிட்' டாக வைத்துக் கொள்ள வேண்டியது தான்! வேறு பிரயோசன மில்லை... இது உங்களுக்கு எப்படி கிடைத்ததென்பதை விளக்கினால்,என்னால் இன்னும்சிறிது தகவல் தர முடியும்...' என்றார் நியூலாங். அவருடைய எண்ணமெல்லாம் அந்த வைரக் கல் இவருக்கு எப்படிக் கிடைத்தது என்பதிலேயே சுற்றிச் சுற்றிச் சுழன்றது. ஆனால் அந்தத் துப்பறியும் நிபுணர், 'ரகசியம்... பரம ரகசியம்...' என்று கூறினாரே தவிர உண்மையை எள்ளளவும் வெளியிடவே விரும்பவில்லை. என்றாலும் அவரது உள்ளம் அதுபற்றியமுழுவிவரத்தையும் அறிய ஆவல் கொண்டது எனவே ஒரு தாளையெடுத்து அதிலே ஒரு ஒப்பந்தம் எழுதினார் தான் சொல்பவற்றை விஞ்ஞானி வெளிவிட்டால் அவரது சொத்துக்கள் பறிமுதல்செய்யப்படும் என்பதே அவரது ஒப்பந்தம். சாட்சியாக இரு விஞ்ஞானிகள் கையெழுத்திட்டனர். பிறகு துப்பறியும் நிபுணர் விஞ்ஞானியை நோக்கி, 'இந்த வைரக்கல் செவ்வாயிலிருந்து கொண்டு வந்திருக்கப்படலாம், அல்லவா!' என்று கேட்டார்.நியூலாங் அதை எதிர் பார்க்கவில்லை. திடுக்கிட்டுத் துப்பறியும் நிபுணரை நோக்கினார். பின்பு,'என்ன கூறுகிறீர்கள்? செவ்வாய் மண்டலத்திலிருந்தா? மனிதன் இன்னும் சந்திரனுக்கே கால் வைக்கவில்லையே! பின்பு எப்படிச் செவ்வாய்க்குபோகமுடியும்? அதுவும் அங்கிருந்து வைரம் எடுத்துக்கொண்டு வருவதா? பைத்தியக் காரத்தனமான பிதற்றல்!' என்று அடுக்கடுக்காக துப்பறியும் நிபுணரின் பேச்சுக்கு கண்டனக் கணைகளை அடுக்கினார்.

அதைக் கேட்டதும் அவர் கட கடவென அலட்சியமாகச்சிரித்தார். 'உமது விஞ்ஞான மூளை அதிவேகமாக வேலைசெய்கிறது, மிஸ்டர்... அந்த வேகத்திலே கடந்த கால நிகழ்ச்சிகளை மறந்து விடுவீர்கள்... தயவு செய்து கடந்த கால நிகழ்ச்சிகளை நினைவு படுத்திப்பாருங்கள்... எல்லாம் நிச்சயமாக விளங்கும்...' என்றுபுதிர்போடுவது போலப் பேசினார், அவர். 'கடந்த காலமா...? நினைவு படுத்துவதா... ஒன்றுமே புரிய வில்லையே' என்று குழம்பினார், நியூலாங்.

'புரியும் காலம் விரைவில் வரும்... ஒப்பந்தம் ஞாபகமிருக்கட்டும்' என்றுகூறிவிஞ்ஞானியின் மண்டையைக் குழப்பி விட்டு வைரக் கல்லுடன் வெளியேறினார் அந்தப் பிரபல துப்பறியும் நிபுணர்.




## குயிலே நீ பாடு

— ஈழ பாரதி —

சோலையில் தென்றல் சுரந்திடும் குளிரில்
சுற்றிக் குயிலே தமிழ் பாடு.
வேலையின் கரங்கள் விழுந்துனை வாழ்த்த
வீரத் தமிழன் புகழ் பாடு.
காலையிற் செம்பொற் கதிரோன் விழிக்க
கன்னித் தமிழிற் கவிபாடு.
பாலகர் நாங்கள் பைந்தமிழ் தன்னைப்
பயின்றிட நீஓர் பா பாடு.

பொன்னிதழ் அவிழப் பூமணம் கமழ
புவியினில் எங்கும் தேன் பாய
இன்னல் அகன்று இன்பம் மலர்ந்து
எங்கும் தமிழின் புகழ் வாழ
கன்னற் சாறும் கனியின் சாறும்
கலந்துன் குரலின் சுவைகூட்டி
சின்னவர் எங்கள் சிந்தை கொழிக்க
செந்தமிழ்ப் பாக்கள் தினம் பாடு.

அங்கம் குளிர்ந்து அழகுக் கமலம்
அமுதம் தெளித்து நகை தோய
தங்கக் கயத்தில் அன்னம் குளித்து
தமிழின் சுவையை மகிழ்ந்தூய
பொங்கித் தண்நறுப் புன்னகை சிந்தி
பூமித் தாயின் மடி தவழ
சின்னப் பாலர் செந்தமிழ் பாட
சின்னக் குயிலே நீ பாடு.

## புத்த தர்மம்

என் மனதில் கொந்தளிப்பு ஏற்படும் சமயத்தில் எல்லாம் நான், புத்த பிரானை நினைத்துக் கொள்கிறேன். படபடப்பு அடங்கி உள்ளத்தில் சாந்தி நிறைகிறது. சண்டை போட்டுக் கொண்டு நாம் சாந்தி காண முடியாது. புத்தர் காட்டிய வழியில் சென்றால்தான் தான் மனித குலம் உய்ய முடியும். மக்களின் மனம் மாறும்வரை உலக நிலைமை அபிவிருத்தியடையாது. புத்தர் வழியைப் பின் பற்றினால் தான் மக்கள் மனம் மாறும்.

—நேரு.

## கடவுள்

மனிதன் சிற்றறிவு உடையவனாதலால், கடவுளைப் பரிபூரணமாகச் சிந்தித்து விட முடியாது. ஆதலால் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தெரிந்த சிறந்த முறையில் சிந்திக்கலாம். சிந்தனை மட்டும் உள்ளத்தை தூய்மை செய்வதாகவும், உயர்த்துவதாகவும் இருக்க வேண்டும்.

—காந்தியடிகள்.

தொகுப்பு:—
வி. கே. மூர்த்தி
மட்டக்களப்பு.

## அறிஞர் சிந்திய அமுதத்துளிகள்

மனிதன் சுதந்திரத்தோடேயே தோன்றுகிறான். ஆனால் எங்கும், எத்துறையிலும்அவன் அடிமையாகவே வாழ அவனை அடிமைத் தளைகள் அழுத்திக் கொண்டிருக்கின்றன. அதைத் தான் நாம் பார்க்கின்றோம்.

—ரூஸோ.

எத்துறையிலும் எனக்கு வேண்டியது சுதந்திரமே. சுவர்க்கமே எனக்கு கிட்டினாலும் சரி அங்கும் எனக்கு சுதந்திரம் தான் வேண்டும்.

—டிரைடன்.

அறிவு நிறைந்த சூழ் நிலை கொண்ட அடிமை வாழ்வை விட மாசு படிந்ததாயினும் சரி, சுதந்திர வாழ்வே மேலானது.

—காந்தி.

அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் மக்கள் தம் விவகாரங்களை இலகுவாகவும், நிலையான பலன் தரத் தக்க முறையிலும், தீர்க்கத் தக்கபடி இருந்தால் மட்டுமே அந்நாடுஜனநாயக நாடாகும். இத்தகைய நிலை ஒரு நாட்டில் இல்லை என்றால் அது பெயரளவில் தான் ஜனநாயக நாடாகும்.

—காந்தி.

உண்மையான ஜனநாயகத்தைப்பற்றிய நம் முடைய கனவு நனவாக வேண்டுமானால், நாம் எளியதாழ்ந்த இந்தியனையும் பெரிய மனிதனோடுஒப்ப நினைத்து அவனும் இந்த அரசை நடத்துபவனென்று எண்ண வேண்டும்.

—காந்தி.

தொகுப்பு:—
"பைந்தமிழ்க்குமரன்"
பதுளை.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. தென் அமெரிக்காவில் இருக்கும் அலஸ்காவை அமெரிக்கா எந்த அரசாங்கத்திடமிருந்து பணம் கொடுத்து வாங்கியது?

2. எகிப்தியர் நைல் நதியை, தேவதையாக எண்ணி என்ன பெயர் இட்டார்கள்?

3. எந்தப் பறவை மின்மினிப் பூச்சை விளக்காகப் பாவிக்கின்றது?

4. புனல் நாடன் எந்த மன்னன்?

விடைகள் :
1. ருஷியாவிடமிருந்து
2. ஒசிரிஸ்
3. தூக்கணங்குருவி
4. சோழன.

—இரா. கைலைநாதன்

## காந்தீய வழி

எல்லாப் பிரச்சனைகளையும் பலாத்காரத்தை உபயோகிக்காமல் தீர்க்க முடியும் என்பதை மகாத்மா காந்தி நமக்குக் காட்டி யிருக்கின்றார். எமக்கு வழி காட்டிய காந்தி மகானுக்கு நாங்கள் அஞ்சலி செய்கின்றோம்.

—டாக்டர் அடினோர்.

## தமிழ் நாட்டு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

1967 தான் அரிசி அரிக்க வேண்டிய நாள்—அளவு பார்த்து சமைக்கவேண்டிய நாள், பார்த்துப் பெண் கொள்ள வேண்டிய நாள்—ஆம் பொதுத்தேர்தல் மக்கள் சிந்தித்து ஓட்டுப்போட வேண்டிய நாள்!

அந்த நாளில் நல்ல தீர்ப்பு அளிப்பீர்களானால் நாட்டுக்கு நல்லாட்சி கிடைக்கும்! அதனை மறவாதீர் இந்தப் பணியைச் செய்ய மக்களை 'வாரீர் வாரீர்' என்று அழைக்கின்றோம்!

# கொழும்பில் 3வது மாதம்

செல்லமஹால்
(கொட்டாஞ்சேனை)

மற்றும்
6 திரைகளில்


எம். ஜி. ராமசச்சந்திரன்,
ஜெயலலிதா, நாகேஷ்,
விஜயலட்சுமி, மனோகர்,
நம்பியார்
ஆகியோர் நடித்த



## ஆயிரத்தில் ஒருவன்

(ஈஸ்ட்மென் கலர்)

சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்
விரைவில் காணத் தயாராகுங்கள்
சிவாஜி கணேசன்—தேவிகா—நாகேஷ்—பாலாஜி—மணிமாலா
ஆகியோர் நடித்த



## அன்புக் கரங்கள்

---

அலைகடலென ஆர்ப்பரித்து எழும் ரசிகர்களின் அமோக பாராட்டு வெள்ளத்தில்

## ஆனந்தமாக மிதக்கும் 2வது இன்பகரமான வாரம்!

ஜெஸீமா [கிராண்ட்பாஸ்] ஈரோஸ் [பாமன்கடை] ராணி [யாழ்ப்பாணம்] ராஜேஸ்வரா [மட்டக்களப்பு] லிபேர்டி [ஹட்டன்] ஆனந்தா [கம்பளை] ஜோதி [திருமலை]

கையினில் சக்தி வேலெடுங்கள்! தமிழ்க் கலையிலுள்ள களையெடுக்கப் புறப்படுங்கள்!

பார்த்தவர்கள் வாயார மட்டு மல்ல—நெஞ்சாரப் புகழ்கின்றனர்! இதுவரை இத்தகைய கதையம்சமும் நடிப்புச் சிறப்பும் ஒருங்கே அமைந்த தமிழ்ப் படம் வந்ததில்லை என்பது அவர்களின் ஏகோபித்த தீர்ப்பு!



இது தாய்மாரும், தங்கையரும், தந்தையரும், தம்பியரும், சிறுவரும், பெரியாரும், தமிழரும் அல்லாதாரும் பார்த்துப் பயன் பெறக்கூடிய தலைசிறந்தவோர் தமிழ்த் திரைப் படம் என்று ஆயிரம் தடவை அடித்துக் கூறுவோம்!

டி. எஸ். பாலையா—ஏ. வி. எம். ராஜன—வி. எஸ். ராகவன்—வி. கே. ராமசாமி—அஞ்சலிதேவி—வசந்தி பி. ஏ.—ஜி. சகுந்தலா—நிர்மலா—கே. கண்ணன்

## என்ன தான் முடிவு

இசை: ஆர். சுதர்சனம்
பாடல்கள்: கொத்தமங்கலம் சுப்பு, மாயவநாதன்
பின்னணி: டி. எம். சௌந்தரராஜன்—சீர்காழி கோவிந்தராஜன்—பி. சுசிலா—எல். ஆர். ஈஸ்வரி

படம் பார்க்கும் ரசிகர்கட்கு ஒரு தயவான வேண்டுகோள்! இறுதி முடிவை யாருக்கும் சொல்லாதீர்கள்!
படத்தின் உயிர் நாடியே அந்த முடிவு தான்!


---

## குதூகலமான 2வது வாரம்!

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாசா [வெள்ளவத்தை] நவா [தம்பலவித்தெரு] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] மொடேன் [பண்டாரவளை]

மோடேன் [பதுளை] விஜிதா [அட்டன்]



எவிஎம் புரொடக்ஷன்ஸ்

## சர்வர் சுந்தரம்

AVM புரொடக்ஷன்ஸ்

டைரக்ஷன் கிருஷ்ணன்பஞ்சு

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1966-ம் வருடம் பெப்புரவரி மாதம் 27 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.